விலை: 30.00
Viber : 076 636 3378
பக்கங்கள் : இருபத்து நான்கு

# வலம்புரி
# Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

WESTERN UNION WU
moving money for better
உலகெங்குமுள்ள உறவுகளுக்கு துரித தபால்கள், பொதிகள் சேவை உடனுக்குடன் அனுப்ப நாடுங்கள்
உறவுகளிடமிருந்து WESTERN UNION மூலம் அனுப்பிய பணத்தை ஒருசில நிமிடங்களில் நீங்கள் பெற்றுக்கொள்ள.
இவையனைத்தையும் ஒரே கூரையின் கீழ் அதிவிரைவு, பாதுகாப்பு, நம்பகத்தன்மை
Authorised Agent
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
# 303, K.K.S.ROAD, JAFFNA.
TEL: 021 222 5392, 021 222 2670, FAX: 021 222 3214
E-mail:srimurugan303@gmail.com, E-mail:srimurugan09@gmail.com
(C-9774)

சங்கு 21 வள்ளுவர் ஆண்டு 2051 ஆனி 22 திங்கட்கிழமை (06.07.2020) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 200

# பொருத்தமற்றவர்களை நாமே தெரிவு செய்துவிட்டு அவர்களை அல்லும் பகலும் விமர்சிக்கிறோம்

## தமிழ் மக்கள் பேரவையின் விசேட அறிக்கை

(யாழ்ப்பாணம்)
பொருத்தமற்றவர்களை நாமே தெரிவு செய்து விட்டு அவர்களை விமர்சிப்பதில் அல்லும் பகலும் காலத்தை வீணாக்குகிறோம். எனவே எமது அரசியலைத் தூய்மைப்படுத்த பொருத்தமான வர்களைத் தெரிவு செய்ய வேண்டும். இவ்வாறு தமிழ் 23

கிளிநொச்சி - பூநகரி பகுதியில்

## பல்கலை மாணவன் விபத்தில் உயிரிழப்பு



(பூநகரி)
யாழ்ப்பாணத்திலிருந்து பூநகரி ஊடாக தென்னிலங்கை பயணித்த மொறட்டுவப் பல்கலைக்கழக இறுதி வருட மாண வன் ஒருவர் விபத்தில் சிக்கி பரிதாப 23

கரும்புலிகள் நாளான நேற்று

# வடக்கு முழுவதும் இராணுவம் குவிப்பு

(யாழ்ப்பாணம்)
கரும்புலிகள் நாளான நேற்று வடக்கில் வீதிகள் எங்கும் இராணுவம், பொலிஸ் குவிக்கப்பட்டு சோதனை நடவடிக்கைகள் தீவிரப்படுத்தப் பட்டிருந்தன. (23ஆம் பக்கம் பார்க்க)

## கிளிநொச்சியில் விபத்து ஒருவர் உயிரிழப்பு

(கிளிநொச்சி)
கிளிநொச்சி, பூநகரி பொலிஸ பிரிவிற்குட்பட்ட தம்பி ராய் பகுதியில் இடம் 23

கடும் அச்சுறுத்தலுக்கு மத்தியில்

## யாழ்.பல்கலை வளாகத்தில் கரும்புலிகள் நாள் அனுஷ்டிப்பு



(யாழ்ப்பாணம்) இராணுவம் மற்றும் பொலிஸாரின் கடும் அச்சுறுத்தலுக்கு மத்தியில் வீர மறவர்களின் கரும்புலிகள் நாள் நேற்று யாழ். பல்கலை வளாகத்தில் அனுஷ்டிக்கப்பட்டது. (ம-3,9)

நீர்வேலியில் இடம்பெற்ற தாக்குதலில்

## படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி மரணம்

(யாழ்ப்பாணம்)
இரண்டு சகோதரர்களுக்கு இடையில் நடை பெற்ற சண்டையில் 23

## சிவாஜிலிங்கம் கைதாகி பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)
தமிழ் மக்கள் தேசியக் கூட் டணியின் பாராளுமன்றப் பொதுத தேர்தல் வேட்பாளரும் தமிழ் மக்கள் கட்சியின் செயலாளர் நாயகமும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரு மான எம்.கே.சிவாஜிலிங் கம் நேற்றுப் பிற் பகல் கைதாகிப் 23

## ஆவரங்காலில் கிணற்றிலிருந்து குடும்பஸ்தரின் சடலம் மீட்பு

(கரணவாய்)
தோட்டத்திற்கு நீர் பாய்ச்ச சென்ற இளம் குடும்பஸ்தர் ஒரு வர் தோட்டக் கிணற்றில் இருந்து சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.
அச்சுவேலி பொலிஸ் பிரிவுக் குட்பட்ட ஆவரங்கால் பகுதியில் நேற்று 23

## மாவின் விலை அதிகரிப்பு

(கொழும்பு)
கோதுமை மாவின் விலையை அதிகரித்துள்ள தாக பிறிமா நிறு வனம் அறிவித் 23

தரம் 5, 11, 13 மாணவர்களுக்கான

## கல்வி நடவடிக்கைகள் இன்று முதல் ஆரம்பம்

(கொழும்பு)
நான்கு கட்டங்களாக பாட சாலைகளை மீண்டும் திறப்பதற்கு எடுக்கப் 23

யாழ்.நீர்வேலிப் பகுதியில்

## டிப்பரின் சுமைப் பெட்டி விழுந்ததில் ஒருவர் பலி

(யாழ்ப்பாணம்)
யாழ்ப்பாணம், நீர்வேலிப் பகுதியில் கனரக வாக னங்கள் திருத்தும் 23

## யாழில் இளைஞன் மீது வாள்வெட்டுத் தாக்குதல்

(யாழ்ப்பாணம்)
வேலை முடித்து வீடு திரும் பிக் கொண்டிருந்த இளைஞன் மீது 2 மோட்டார் சைக்கிள்களில் வந்த 4 பேர்கொண்ட வாள்வெட்டுக் கும்பல் தாக்குதல் நடத்தி விட்டு தப்பி சென்றிருக்கின்றது
குறித்த சம்பவம் நேற்று முன் தினம் இரவு பொஸ்கோ பாட சாலைக்கு அருகில் இடம்பெற் றிருக்கின்றது.
அப்பகுதியில் சலூன் ஒன்றில் பணிபுரியும் குறித்த இளைஞன் பணி 23

## சிறுவர் இல்லத்தில் மாணவியின் சடலம் மீட்பு

வவுனியா கோவில்குளத்தில் சம்பவம்

வவுனியா
வவுனியா கோவில்குளம் அகிலாண்டேஸ்வரி அருளக சிறுவர் இல்லத்தில் மாணவி ஒருவரின் சடலம் மீட் கப்பட்டுள்ளது. 23

தரம் 5
மாணவர்களுக்கான
புலமைப்பரிசில்
மற்றும்
க.பொ.த (சா/த)
மாணவர்களுக்கான
விஞ்ஞான
மாதிரி வினாத்தாள்கள்
உள்ளே

# சிவஞானம் சிறீதரனை விசாரித்த பொலிஸார்

(கிளிநொச்சி)

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரனை கிளிநொச்சியில் உள்ள அவரது காரியாலயமான அறிவகத்தில் வைத்து நேற்று பொலிஸார் விசாரணைக்கு உட்படுத்தியுள்ளனர்.

நேற்று தமிழீழ விடுதலைப் புலிகளின் கரும்புலிகள் நாளாக அமைந்துள்ளதால் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினரால் கரும்புலி நாள் அனுஷ்டிக்கப்படவுள்ளதாக கிடைத்த தகவலை அடுத்தே இந்த விசாரணை முன்னெடுக்கப்பட்டுள்ளது. (ம - 3, 312)

# காங்கேசன்துறையில் இருந்து காலி வரையான பேருந்து சேவை

## இன்று முதல் ஆரம்பம்

(யாழ்ப்பாணம்)

புற்றுநோயாளர்களின் நலன் கருதி காங்கேசன்துறையில் இருந்து காலி வரை இ.போ.ச பேருந்து சேவை இன்று ஆரம்பிக்கப்படவுள்ளது

காங்கேசன்துறையில் இருந்து இன்று (06) இரவு 7.15 க்கு ஆரம்பமாகும் சேவை 8.05 க்கு யாழ் பேருந்து நிலையத்தை வந்தடையும் பின்னர் 8.15 க்கு யாழில் இருந்து புறப்பட்டு வவுனியா, அனுராதபுரம் ஊடாக மகரகம புற்றுநோய் வைத்தியசாலைக்குச் சென்று காலை 8.45 மணிக்கு காலியை சென்றடையும் .

இச் சேவைக்கு சாதாரண கட்டணம் அறவிடப்படும் எனவும் 16/57 என்ற இலக்க பாதை வழியாக சேவை இடம்பெறும் . (ம-3,9)


## பகிரங்க ஏலவிற்பனை

யா/செங்குந்த இந்துக்கல்லூரியில் வருடாந்த பொருட் கணக்கெடுப்பின்போது விற்பனை செய்வதற்கு தீர்மானிக்கப்பட்ட பொருட்கள் 20.07.2020 காலை 10.30 மணிக்கு பகிரங்க ஏலவிற்பனை செய்யப் படவுள்ளது. பொருட்களின் விபரங்களை பாடசாலை நேரத்தில் பார்வையிட முடியும்.

அதிபர் (C-9844)
யா/செங்குந்த இந்துக் கல்லூரி



## அறிவித்தல்

சற்குணரத்தினம் துஷிகாந்தனின் இறுதிக் கிரியைகள் தவிர்க்கமுடியாத காரணத்தால் 05.07.2020 இல் நீர்கொழும்பில் நடைபெற்றது என்பதை அறியத் தருகின்றோம்.

(C-9842)

076 971 8318 குடும்பத்தினர்



## கண்ணீர் அஞ்சலி

தோற்றம் 21 - 11 - 1997



மறைவு 05 - 07 - 2020

செல்வன்

## மோகன் ஆகாஷன்

( மாணவன் - மொறட்டுவ பல்கலைக்கழகம் )

மோகன் - கௌரி தம்பதியருக்கு
அவதரித்த அமுதசுரபி ஆகாஷ்
அனைவரையும் விட்டுப் போனதெங்கே..?
கண்களில் நீர்பொழிய கைகள் நடுநடுங்க
இலக்கியம் தடுமாற இலக்கணம் தமிழ்மாற
எப்படி கவிதைகள் எழுதமுடியும்...?
உன்புகழ் எப்படி பாடமுடியும்...?
அன்று முதல் இன்று வரை - என்றும்
உன்முகம் வாடியதில்லை
உன்னோடு பேசியவர் உள்ளம் - என்றும்
துன்முகத்தை நாடியதில்லை
பெற்றோருக்கு ஒரேபிள்ளை
அனைவருக்கும் செல்லப்பிள்ளை
உனை விரும்பாதோர் யாருமில்லை
வெறுப்போர் என்று எவருமில்லை
சொல்லாமல் விடைபெற்று போனதென்ன சொல்..?

(3216)

மோகன் ஆகாஷன் அவர்களின் பிரிவுச் செய்தி அறிந்து ஆழ்ந்த துயர் அடைவதுடன் அவரின் குடும்பத்தினருக்கு அனுதாபங்களைத் தெரிவித்துக் கொள்வதோடு அன்னாரின் ஆத்மா சாந்தியடையப் பிரார்த்திக்கின்றோம்.

உங்கள் பிரிவால் துயருறும்
உதயகுமார் ( ஜனகன் - சுவிஸ் ), வினுஷ் ( சுவிஸ் )



# தமிழ் மக்கள் தேசிய கூட்டணி

தமிழ் மக்களுக்கான நீதியின் காவலன்

யாழ்ப்பாணம் - கிளிநொச்சி தேர்தல் மாவட்ட வேட்பாளர்கள்



நீதியரசர் க.வி.விக்னேஸ்வரன்
(ஓய்வுநிலை உச்ச நீதிமன்ற நீதியரசர் மற்றும் முன்னாள் முதலமைச்சர் வடமாகாணம்)
6



2
திரு.கந்தையா அருந்தவபாலன்
(ஓய்வுநிலை அதிபர்)



4
திரு.கந்தையா இரத்தினகுமார்
(ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்)



8
திருமதி. மீரா அருள்நேசன்
(ஓய்வுநிலை பிரதிக் கல்விப் பணிப்பாளர்)



10
திரு.தவச்செல்வம் சிற்பரன்
(கட்டிடக் கலைஞர்)

X

(C- 019)

# கொழும்புத்துறைமுக நகர ஒப்பந்தம் மாற்றமடைந்ததால் நாம் பாரியளவிலான நிலப்பரப்பை இழந்துள்ளோம்

## நல்லாட்சியை சாடிய பிரதமர்

(கொழும்பு)

**கடந்த நல்லாட்சி அரசாங்கத்தின் கீழ் கொழும்பு துறைமுக நகர ஒப்பந்தம் மாற்றமடைந்தமையினால் துறைமுக நகரத்தில் இலங்கைக்கு சொந்தமாகவிருந்த பாரிய அளவிலான நிலப்பரப்பை இழந்துள்ளதாக பிரதமர் மகிந்த ராஜபக்ஷ கவலை வெளியிட்டார்.**



அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேச செயலக பிரிவின் செயற்பாட்டாளர்களுடனான சந்திப்பு நேற்று முன்தினம் மாலை வீரகெட்டியவில் இடம் பெற்றது. இதன்போதே பிரதமர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

துறைமுக நகர ஒப்பந்தம் மாற்றப்பட்டுள்ளதனை மீளவும் வழமைக்கு கொண்டு வருவதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதாகவும் தங்கள் அரசாங்கத்தின் கீழ் நாட்டையே வேலைத்தளமாக்கி மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்தி செயற்பாடுகள் கடந்த ஐந்து வருடங்கள் முழுமையாக தடைப்பட்டுள்ள நிலையில் கொழும்பு துறைமுக நகர நிர்மாணிப்பு நடவடிக்கையும் இரண்டு வருடங்கள் தடைப்பட்டிருந்ததாகவும் பிரதமர் இதன் போது சுட்டிக்காட்டினார்.

மேலும் அவர், அந்த காலப் பகுதியினுள் துறைமுக நகர ஒப்பந்தத்தை மாற்றியமையினால் எங்கள் நாட்டிற்கு சொந்தமாகவிருந்த நிலப்பரப்பை குறைத்து கடந்த அரசாங்கம் ஒப்பந்தம் தயாரித்துள்ளது என்றும் ஒப்பந்தம் மாற்றமடைந்தமையினால் துறைமுக நகரத்தின் மூலம் இழந்த நிலப்பரப்பை மீளப் பெறுவதற்கு தற்போது எமது அரசாங்கம் நடவடிக்கை மேற்கொண்டுள்ளது என்றும் சுட்டிக்காட்டினார்.

இதற்கு மேலதிகமாக நாட்டின் அனைத்து பிரதேசத்திலும் அபிவிருத்தி மேற்கொள்வதற்காக ஒரே அபிவிருத்தி வேலைத் திட்டம் ஒன்றை செயற்படுத்துவதன் மூலம் இளைஞர்-யுவதிகளுக்கு தொழில் வாய்ப்பை அதிகரித்து மாகாண மட்டத்தில் அபிவிருத்தியை கட்டியெழுப்புவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.

எங்கள் அரசாங்கத்தின் கீழ் தங்காலை சிறைச்சாலையை அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேசத்திற்கு கொண்டு செல்வதற்கு நடவடிக்கை மேற்கொண்டதனை பிரதமர் இதன் போது நினைவு கூர்ந்தார்.

அதன் மூலம் தற்போது வரையில் அங்குனுகொலபெலஸ்ஸ பிரதேசத்தில் ஓரளவு பொருளாதார முன்னேற்றம் ஏற்படுத்தப்பட்டுள்ளதாக குறிப்பிட்டார்.

அங்குனுகொலபெலஸ்ஸ சிறைச்சாலை இதுவரையில் ஆசியாவின் சிறந்த எடுத்துக்காட்டுடைய சிறைச்சாலை என்பது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# பாராளுமன்றத்தில் பெண்கள் பிரதிநிதித்துவம் அதிகரிக்க வேண்டும்

## விஜயகலா அறைகூவல்



(யாழ்ப்பாணம்)

அமரர் ரவிராஜினுடைய மனைவி சசிகலாவின் அரசியல் பிரவேசத்தை தான் வரவேற்பதாகவும் சசிகலா பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியின் ஊடாக பாராளுமன்றம் செல்ல வேண்டும் எனவும் முன்னாள் கல்வி இராஜாங்க அமைச்சரும் ஐக்கிய தேசியக் கட்சியின் யாழ். மாவட்ட முதன்மை வேட்பாளருமான விஜயகலா மகேஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இலங்கையின் சமகால அரசியல் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார். அவர் மேலும் தெரிவிக்கையில்,

அமரர் ரவிராஜினுடைய மனைவி சசிகலாவின் அரசியல் பிரவேசத்தை நான் வரவேற்கின்றேன். அவருடைய கணவருக்கு என்ன நடந்தது என்பது தொடர்பில் இதுவரை எதுவும் கிடைக்கவில்லை. நீதிமன்றத்தில் மேற்கொள்ளப்பட்ட விசாரணைகள் முடக்கப்பட்டுள்ளன. அதனால் சசிகலா மன அழுத்தத்திற்கு ஆளாகியுள்ளார்.

சசிகலா தான் பிரதிநிதித்துவப்படுத்தும் கட்சியின் ஊடாக பாராளுமன்றம் செல்ல வேண்டும்.

ஐக்கிய தேசியக் கட்சியின் ஆட்சிக் காலத்திலேயே பெண்களுக்கான 25 சதவீத ஒதுக்கீட்டை கொண்டுவந்திருந்தோம். அதன்மூலம் பிரதேச சபைகளில் பெண்களின் பிரதிநிதித்துவத்தை அதிகரிக்கக்கூடியதாக இருந்தது.

பாராளுமன்றத்திலும் பெண்களுக்கான 25 சதவீத ஒதுக்கீட்டை கொண்டு வருவதற்கான முயற்சிகள் மேற்கொண்டிருந்த நிலையில்தான் ஆட்சிகவிழ்க்கப்பட்டது. எனினும் அநேகமான கட்சிகளில் ஒவ்வொரு தேர்தல் மாவட்டங்களிலும் ஒன்றுக்கும் மேற்பட்ட வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். இவர்களின் வெற்றி மக்களின் கைகளிலேயே உள்ளது என அவர் தெரிவித்தார். (ஜ-4)




## குணமடைந்தோர் 1903

(கொழும்பு)

இலங்கையில் கொரோனா வைரஸ் தொற்றுக்கு உள்ளானவர்களில் மேலும் 18 பேர் பூரண குணமடைந்து வீடுகளுக்குத் திரும்பியுள்ளதாக தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

இதன்படி, வைரஸ் தொற்றிலிருந்து குணமடைந்தவர்களின் மொத்த எண்ணிக்கை ஆயிரத்து 903 ஆக அதிகரித்துள்ளது. இதேவேளை, கொரோனா தொற்றினால் இதுவரை 11 பேர் மரணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## இராசிபலன்

06.07.2020
ஆனி 22, திங்கட்கிழமை
பிரதமை முற்பகல் 10.20 மணிவரை
உத்தராடம் பின்னிரவு 12.40 மணிவரை
சுபநேரம் 11.58-1.28 மணிவரை
இராகுகாலம் 7.28-8.58 மணிவரை
சந்திராஷ்டமம் திருவாதிரை,
புனர்பூசம்

வளவன்


மேஷம்

கனவு பலிதமுண்டு, வெளியூர்த் தொடர்புகள் அனுகூலம் தரும், சொன்ன சொல்லைக் காப்பாற்றி மகிழ்வீர்கள், செவி குளிரும் செய்திகள் வந்து சேரலாம், போசன சுகமுண்டு.


ரிஷபம்

மனக்குழப்பம் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், ஆரோக்கியம் சீராகும், புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், ஆன்றோர் சந்திப்புண்டு.


மிதுனம்

மற்றவர்களின் விமர்சனங்களை மறந்து செயற்படுவது நல்லது, ஆரோக்கியத்தில் கவனம் தேவை, வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள், திடீர் செலவுகள் ஏற்படலாம்.


கடகம்

உறவினர்களின் சந்திப்பால் உள்ளம் மகிழ்வீர்கள், போட்டிகளுக்கு மத்தியில் முன்னேற்றம் காண்பீர்கள், தூரதேசச் செய்திகள் மகிழ்ச்சி தரும் வகையில் அமையும்.


சிம்மம்

இனத்தார் பகைமாற எடுத்த முயற்சி கைகூடும், செய்தொழிலில் சிறப்புகள் வந்து சேரலாம், உடல் நலன் சீராகும், அரசியல் செல்வாக்கு மேலோங்கும் நாள்.


கன்னி

தொழிலை விரிவுபடுத்த எடுத்த முயற்சிகள் கைகூடும், பிள்ளைகள் வழியில் பெருமையான சம்பவங்கள் இடம்பெறலாம், சுப செய்திகள் வந்து சேரலாம்.


துலாம்

வீட்டுக்குத் தேவையான பொருட்களை வாங்கி மகிழும் வாய்ப்புண்டு, நம்பி வந்தவர்களுக்கு கைகொடுத்து உதவுவீர்கள், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், பயணங்கள் கைகூடும்.


விருச்சிகம்

வெற்றி தரும் செய்திகள் வீடு வந்து சேரலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், நண்பர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும் வாய்ப்புண்டு.


தனுசு

ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள், நீண்ட நாளைய விருப்பமொன்று கைகூடும், தொலைபேசி வழியில் சுப செய்திகள் வந்து சேரலாம்.


மகரம்

வழிபாட்டில் ஆர்வம் காட்டுவீர்கள், சிந்தனை ஆற்றலால் சிறப்படைய வேண்டிய நாள், வருமானத்தை அதிகரிக்கும் வழியில் நாட்டம் செல்லும், போசன சுகமுண்டு.


கும்பம்

தொழில் ரீதியான பயணங்கள் இடம்பெறலாம், அனுபவம் மிக்கவர்களின் ஆலோசனை கிடைக்கும், தேவையற்ற மனச்சஞ்சலங்கள் ஏற்படலாம், வேலைச்சுமை கூடும் நாள்.


மீனம்

குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், அரசு தொடர்பான காரியங்கள் அனுகூலம் தரும், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

ஆன்மீக மகிழ்ச்சி வானவில்லைப் போன்று அழகானது.

# மாகாண சபைக்கான அதிகாரங்களை பலப்படுத்த வேண்டுமே தவிர பலவீனப்படுத்தக்கூடாது

## திஸ்ஸ விதாரண சுட்டிக்காட்டு




(யாழ்ப்பாணம்)

**மாகாண சபைக்கான அதிகாரங்களைப் பலப்படுத்த வேண்டுமே தவிர பலவீனப்படுத்தக் கூடாது. மத்திய அரசு, மாகாண சபை, பிரதேச சபைகள் போன்றவற்றுக்கான அதிகாரங்கள் என்ன என்பதை தெரிந்து கொண்டு செயற்பட வேண்டும் என சர்வதேச மாநாட்டிலே யோசனையொன்று முன்வைக்கப்பட்டதாக லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.**

யாழ். ஊடக அமையத்தில் நேற்று இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இதனைத் தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர்மேலும் தெரிவிக்கையில், சிறிய குளங்கள் மற்றும் குட்டைகளுடைய பிரச்சினைகள் மத்திய அரசுக்குரியதாகவும் மிகப் பெரிய குளங்களுடைய பிரச்சினைகள் மாகாண அரசுக்குரியதாகவும் இருப்பதால் பெரிய குளங்களின் பிரச்சினைகளை மாகாண அரசினாலும், சிறிய குளங்களின் பிரச்சினைகளை மத்திய அரசினாலும் தீர்த்துக் கொள்ள முடியாத நிலையுள்ளது. சிறிய குளங்கள் நீர்ப் பிரச்சினைகளை தீர்த்துக் கொள்வதற்குக் கூட மத்திய அரசை நாட வேண்டிய நிலையுள்ளது. இவ்வாறான சிறிய பிரச்சினைகளைத் தீர்ப்பதற்கு மத்திய அரசு தேவை என நான் கருதவில்லை.

எம்.சி.சி.ஒப்பந்தத்தினூடாக குறித்த ஒப்பந்தத்தை செய்த கொம்பனிகளுக்கு ஏனைய நாடுகளிலே இடங்களைப் பெற்றுக் கொடுப்பதற்கான வழிவகைகளை ஏற்படுத்தலாம். சர்வதேசநாணய நிதியத்தினூடாக பெற்றுக் கொள்ளப்படும் பணம் கூட சர்வதேச நாணய நிதியத்தின் நிபந்தனைகளின் அடிப்படையிலேயே வழங்கப்படுகின்றது.

மிலேனிய ஒப்பந்தத்தில், நாங்கள் பணத்தைப் பெற்றுக் கொள்ள முன்பே அவர்களுடைய நிபந்தனைகளுக்கு கீழ்ப்படிய வேண்டும் என்று கூறுகிறார்கள். இது எப்படி சாத்தியமாகும் என லங்கா சமசமாஜக் கட்சியின் தலைவர் திஸ்ஸ விதாரண கேள்வி எழுப்பினார். (ஜ-8)

# நுவரெலியாவில் குவிந்த சுற்றுலாப் பயணிகள்

(நுவரெலியா)


கொவிட் - 19 நெருக்கடியின் பின்னர், ஹோட்டன் சமவெளியைப் பார்வையிடுவதற்கு அனுமதி வழங்கப்பட்டுள்ள நிலையில், நேற்று ஹோட்டன் சமவெளியில் உள்நாட்டு சுற்றுலாப் பயணிகளின் வருகை அதிகரித்திருந்தது.

கொவிட் - 19 நெருக்கடியின் அச்சம் இன்னும் நீங்காத நிலையில், வாகனங்களின் எண்ணிக்கை அதிகரித்தமையால், அவற்றைக் கட்டுப்படுத்துவதற்கு, ஹோட்டன் சமவெளி அதிகாரிகள் கடும் பிரயத்தனங்களை முன்னெடுத்தனர்.

ஹோட்டன் சமவெளி, காலை 6 மணியில் இருந்து பிற்பகல் 2 மணிவரையும் திறந்திருக்கும் என்றும் முதலாவதாக 50 பேர் கொண்ட குழுவுக்கு மாத்திரமே அனுமதிவழங்கப்படும் என்றும் பூங்காவின் பொறுப்பாளர் பிரதீப் குமார தெரிவித்தார்.

இதேவேளை சுமார் 5 மாதங்களுக்குப் பின்னர், நுவரெலியா நகரிலும் அங்குள்ள கிரகரி வாவி உள்ளிட்ட பல முக்கிய பகுதிகளில் சுற்றுலாப் பயணிகள் நேற்று குவிந்திருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-8)

# வலிகாமத்தில் சிறுபோக வெங்காய அறுவடை ஆரம்பம்



யாழ்.வலிகாமத்தின் பல்வேறு பகுதிகளிலும் தற்போது சிறுபோக வெங்காய அறுவடை ஆரம்பமாகியுள்ளது.

இந்த வருடம் ஒரு அந்தர் விதை வெங்காயம் 15 ஆயிரம் ரூபாவாக விவசாயிகளால் கொள்வனவு செய்து நடுகை செய்யப்பட்டது.

இந்நிலையில் அண்மையில் பெய்த கடும் மழை காரணமாக வலிகாமத்தின் பல பகுதிகளிலும் வெங்காயச் செய்கை பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், இம்முறை வெங்காய அறுவடை வீதத்தில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளதாக விவசாயிகளும் மொத்த வியாபாரிகளும் தெரிவிக்கின்றனர்.

இந்தியாவிலிருந்து வெங்காயம் இறக்குமதி செய்யப்படுவதாலும் வலிகாமத்தில் வெங்காய அறுவடை பரவலாக ஆரம்பமாகியுள்ளமையாலும் தற்போது தம்புள்ளை பொருளாதார சந்தை உள்ளிட்ட சந்தைகளில் வெங்காய விலையில் வீழ்ச்சி ஏற்பட்டுள்ளது. இதனால், தாம் பாதிக்கப்பட்டுள்ளதாக வெங்காயச் செய்கையில் ஈடுபட்டுள்ள விவசாயிகள் கவலை வெளியிட்டுள்ளனர். (4-5-18)

## கரும்புலிகள் தினத்தினால்

# அக்கராஜ மன்னனின் நிகழ்விற்குத் தடை

(பரந்தன்)

கிளிநொச்சியில் அக்கராஜ மன்னனின் நிகழ்விற்கு பொலிஸாரால் தடை விதிக்கப்பட்டது.

கிளிநொச்சி அக்கராயன் பகுதியில் அமைக்கப்பட்ட அக்கராஜ மன்னனின் உருவ சிலைக்கு அஞ்சலி செலுத்தி நினைவு கூரும் நிகழ்வு நேற்று கரைச்சி பிரதேச சபையால் ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. குறித்த நிகழ்வை நடத்துவதற்கு பொலிஸார் தடை விதித்தனர். இந்த நிலையில் பொலிஸாருடன் கரைச்சிப் பிரதேச சபை தவிசாளர் மற்றும் உறுப்பினர்கள் நீண்ட நேரம் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். எனினும் நேற்று கரும்புலிகள் நாள் என்பதால் நிகழ்வை நடத்த முடியாது என தெரிவிக்கப்பட்டதால் நிகழ்வு இடம்பெறவில்லை.

13 ஆம் நூற்றாண்டில் பொலநறுவை இராசதானிக்கு பின்னர் வன்னி நிலம் தமிழ் அரசர்களால் ஆளப்பட்டது.

அத்தகைய அரசர்களில் ஒருவரே அக்கராஜ மன்னன். அவரது ஆட்சிக்குள்ளான பிரதேசத்தில் ஒன்றே அக்கராயன் என இன்றும் அழைக்கப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஜ-5-312)

# கடைத்தொகுதியில் பாரிய தீ!




(கொழும்பு)

கொழும்பு. வெள்ளவத்தைப் பகுதியில் கடைத்தொகுதி ஒன்றில் நேற்று தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

வெள்ளவத்தை, புகையிரத வீதியை அண்மித்த பகுதியில் உள்ள புடைவைக்கடைத்தொகுதியிலேயே இந்த தீ விபத்து இடம்பெற்றுள்ளது.

தீயை அணைக்கும் முயற்சியில் பொலிஸார் மற்றும் தீயணைப்பு வீரர்கள் ஈடுபட்டனர்.

இந்த தீ பரவலுக்கான காரணம் இதுவரை தெரியாத நிலையில் பொலிஸார் விசாரணையை முன்னெடுத்து வருகின்றனர். (ஜ-4)

# வகுப்பறைகள் எப்படி இருக்க வேண்டும்?

## வெளியானது புகைப்படம்



(கொழும்பு)

நாட்டில் அனைத்து பாடசாலைகளும் கல்வி நடவடிக்கைகளுக்காக இன்று திறக்கப்படவுள்ளன.

அதனடிப்படையில் தரம் 5.11 மற்றும் தரம் 13 மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகளே இன்று ஆரம்பமாகவுள்ளன.

தரம் 5 முதல் தரம் 11 வரையான மாணவர்களுக்கு காலை 7.30 மணி முதல் 1.30 மணி வரை கல்வி நடவடிக்கைகள் நடைபெறவுள்ளதுடன், தரம் 13 மாணவர்களுக்காக காலை 7.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை கல்வி நடவடிக்கைகள் இடம்பெறும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

இந்த நிலையில் பாடசாலை வகுப்பறையில் மாணவர்களின் இருக்கைகள் எவ்வாறு இருக்க வேண்டும் என்பது தொடர்பான புகைப்படம் ஒன்று வெளியாகி உள்ளது.

கொழும்பில் உள்ள பிரபல பெண்கள் பாடசாலையில் வகுப்பறையின்மேசை, கதிரை உள்ள விதம் தொடர்பான புகைப்படமே இவ்வாறு வெளியாகியுள்ளது.

முன்புபோல் இல்லாமல் ஒவ்வொரு மாணவர்களும் தனித்தனியாக இருப்பதற்கான இருக்கைகள் அமைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# காங்கேசன்துறை- மஹரகம- காலி இ.போ.சவின் புதிய சேவை ஆரம்பம்

(சாவகச்சேரி)

இலங்கை போக்குவரத்துச் சபையின் கிளிநொச்சி சாலையும், அம்பலாங்கொட சாலையும் இணைந்து காங்கேசன்துறையில் இருந்து மகரகம வைத்தியசாலை ஊடாக காலிக்கு பேருந்து சேவை ஒன்றினை நடத்த தீர்மானித்தன.

அதனடிப்படையில் குறித்த பேருந்து புதிய பேருந்து சேவை இன்று திங்கட்கிழமை இரவு 7.15 மணிக்கு காங்கேசன்துறையில் இருந்து உத்தியோகபூர்வமாக ஆரம்பமாகும்.

மகரகம வைத்தியசாலைக்கு செல்வோரின் தேவை கருதியே இப் பேருந்து சேவை ஆரம்பிக்கப்படுவதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரவு 7.15 மணிக்கு காங்கேசன்துறையிலிருந்து ஆரம்பமாகும் இச் சேவை இரவு 8.05 மணிக்கு யாழ்.மத்திய பேருந்து நிலையத்தை வந்தடைந்து பின்னர் 8.15 மணிக்கு புறப்பட்டு சாவகச்சேரி, கிளிநொச்சி, வவுனியா, அநுராதபுரம், கல்கமுவ ஊடாக மகரகம வைத்தியசாலையைச் சென்றடைந்து அதே பாதை ஊடாக காலை 8.40மணிக்கு காலியைச் சென்றடையும். பின்னர் அதே நாள் பிற்பகல் 4.30 மணிக்கு காலியில் இருந்து சேவையை ஆரம்பித்து காலை 6.40 மணிக்கு யாழ்.நகரை வந்தடையும்.

குறித்த சேவையானது அனைத்து பிரயாணிகளும் பிரயாணம் செய்யும் வகையில் தினமும் இடம்பெறும் என இலங்கை போக்குவரத்துச்சபையின் வடபிராந்திய பிரதான முகாமையாளர் எ.ஆர்.எம். அமீன் தெரிவித்துள்ளார். (4-5-30)

# அங்கொடலொக்காவுடன் தொடர்புடையவர் கைது

(கொழும்பு)

பாதாள உலகக்குழு உறுப்பினர் அங்கொட லொக்காவுடன் நெருங்கிய தொடர்பு வைத்திருந்த ஒருவர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பத்தரமுல்ல பண்டி என்ற குறித்த நபர் நேற்றையதினம் தலங்கம பகுதியில் வைத்து ஹெரோயின் மற்றும் ஒரு தொகை பணத்துடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதேவேளை குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கில் நாடு முழுவதும் மேற்கொள்ளப்பட்ட சிறப்பு விசேட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில் பல்வேறு குற்றச்சாட்டுக்களுடன் தொடர்புடைய மேலும் 2 ஆயிரத்து 350 சந்தேக நபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர். (ஜ-4)




# மதுபோதையில் சாரத்தியம் செய்த நபர் விளக்கமறியலில்

(யாழ்ப்பாணம்)

மந்துவில் வடக்குப் பகுதியில் மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய குற்றச்சாட்டில் நபர் ஒருவர் கடந்த வெள்ளிக்கிழமை இரவு கொடிகாமம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

மதுபோதையில் மோட்டார் சைக்கிள் செலுத்திய நபரிடமிருந்து 30 கிராம் ஹெரோயின் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டது. குறித்த நபரை நேற்று முன்தினம் சாவகச்சேரி நீதிமன்றில் முற்படுத்திய போது எதிர்வரும் 17 ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதிமன்றால் உத்தரவிடப்பட்டது. (4-5-114)



# உள்ளூராட்சி சபைகளின் பரிணாமம்

08

கலாநிதி க.தவலிங்கம்
தவிசாளர் – எல்லை நிர்ணய ஆணைக்குழு,
ஓய்வுநிலை நில அளவையாளர் நாயகம்.



மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் மட்டக்களப்பு மாவட்டம் -1981

| கட்சி | பெற்ற வாக்குகள் | பெற்ற ஆசனங்கள் |
|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 34,664 | 1 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 74,302 | 2 |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | - | |
| சுயேட்சை | 16,698 | - |
| நிராகரிக்கப்பட்டவை | 1,902 | - |

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் அம்பாறை மாவட்டம் -1981

| கட்சி | பெற்ற வாக்குகள் | பெற்ற ஆசனங்கள் |
|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 91,247 | 3 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 37,875 | 1 |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | - | |
| சுயேட்சை | - | - |
| நிராகரிக்கப்பட்டவை | 3,655 | - |

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் திருகோணமலை மாவட்டம் -1981

| கட்சி | பெற்ற வாக்குகள் | பெற்ற ஆசனங்கள் |
|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 42,388 | 1 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 44,692 | 1 |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | - | |
| சுயேட்சை | - | - |
| நிராகரிக்கப்பட்டவை | 1674 | - |

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் கொழும்பு மாவட்டம் -1981

| கட்சி | பெற்ற வாக்குகள் | பெற்ற ஆசனங்கள் |
|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 2,66,424 | 12 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | - | - |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | 12,386 | |
| சுயேட்சை | 78,912 | 4 |
| நிராகரிக்கப்பட்டவை | 54,815 | - |

மாவட்ட அபிவிருத்திச் சபைத் தேர்தல் நாடாளாவிய ரீதியில் -1981

| கட்சி | பெற்ற வாக்குகள் | பெற்ற ஆசனங்கள் |
|---|---|---|
| ஐக்கிய தேசியக் கட்சி | 1,515,100 | 119 |
| தமிழர் விடுதலைக் கூட்டணி | 468,560 | 20 |
| அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸ் | 36,497 | - |
| ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி (மாத்தளையில் மட்டும் போட்டி) | 9,951 | - |
| சுயேட்சை* | 515,571 | 12 |
| நிராகரிக்கப்பட்டவை | 164,437 | - |

* சுயேட்சையாக JVP சார்பான கட்சி போட்டியிட்டது.

இரவு 10 மணிக்கு நூலகத்திற்குள் நுழைந்த இனவெறியர்கள் காவலாளியைத் துரத்திவிட்டு நூலகப் பெருங்கதவைக் கொத்தி உள்ளே புகுந்து அட்டூழியங்கள் புரிந்தனர். 97 ஆயிரம் கிடைத்தற்கரிய நூல்கள் மற்றும் ஓலைச்சுவடிகளுக்கு பெற்றோல் ஊற்றி எரித்தனர்.

இவ்வாறு யாழ்.பொது நூலகம் 1981 ஜூன் முதலாம் திகதி தீக்கிரையாக்கப்பட்டது. இச் செய்தி கேட்டு உலகமே அதிர்ச்சியுற்றது. யாழ்ப்பாணத் தமிழர்கள் வீதிக்கு வந்து கதறி அழுதனர். வரலாற்றில் மன்னிக்க முடியாத கறுப்பு நாள் இது!

தீ யாழ்ப்பாண நகரமெங்கும் கொழுந்து விட்டெரிந்த அந்த நள்ளிரவில் யாழ் நூலகத்தின் மேற்கு மூலையில் முதல் தீ வைக்கப்பட்டது. ஒவ்வொரு பகுதியாக பார்த்து பார்த்து நூலகம் முழுவதும் தீ வைக்கப்பட்டது. யாழ்ப்பாண நூலகத்தில் வைக்கப்பட்ட தீ கொழுந்து விட்டு எரிந்தது. யாழ்ப்பாண நூலகத் தாய் துடிதுடித்து எரிவதைப் பார்த்த மக்கள் துடித்தனர். வீடுகளில் இருந்து மக்கள் வெளியேற முடியாதவாறு பொலிஸார் தடுத்தனர். தகவல் அறிந்து வந்த யாழ்.மாநகராட்சி ஆணையரை இடைவழியில் இராணுவத்தினர் தடுத்து வீட்டுக்கு திரும்புமாறு பணித்தனர்.

யாழ்.நூலகத்திற்கு அருகிலேயே யாழ்ப்பாணம் . பொலிஸ் தலைமை அலுவலகம் இருந்தது. அங்கிருந்தும் பெற்றோல் குண்டுகள் வீசப்பட்டதாக அருகில் வீடுகளில் இருந்தவர்கள் சொன்னார்கள். கொழும்பில் இருந்து கொண்டுவரப்பட்டு நூலகத்திற்கு அருகில் உள்ள யாழ்ப்பாணம் முற்றவெளியில் தங்க வைக்கப்பட்டிருந்த நூற்றுக் கணக்கான குண்டர்களே இதனைச் செய்தார்கள் என்று அடுத்தடுத்து நடந்த விசாரணைகளில் தெரியவந்தது.

இந்தச் சம்பவம் நடந்து கொண்டிருக்கையில் இலங்கை அரசின் மூத்த அமைச்சர்களும் ஜனாதிபதி ஜே.ஆர். ஜெயவர்த்தனவின் நெருக்கத்துக்குரியவர்களான இரண்டு அமைச்சர்கள் நூலகத்திற்கு அருகில் உள்ள சுபாஸ் விருந்தினர் விடுதியில் தங்கியிருந்தனர். 1983 தமிழர் படுகொலையை முன்னின்று செய்ததாக கூறப்படும் சிறில் மத்தியூவும். தமிழர் பகுதிகளில் சிங்கள குடியேற்றங்களை ஏற்படுத்தி கலவரங்களைத் தூண்டியதாக கூறப்படும் காமினி திஸாநாயக்கவுமே அந்த இரு அமைச்சர்களாகும்.

இவர்களின் ஏற்பாட்டிலேயே குண்டர்கள் யாழ்ப்பாணம் கொண்டு வரப்பட்டனர் என்று கூறப்பட்டது. இவர்கள் இருவரும்தான் யாழ்.நூலக எரிப்புக்கு காரணம் என்பதைப் பின்னாளில் ஜனாதிபதியான பிரேமதாஸ ஒப்புக்கொண்டார்.

யாழ்.நூலகம் எரிப்பு குறித்து தமிழர்களின் குற்றச்சாட்டுக்கிடையே சிங்களவரான ஜனாதிபதி பிரேமதாஸ கூறியது என்ன? “வடக்கு-கிழக்கில் தற்போதைய நிலைமையை எழுப்பியவர்கள் யார்? இதற்கு பிரதான காரணம் காமினியே. பத்து வருடங்களுக்கு முன் 1981 இல் நடந்த சம்பவங்கள் இந் நாட்டின் சமுதாயங்களுக்கிடையேயான உறவுகளில் இது ஒரு கறை படிந்த துயரமான சம்பவமாகும்.

பாராளுமன்றத்தில் மாவட்ட அபிவிருத்தி சபை முறையை நாம் கொண்டு வந்தபோது அதிகாரத்தைப் பரவலாக்க முயன்றபோது காமினி எதிர்த்தார். தேர்தல்கள் நடைபெற்றன. தேர்தல் நடைபெறுவதற்கு முதல்நாள் காமினி நிறைய ஆட்களைக் கூட்டிக் கொண்டு யாழ்ப்பாணம் சென்றார். அங்கு வாக்குப் பெட்டிகளைச் சேகரித்து கள்ள வாக்குகளைப் போட்டார். இதனை நான் கூறவில்லை. பாராளுமன்றத்தில் காமினி பிரசன்னமாய் இருந்தபோது கூட்டணி செயலதிபர் ஆற்றிய உரை என்னிடம் உள்ளது.

மாவட்ட அபிவிருத்தி சபை தேர்தல்களில் சதிநாச வேலைகள் இடம்பெற்ற பின்னர், ஒரு சர்வதேச நூல் நிலையமான யாழ்.நூல் நிலையம் எரியூட்டப்பட்டது. வாக்குச் சீட்டுகளால் நீதியைப் பெறுவதற்கு எமது தலைவர்களால் முடியாவிடில் நாங்கள் நீதியைக் குண்டுகள் மூலம் பெறுவோம் என இளம் தமிழ்த் தீவிரவாதிகள் நினைத்தனர். இப்படித்தான் அவர்கள் தீவிரவாதச் செயல்களில் இறங்கினார்கள்” என்பதாகும்.

இதற்கு ஒருபடி மேலே சென்று ஐக்கிய முன்னணியின் புத்தளம் அமைப்பாளர் ஜனாப் எம்.எச்.எம். நவாஸ் கூறுகையில், “தென்கிழக்கு ஆசியாவிலேயே சிறந்த நூல் நிலையமாக விளங்கிய யாழ்.நூல் நிலையத்தை எரித்து சாம்பலாக்குவதற்கு முக்கிய சூத்திரதாரியாக இருந்த காமினி திஸாநாயக்கவுக்கு ஜனாதிபதி தேர்தலில் சிறுபான்மை மக்கள் ஒருபோதும் வாக்களிக்க மாட்டார்கள்” என்றார்.

பொலிஸ்துறைத் தலைவர் மற்றும் பிரிகேடியர் வீரதுங்க ஆகிய இருவரும் யாழ்ப்பாணத்தில் இருந்த நிலையில், தமிழர்களின் பண்பாட்டின் வைப்பகமாக உருவான யாழ்ப்பாண நூலகத்தை தீயிட்டுக் கொளுத்தினர். 97 ஆயிரம் சிறப்பு வாய்ந்த நூல்கள் எரிந்து சாம்பலாயின. உலகின் மிகப் பெரிய சர்வாதிகாரி என்று பெயரெடுத்த ஹிட்லர்கூட இங்கிலாந்து சென்று தாக்கும் தனது விமானப் படையினருக்கு, “ஒக்ஸ்போர்டு பல்கலைக்கழகத்தின்மீது குண்டு போடாதீர்கள்” என்று எச்சரித்ததாகத் தகவல்கள் உண்டு. அதேபோன்று, “ஜேர்மனியில் ஹைடல்பர்க் பல்கலைக்கழகத்தைத் தாக்காதீர்கள்” என்று பிரிட்டன் விமானப் படைப்பிரிவுக்கும் அறிவுறுத்தப்பட்டதாகவும் சொல்வார்கள்.

ஆனால் ஜெயவர்த்தனவின் சீடன் அமைச்சர் காமினி திஸாநாயக்கவின் மேற்பார்வையில், தமிழர்களின் பண்பாட்டுப் பெட்டகத்தைத் தகர்க்க வேண்டும் என்ற வெறியில், தீமூட்டி எரித்தார்கள்.

(தொடரும்...)

# ஆதனப் பெயர் மாற்றம்

யாழ்ப்பாணம் மாநகரசபைக்குட்பட்ட வட்டாரம்-12 கோவில் வீதியில் ஆதன இலக்கம் 246/6 என்ற இலக்கம் கொண்ட ஆதனமானது கந்தையா கனகசபாபதி என்ற பெயரிலே ஆதனவரிப் பதிவேட்டில் பதியப்பட்டு காணப்படுகிறது.

ராஜசிங்க பனிக்கன் வளவும் புளியடித்தறையும் "நிலப்பரப்பு 09 குளி 12.01 என்ற விஸ்தீரணமுடைய ஆதனத்தை இல.46 **Blakes Avenue, New Maldem, Surrey KT3 6RL United Kingdom** என்ற முகவரியில் வசிக்கும் நவரத்தினம் சந்திரமோகனும் பெண் திலகவதியும் முதலாம் புறமாகவும் செல்லையா செல்வராஜனும் பெண் சாந்தியும் இரண்டாம் புறமாகவும் கனகசபாபதி விக்கினேஸ்வரன் என்பவர் மூன்றாம் புறமாகவும் மேற்குறித்த முதலாம் இரண்டாம் மற்றும் மூன்றாம் புறத்தவர்கள் தமது அற்றோனித்தத்துவக்காரரான சிவலிங்கம் உருத்திரலிங்கம் மூலம் பிரசித்த நொத்தாரிசு திருமதி.ச.இளங்கோவன் முகதாவில் 7002 ஆம் இலக்கத்தில் 07.01.2012 ஆம் திகதியன்று நிறைவேற்றப்பட்ட பிரிவிடல் உறுதி மூலம் பிரிவிடப்பட்டுள்ளதுடன் குறித்த பிரிவிடல் உறுதியில் ஆதன வரலாற்றுப்பகுதியில் முன்னைய உறுதிகள் நாட்டில் ஏற்பட்ட அசாதாரண சூழ்நிலைகள் காரணமாக தேடுதல்கள் செய்தும் பெற்றுக்கொள்ள முடியவில்லை எனக் குறிப்பிட்டுள்ளனர்.

குறித்த பிரிவிடல் உறுதியின் மூலம் நிலப்பரப்பு 2 குளி 8.362 என்ற ஆதனத்திற்கு உரித்தாளரான **46 Blakes Avenue, New Malden, Surrey KT3 6RL, United Kingdom** என்ற முகவரியில் வசிக்கும் செல்லையா செல்வராஜா மற்றும் பெண் சாந்தி ஆகியோர் தமது அற்றோனித்தத்துவக்கரான சிவலிங்கம் உருத்திரலிங்கம் மூலம் பிரசித்த நொத்தாரிசு திருமதி.ச.இளங்கோவன் முகதாவில் 9002 ஆம் இலக்கத்தில் 27.07.2013 ஆம் திகதியன்று நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் குறித்த ஆனத்தை கனகசபாபதி விக்கினேஸ்வரன் என்பவருக்கு நன்கொடை அளித்திருந்தனர்.

மேற்குறித்த கனகசபாபதி விக்கினேஸ்வரன் பிரசித்த நொத்தாரிசு திருமதி.ச.இளங்கோவன் முகதாவில் 10921 ஆம் இலக்கத்தில் 18.02.2015 ஆம் திகதியன்று நிறைவேற்றப்பட்டு அறுதி உறுதியின் மூலம் ராஜசிங்க பனிக்கன் வளவும் புளியடித்தறையும் நில.பர. 6 குளி 8.330 என்ற விஸ்தீரணமுடைய ஆதனத்தை **Rubins (Pvt) Ltd** சிவலிங்கம் உருத்திரலிங்கம், உருத்திரலிங்கம் செந்தூரன், திருமதி.அனுதாமா ஜெய்ராம் ஆகியோருக்கு அறுதியாக விற்றிருந்தார்.

**No.46, Blakes Avenue New Malden Surrey KT3 6 RF United Kingdom** இல் வசிக்கும் நவத்தினம் சந்திரமோகன் மற்றும் பெண் வைத்தியர் திலகவதி ஆகியோர் தமது அற்றோனித்தத்துவக்காரரான கிருபானந்தன் கோபாலரட்ணம் என்பவர் மூலம் "ராஜசிங்கம் பனிக்கன்வளவும் புளியடித்தறையும்" நில.பர. 3 குளி 3.74 என்ற விஸ்தீரணமுடைய ஆதனத்தின் ஒரு பகுதியான நில.பர. 1 குளி 11.33 என்ற விஸ்தீரணத்தை பிரசித்த நொத்தாரிசு புவீந்திரன் றெக்னோ முகதாவில் 08 ஆம் இலக்கத்தில் 28.08.2016 ஆம் திகதியன்று நிறைவேற்றப்பட்ட அறுதியுறுதியின் மூலம் ஜோர்ஜ் சார்ள்ஸ் மற்றும் பெண் ராகினி ஆகியோருக்கு அறுதியாக விற்றிருந்தார்.

மேற்கூறிய நவரத்தினம் சந்திரமோகன் மற்றும் பெண் வைத்தியர் திலகவதி ஆகியோர் தமது அற்றோனித்தத்துவக்காரரான கிருபானந்தன் கோபாலரட்ணம் என்பவர் மூலம் "ராஜசிங்கம் பனிக்கன் வளவும் புளியந்தறையும்" நி.பர. 3 குளி 3.741 என்ற விஸ்தீரணமுடைய ஆதனத்தில் ஏற்கனவே மேற்குறித்தவாறு அறுதி விற்று மிகுதி நிலப்பரப்பு 1 என்ற விஸ்தீரணத்தை பிரசித்த நொத்தாரிசு புவீந்திரன் றெக்னோ முகதாவில் 09 ஆம் இலக்கத்தில் அம்பிகாதேவி இராஜரட்ணம் என்பவருக்கு 2016.08.29 ஆம் திகதியன்று நிறைவேற்றப்பட்ட அறுதி உறுதியின் மூலம் அறுதியாக விற்றிருந்தனர்.

மேற்குறித்தவாறு குறித்த நவரத்தினம் சந்திரமோகன் மற்றும் பெண் வைத்தியர் திலகவதி ஆகியோரிடமிருந்து ஆதனங்களை கொள்வனவு செய்தவர்களான ஜோர்ஜ் சார்ள்ஸ் மற்றும் பெண் ராகினி என்பவர்கள் முதலாம் புறத்தவர்களாகவும் அம்பிகாதேவி இராஜரட்ணம் என்பவர் இரண்டாம் புறத்தவர்களாகவும் இணைந்து "ராஜசிங்க பனிக்கன் வளவும் புளியடித்தறையும்" நில.பரப்பு 3 குளி 6.893 என்ற விஸ்தீரணமுடைய ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு விக்கினராஜன் ஜெயந்தா முகதாவில் 98 ஆம் இலக்கத்தில் 07.01.2018 ஆம் திகதியன்று நிறைவேற்றப்பட்ட பிரிவிடல் உறுதியின் மூலம் பிரிவிடல் செய்து கொண்டனர்.

மேற்குறித்த பிரசித்த நொத்தாரிசு புவீந்திரன் றென்னோ அவர்களால் 08 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட அறுதியுறுதியில் ராஜசிங்க பனிக்கன் வளவும் புளியடித்தறையும் நிலப்பரப்பு 3 குளி 3.741 என்பது நிலப்பரப்பு 3 குளி 6.893 எனவும் கிணற்றில் அரைவாசியும் 1 என்பதும் சேர்க்கப்படாத காரணத்தினால் குறித்த தவறுகளானது திருத்தப்பட்டு வெளிப்படுத்தப்பட்டு ஜோர்ஜ் சார்ள்ஸ் மற்றும் பெண் ராகினி ஆகியோர் பிரசித்த நொத்தாரிசு சுகன்யா கணேசலிங்கம் முகதாவில் 14.02.2018 ஆம் திகதியன்று 192 ஆம் இலக்கத்தில் வெளிப்படுத்தல் உறுதியானது நிறைவேற்றப்பட்டிருந்தது.

மேலும் பிரசித்த நொத்தாரிசு புவீந்திரன் றெக்னோ அவர்களால் 09 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதியிலும் மேற்குறித் தவாறான தவறுகள் காணப்பட்டமையினால் குறித்த ஆதனத்தை கொள்வனவு செய்தவரான அம்பிகாதேவி இராஜரட்ணம் என்பவர் பிரசித்த நொத்தாரிசு சுகன்யா கணேசலிங்கம் முகதாவில் 12.02.2018 ஆம் திகதியன்று 193 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதி மூலம் திருத்தம் செய்து வெளிப்படுத்தியிருந்தார்.

குறித்த அம்பிகாதேவி இராஜரட்ணம் மேற்குறித்தவாறு திருத்தங்களை செய்து வெளிப்படுத்தியிருந்த போதும் பிரசித்த நொத்தாரிசு விக்கினராஜா ஜெயந்தா அவர்களால் 98 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதியில் காணப்பட்ட தவறுகள் பிரசித்த நொத்தாரிசு சுகன்யா கணேசலிங்கம் முகதாவில் 193 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதியில் வெளிப்படுத்தப்படாததன் காரணத்தினால் பிரசித்த நொத்தாரிசு மேனகா ஜீவதர்சன் முகதாவில் 1431 ஆம் இலக்கத்தில் 16.01.2019 ஆம் திகதியன்று நிறைவேற்றப்பட்ட வெளிப்படுத்தல் உறுதியின் மூலம் திருத்தி வெளிப்படுத்தல் உறுதியொன்றினை நிறைவேற்றியிருந்தார்.

குறித்த அம்பிகாதேவி இராஜரட்ணம் பிரசித்த நொத்தாரிசு சாரா ஜோர்ஜ் முகதாவில் 16.01.2019 ஆம் திகதியன்று 06 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதியின் மூலம் ராஜசிங்க பனிக்கன் வளவும் புளியடித்தறையும் நி.பர. 01 குளி 9.00 மற்றும் நி.பர 0 குளி 7.77 என்ற விஸ்தீரணமுடைய ஆதனங்களை பழனித்துரை பரிமளம் என்பவருக்கு அறுதியாக விற்றிருந்தார்.

குறித்த ஜோர்ஜ் சார்ள்ஸ் மற்றும் பெண் ராகினி ஆகியோர் ராஜசிங்கம் பனிக்கன் வளவும் புளியடித்தறையும் நிலபரப்பு 01 குளி 7.90 என்ற விஸ்தீரணமுடைய ஆதனத்தை பிரசித்த நொத்தாரிசு சாரா ஜோர்ஜ் முகதாவில் 14 ஆம் இலக்கத்தில் 27.02.2019 ஆம் திகதியன்று நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதியின் மூலம் பழனித்துரை கைம்பெண் பரிமளம் என்பவருக்கு நன்கொடையளித்திருந்தனர்.

குறித்த கனகசபாபதி விக்கினேஸ்வரன் என்பவருக்கு செல்லையா செல்வராஜா மற்றும் பெண் சாந்தி ஆகியோர்களால் பிரசித்த நொத்தாரிசு திருமதி.ச.இளங்கோவன் முகதாவில் 9002 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட நன்கொடை உறுதி மூலம் நன்கொடை யளிக்கப்பட்ட இராஜசிங்க பனிக்கன் வளவும் புளியடித்தறையும் நிலப்பரப்பு 2 குளி 8.362 என்ற ஆதனத்தை குறித்த கனகசபாபதி விக்கினேஸ்வரன் பிரசித்த நொத்தாரிசு தர்சினி கனகசபாபதி முகதாவில் 02.03.2019 ஆம் திகதியன்று 433 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதியின் மூலம் ஏற்றுக்கொண்டு ஓர் ஏற்பு உறுதியை நிறைவேற்றினார்.

இல.114/1 கோவில் வீதி யாழ்ப்பாணம் தற்போது **No.46, Blakes Avenue, New Malden, Surrey, KT3 6RL, United Kingdom** இல் வசிக்கும் கனகசபாபதி விக்கினேஸ்வரன் என்பவர் ராஜசிங்க பனிக்கன் வளவும் புளியந்தறையும் நிலப்பரப்பு 6 குளி 8.330 என்ற விஸ்தீரனமுடைய ஆதனத்தில் தனக்குள்ள உரித்தை பிரசித்த நொத்தாரிசு கனகசபாபதி தர்சினி முகதாவில் 02.03.2019 ஆம் திகதியன்று 434 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதியின் மூலம் கைதுறப்புச் செய்திருந்தார்.

2007 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் பதியப்பட்டதும் இல.8 நல்லூர் குறுக்கு வீதி யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ளதுமான **Rubins (Pvt) Ltd** என்ற நிறுவனமானது பிரசித்த நொத்தாரிசு சாரா ஜோர்ஜ் முகதாவில் 08.03.2019 ஆம் திகதியன்று 17 ஆம் இலக்க நிறைவேற்றப்பட்ட உறுதியின் மூலம் இராஜலிங்க பனிக்கன் வளவும் புளியடித்தறையும் நிலப்பரப்பு 6 குளி 8.330 என்ற விஸ்தீரணமுடைய ஆதனத்தை பழனித்துரை கைம்பெண் பரிமளம் என்பவருக்கு அறுதியாக விற்றிருந்தனர்.

ஆதன விபரம்:- வடமாகாணம் யாழ்ப்பாண மாவட்டம் யாழ்ப்பாணப்பகுதி நல்லூர் கோவிற்பற்று இறை "இராஜசிங்க பனிக்கன் வளவும் புளியடித்தறையும்" நில.பர. ஆறு குளி எட்டு தசம் மூன்று மூன்று

கிழக்கும் வடக்கும்:- உத்தரவுபெற்ற நில அளவையாளர் S.நிர்மலேந்திரன் அவர்களால் 23.05.2007 ஆம் திகதி 888 ஆம் இலக்கத்தில் நிறைவேறிய நில அளவைப்படத்தில் துண்டு 1 எனக் காட்டப்பட்ட Dr.நவரெட்ணம் சந்திரமோகன் பெண் திலகவதிக்குரிய ஆதனம்.

மேற்கு:- மாப்பாண முதலியாரும் கஜேந்திரன் பெண் மகேஸ்வரியினதும் ஆதனம்.

தெற்கு:- காசிப்பிள்ளை பெண் நாகேஸ்வரியினதும் கந்தையா கனகரட்ணத்தினதும் ஆதனம்.

இதடங்கலும்.

இவ்வாதனம் தொடர்பான ஆரம்ப தாயுறுதியான 07.01.2012 ஆம் திகதி பிரசித்த நொத்தாரிசு ச.இளங்கோவன் முகதாவில் 7002 ஆம் இலக்கத்தில் நிறைவேற்றப்பட்ட உறுதியில் தாயுறுதி எதுவும் குறிப்பிடாமை காரணமாகவும் குறுகிய காலத்தினுள் இவ்வாதனம் தொடர்பில் ஏராளமான உறுதிகள் நிறைவேற்றப்பட்டமை காரணமாகவும் இப்பத்திரிகை பிரசுரம் மேற்கொள்ளப்பட்டு பொதுமக்களுக்கு அறிவித்தல் தரப்படுகின்றது.

தற்போது பழனித்துரை பரிமளம் இவ்வாதனத்தை தனது பெயரிற்கு எமது பதிவேட்டில் பெயர் மாற்றம் செய்வதற்கு விண்ணப்பித் துள்ளார். எனவே இவ்வாதனத்தின் ஏதேனும் பகுதிக்கு உரிமை கோருபவர் யாராவது இருப்பின் பத்திரிகை பிரசுரித்த திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் உறுதிப்படுத்தப்பட்ட ஆவணங்களுடன் எழுத்து மூலம் அறியத்தருமாறும் உரிமை கோராவிடத்து குறித்த ஆதனமானது பழனித்துரை பரிமளம் என்னும் பெயரிற்கு பெயர்மாற்றம் செய்ய நடவடிக்கை எடுக்கப்படும். இவ்வாதனம் பெயர்மாற்றம் செய்வதால் வரக்கூடிய எப்பொறுப்பிற்கும் யாழ்ப்பாணம் மாநகரசபை பொறுப்பாளி அல்ல என்பதைத் தெரிவித்துக்கொள்கின்றேன்.

(C-9830)

**து.ஈசன், பதில் முதல்வர், யாழ்.மாநகரசபை.**

## கிளிநொச்சியில் 5 நாட்களும் முழங்காவிலில் 3 நாட்களும் பரிசோதனைகள்



(கண்டாவளை)

வெளிநாடுகளிலிருந்து அழைத்து வரப்பட்ட 178 பேர் முழங்காவில் மற்றும் பளை தனிமைப்படுத்தல் முகாம்களில் தங்கவைக்கப்பட்டுள்ளதாக கிளிநொச்சி பிராந்திய தொற்றுநோயியல் வைத்தியர் நிமால் அருமைநாதன் தெரிவித்தார்.

பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் சுகாதார நிலைமைகள் பற்றி கருத்து தெரிவிக்கும் போது கிளிநொச்சி பிராந்திய சுகாதார சேவைகள் பிரிவிற்கு உட்பட்ட பாடசாலைகள் யாவும் மலேரியா தடைஇயக்கத்தினரின் உதவியுடன் தொற்றுநீக்கம் செய்யப்பட்டுள்ளன. பாடசாலைகளுக்கு வருகைதரும் ஆசிரியர் கள் மாணவர்கள் உரிய சுகாதார நடை முறைகளை பின்பற்றுமாறு குறிப்பிட்டுள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

தற்போது லெபனான் நாட்டிலிருந்து அழைத்து வரப்பட்ட 74 பேர் இயக்கச்சியில் அமைந்துள்ள தனிமைப்படுத்தல் மையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளதுடன், இவர்களுக்கான முதற்கட்ட பரிசோதனைகள் நிறைவுபெற்று இரண்டாவது பரிசோதனைகள் இந்தவாரம் மேற்கொள்ளப்படவுள்ளன.

இதனைவிட வியட்நாம், மாலைதீவு ஆகிய நாடுகளிலிருந்து அழைத்து வரப்பட்ட 104 பேர் முழங்காவில் தனிமைப்படுத்தல் மையத்தில் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான முதற்கட்ட பரிசோதனைகள் நிறைவு பெற்றுள்ளன.

இதேநேரம் கிளிநொச்சி மாவட்ட பொது வைத்தியசாலைகளில் காய்ச்சல், த டிமன் போன்ற அறிகுறிகளுடன் வரும் நோயாளர்களுக்கு வாரத்தில் ஐந்து நாட்களும் முழங்காவில் வைத்தியசாலையில் வாரத்தில் மூன்று நாட்கள் இப்பரிசோதனை மேற்கொள்ளப்படுகின்றது என்றும் தெரிவித்தார். (4-5-315)

## 50 ஏக்கர் காடு தீக்கிரை



(மொனராகலை)

மொனராகலை தம்பகல்ல பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பொல்கல்ல காட்டுப்பகுதியில் நேற்று முன்தினம் தீ பரவியதில் 50 ஏக்கரிற்கும் மேற்பட்ட நிலப்பரப்பு எரிந்து நாசமாகியுள்ளது.

ஒருமணி நேரத்தில் குறித்த காட்டுப் பகுதியில் தீ வேகமாகப் பரவியுள்ளது.

ஆயினும் இராணுவத்தினரின் உதவியுடன் தீ முழுமையாகக் கட்டுப்பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. (ஜ-4)


**மணமகள் தேவை**

யாழ்.இந்து கௌரவ குடும்பம் - 1980 திருவாதிரை 15 1/2 கிரகபாவம் செவ்வாய் குற்றம் இல்லாத மணமகனுக்கு பொருத்தமான மணமகளைத் தேடுகின்றோம்.

**தொடர்புகளுக்கு**

**0773597310**

**0773567644**

(C-9833)



யாழ்ப்பாணம் - வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் தேர்த்திருவிழா நேற்று முன்தினம் சனிக்கிழமை காலை சிறப்பாக இடம் பெற்றது.
(படங்கள்:- சிவசாந்தன்)





வரலாற்று சிறப்புமிக்க முல்லைத்தீவு ஒட்டுசுட் டான் தான்தோன்றீஸ்வரர் ஆலய தீர்த்தத் திருவிழா நேற்று முன்தினம் இடம் பெற்றது.
(படம்:- பனிக்கன்குளம் செய்தியாளர்)




# ஸ்ரீ ருணவிமோக்ஷண சாயிநாதர் பிரதிஷ்டா ஏககுண்ட பக்ஷ

மஹா கும்பாபிஷேக பெருவிழா-09.07.2020

கிரியாரம்பம் - 05.07.2020 ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி

பாற்காப்பு - 06.07.2020 - திங்கட்கிழமை
07.07.2020 - செவ்வாய்க்கிழமை
08.07.2020 - புதன்கிழமை
ஆகிய மூன்று நாட்களும் காலை 10 மணி முதல் மாலை 6 மணி வரை பக்தர்கள் பால்சாற்றலாம்

மஹா கும்பாபிஷேகம் - 09.07.2020 - வியாழக்கிழமை
காலை 7.28 மணி முதல் 8.58 மணிக்கு

பிரதம குரு
பிரம்மஸ்ரீ வா.ஜெயவஸ்தாங்க குருக்கள்

குறிப்பு:- அன்னதானம், பிரசாதம் வழங்கப்படமாட்டாது. அடியவர்கள் கைகள் கழுவி, முகக்கவசம் அணிந்து சமூக இடைவெளி பேணி சாயிநாதர் பூசையில் கலந்து கொள்ளலாம்

(3212)

"ஈழத்து சீரடி சாயி மந்திர்"
314, நாவலர் வீதி, நல்லூர்,
யாழ்ப்பாணம்
T.P.0777222568


# fb (f)ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... 2067 facebook

**சரண்ராஜ்**

மனைவி- ஏங்க...சனிப்பெயர்ச்சிக்கும், குருப்பெயர்ச்சிக்கும் என்ன வித்தியாசம்?



கணவன்- நீ ஊருக்கு போனா அது சனிப்பெயர்ச்சி, அது வே நீ உன் உன் தங்கையோட வந்தா குருப்பெயர்ச்சி!

**லாவண்யா**

நல்லவன் என்ற பெயரை மட்டும் எடுத்து விடாதே, பிறகு ஆயுள் முழுவதும் நல்லவனாக நடிக்க வேண்டும்.



கெட்டவன் என்ற பெயருடனே வாழ்ந்து விடு.நல்லவனாக...

**சுகுமார்**

அய்ய்ய் குட்டி பையா சட்டை சூப்பரா இருக்கே... தீபாவளிக்கு எடுத்ததா?



இல்ல... எனக்கு எடுத்தது!

**வந்தனா**

அணிலுக்கும், ஆமைக்கும் லெட்டர் போட்டா எதுக்கு முதலில் போய் சேரும்... தெரியலையே பாப்பா?



அணிலுக்குத் தான்... ஏன்னா அதுக்குத் தான் பின் கோடு இருக்கே!

**கண்ணன்**

ஏதோ சொல்லவந்து சொல்லாமலே விட்டுவிட்டதைப்போலவே முடிந்து விடுகிறது.



மகன்களுடனான அம்மாக்களின் கைபேசி உரையாடல்!

**ஜான்சன்**



விலையுயர்ந்த பரிசு பொருட்கள் மீது ஆசையில்லாத உணவின் மீது ஆசையுள்ள ஒரு பெண்ணை திருமணம் செய்ய வேண்டும்...

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

# 420 கிராம் கஞ்சா தொடர்பில் ஒருவர் பொலிஸாரிடம் சரண்

(யாழ்ப்பாணம்)

மண்டைதீவில் 420 கிலோகிராம் கஞ்சா மீட்கப்பட்ட சம்பவத் துடன் தொடர்புடைய நபர் ஒருவர் பொலிஸில் சரணடைந்துள்ளார்.

மண்டைதீவு கடற்பகுதியில் 420 கிலோ கஞ்சா மீட்கப்பட்ட சம்பவத்தில் குருநகர் பகுதியை சேர்ந்த ஒருவர் யாழ்ப்பாணம் பொலிஸ் நிலையத்தில் நேற்று முன்தினம் சரணடைந்துள்ளார்.

இந்த சம்பவம் தொடர்பில் மேலும் தெரிய வருவதாவது, கடலில் வீசப்பட்ட நிலையில் 420 கிலோ கிராம் கஞ்சா போதைப்பொருள் பொதிகள் கடற்படையினரால் கடந்த வெள்ளிக்கிழமை மீட்கப்பட்டது.

மண்டைதீவு கடற்படையினர் வழமையான கடல் ரோந்து நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த போது, கஞ்சா போதைப் பொருள் பொதிகள் மீட்கப்பட்டன.

அதனைத் தொடர்ந்து விசாரணைகளை முன்னெடுத்த பொலிஸார் படகு எஞ்சின் ஒன்றையும் சந்தேக நபர் ஒருவரையும் கைது செய்தனர்.

இந்நிலையில் இந்த சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் ஒருவர் நேற்று முன்தினம் யாழ்ப்பாணப் பொலிஸாரிடம் சரணடைந்துள்ளார். (4-5-114)

# நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயத்தில் 25 ஆவது ஆண்டு நினைவுப்பிரார்த்தனை

(யாழ்ப்பாணம்)

நவாலி சென்.பீற்றர்ஸ் தேவாலயம் மீதான தாக்குதலில் கொல்லப்பட்ட 147 பேரின் 25 ஆவது ஆண்டு நினைவு எதிர்வரும் 9 ஆம் திகதி வியாழக்கிழமை பிற்பகல் 4.30 மணியளவில் ஆலயத்தில் விசேட திருப்பலி பூசை வழிபாடு இடம்பெறவுள்ளது.

இதில் 15 இற்கும் மேற்பட்ட குருமார்களின் பங்களிப்புடன் உரிய சமூக இடைவெளி மற்றும் சுகாதார நடைமுறைகளுக்கு இணங்க இடம்பெறும் என நவாலி சென்.பீற்றர்ஸ் ஆலய பங்குத் தந்தை அலின் கருணாகரன் அறிவித்துள்ளார்.

தேவாலயத்தில் கொல்லப்பட்டவர்களின் 25 ஆவது ஆண்டு நினைவு தினத்தில் அவர்களின் விபரங்கள் பொறிக்கப்பட்ட நினைவுக்கருங்கல் திரை நீக்கம் செய்யப்படவுள்ளது. (4-5)

## 4 ஆம் ஆண்டு நினைவு அஞ்சலி

அமரர்.

### N.K.முருகையா



அளவெட்டிப் பதியில் ஆன்றோனாக வாழ்ந்து வையம் போற்றும் வைத்தியசாலை பணிபுரிந்து விண்ணுலகத் தெய்வத்திடம் சென்றடைந்த நான்காம் ஆண்டு நினைவு நாளில் அன்னாரின் ஆத்மா சாந்தி வேண்டி பிரர்த்திக்கின்றோம். [3203]

உங்கள் நினைவுகளுடன்
மனைவி – இரட்ணேஸ்வரி, பிள்ளைகள் – கஜன், ரவிப்பிரியா
மருமக்கள் – வசந்தகுமார், விஜயமணி
பேரப்பிள்ளைகள் – தனுஷ்கா, கபிலாஸ், லக்ஷனா

அளவெட்டி தெற்கு,
அளவெட்டி.



அரியாலை சக்தி கலாசார அபிவிருத்தி மன்றத்தின் 18 ஆம் ஆண்டு நிறைவு நிகழ்வு அண்மையில் நடைபெற்றது. இதில் புனித பத்திரிசியார் கல்லூரி மாணவன் ரைற்றஸ் துகிஷ் "நல்லபிள்ளை" விருதை பெற்றுக்கொண்டார். இவ்விருதை யாழ். பல்கலைக்கழக முன்னாள் துணைவேந்தர் பேராசிரியர் கலாநிதி என். சண்முகலிங்கன் வழங்கினார். (4-5)

## மரண அறிவித்தல்

### வேலுப்பிள்ளை நாகராசா



தாய் மடியில் 1957.12.15 இறைவன் அடியில் 2020.06.20

யாழ்ப்பாணம், வடமராட்சி, நவிண்டிலைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட **வேலுப்பிள்ளை நாகராசா** அவர்கள் கடந்த 20.06.2020 அன்று சுவிஸ் நாட்டில் (wald eggs trasse 1/603, 3097 Liebe fekl, Switzerland) இறைவனடி சேர்ந்தார். அன்னார் அமரர்களான வேலுப்பிள்ளை- பாக்கியம் அவர்களின் அன்பு மகனும், அமரர்கள் வேலுப்பிள்ளை- சின்னக்கண்டு அவர் களின் அன்பு மருமனும் பர மேஸ்வரியின் அன்புக்கணவரும், ராதிகா (சுவிஸ்), ரதீபன், ரமணதீபன், ரம்மியா அவர்களின் அன்புத் தந்தையும் மதிகுமாரன் (சுவிஸ்), பிரதீபன் ஆகியோரின் அன்பு மாமானாரும் ரித்திகா (சுவிஸ்), தனுஷ்கா (சுவிஸ்), ரஷ்வின் ஆகியோரின் அன்புப் பேரனும் சிவபாதராசா, யோகராசா, வரதராசா, இராஜேஸ்வரி, புஸ்பலீலா, பரமேஸ்வரி, வாகீஸ்வரி ஆகியோரின் அன்புச் சகோதரனும் சிவஞானம் (அப்பன்-சுவிஸ்), சிவதேவி, வள்ளிப்பிள்ளை, அமரர் கந்தசாமி,தவராசா, மகாலிங்கம், அமரர் வசந்தகுமார் (ஐயாத்துரை) அவர்களின் அன்பு மைத்துனரும் ஆவார்.

அன்னாரது இறுதிச் சடங்குகள் நாளை 07.07.2020 செவ்வாய்க்கிழமை இலங்கை நேரம் பி.ப 5.00 மணியளவில் சுவிஸிலுள்ள அவரது இல்லத்தில் நடைபெற்று நல்லடக்கத்திற்காக பூதவுடல் சுவிஸ் நாட்டிலுள்ள Bremgarten Cemetery, Myrten Strasse 51, 3008 Bern, 0313217111 என்னுமிடத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ்வறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

"அன்னை இல்லம்", நவிண்டில்,
கரணவாய் வடக்கு, கரவெட்டி.

தகவல்:
குடும்பத்தினர். (3206)

## மரண அறிவித்தல்

### திருமதி.இராசரத்தினம் விசாலாட்சி

(சில்வா வீதி, வட்டக்கச்சி)



காரைநகர் வேதரடைப்பைப் பிறப்பிடமாகவும் 903, சில்வா வீதி, வட்டக்கச்சியை நிரந்தர வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி.விசாலாட்சி இராசரத்தினம் நேற்று அதிகாலை சிவபதமடைந்துள்ளார். அன்னார் காலஞ்சென்றவர்களான கதிரவேலு பூசாரி சுந்தரம் தம்பதியரின் பாமிகு மகளும், கணபதிப்பிள்ளை பார்வதி தம்பதியரின் மருமகளும், இராசரத்தினத்தின் அன்பு மனைவியும், காலஞ் சென்றவர்களான பார்வதி (தேவி), பாக்கியம் மற்றும் தியாகராசா (ஓட்டோ அச்சகம்-கொழும்பு) ஆகியோரின் அன்புச் சகோதரியும், பேரின்பநாதன் (யாழ்.பன்சி, யாழ்ப்பாணம்), இந்திராதேவி, பாக்கியநாதன் (ஆசிரிய ஆலோசகர் வவுனியா வடக்கு கல்வி வலயம்), பற்பநாதன் (திருத்தணிகை பல்பொருள் வாணிபம் சில்வா வீதி, வட்டக்கச்சி), சத்தியநாதன் (கிராம அலுவலர் வட்டக்கச்சி) ஆகியோரின் பாசமிகு தாயாரும், அமரர் ரஞ்சனாதேவி (ஓய்வு நிலை ஆசிரியர்) மற்றும் கணேசமூர்த்தி (ஓய்வுநிலை ஆசிரியர்), சிறீவாணி (ஆசிரியர் வவுனியா சுந்தரபுரம் சரஸ்வதி வித்தியாலயம்), தனலட்சுமி (ஆசிரியர் வட்டக்கட்சி ஆரம்ப வித்தியாலயம்), றஞ்சிதமலர் ஆகியோரின் அன்பு மாமியும், கஜனன், துவாரகன், பிரசாந்தன், பிரசன்னா, கிருஷாந், வித்தகன், வதுசன், நிவேதனா, யிதுர்சனா, லச்சனா ஆகியோரின் பாசமிகு பேர்த்தியுமாவார்.


அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று 06.07.2020 திங்கட்கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக மம்பில் இந்து மயானத்திற்கு எடுத்தச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

903, சில்வா வீதி,
வட்டக்கச்சி, கிளிநொச்சி.

தகவல்:
குடும்பத்தினர். (C-9849)

# பாரதம்

# பீகாரில் சீரற்ற காலநிலை 21 பேர் உயிரிழப்பு!



(பீகார்)

பீகாரில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக நேற்று முன்தினம் மாத்திரம் இடி, மின்னல் தாக்கத்திற்கு உள்ளாகி 21 பேர் உயிரிழந்துள்ளதாக பேரிடர் மீட்புக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

குறித்த அனர்த்தத்தில் உயிரிழந்தவர்களின் குடும்பத்தினருக்கு தலா 4 இலட்சம் ரூபாய் இழப்பீடு வழங்கப்படவுள்ளதாக அம்மாநில முதலமைச்சர் நிதிஷ்குமார் அறிவித்துள்ளார்.

இதேவேளை பீகார், அசாம் உள்ளிட்ட மாநிலங்களில் பெய்து வரும் கனமழை காரணமாக இதுவரை சுமார் 100 இற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# ஜப்பான

# 15 பேர்

## 13 பேர்

(டோக்கியோ)

ஜப்பானில் ஏற்பட்டுள்ள ெ

மண் சரிவு காரணமாக

உயிரிழந்ததுடன் மேலும் 13

# சீன எல்லைப் பகுதியில் இந்தியப்போர் விமானங்கள்

(பீஜிங்)

சீனாவின் எல்லையை ஒட்டிய பகுதிகளில் இந்திய விமானப்படையின் போர் விமானங்கள் வட்டமிட்டு வருவதாக இந்திய ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

இந்தியா கொள்முதல் செய்துள்ள அமெரிக்க மற்றும் ரஷ்யாவின் தயாரிப்பான சரக்கு விமானங்களும் எல்லைப்பகுதிக்கு வந்து செல்வதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



இதன் காரணமாக குறித்த பகுதியில் பதற்றம் நிலவுவதாக இந்திய ஊடங்கள் குறிப்பிட்டுள்ளன.

அனைத்து வித சவால்களையும் சந்திப்பதற்கு தயார் நிலையில் இருப்பதாக விமானப்படை அதிகாரிகள் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# சிறு வர்த்தகர்களு சட்டவரைபில் ட்ரம்

(வோஷிங்டன்)

அமெரிக்க சிறு வர்த்தகர்கள் தமக்கான நிவாரணக் கடன் தொகைக்காக விண்ணப்பிக்கும் இறுதித் திகதியை நீடிப்பது தொடர்பான சட்ட வரைபில் அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்ப் நேற்று முன்தினம் சனிக்கிழமை கையெழுத்திட்டுள்ளார்.

அதனடிப்படையில், குறித்த கடனுக்காக விண்ணப்பிக்கும் கால எல்லையானது எதிர்வரும் ஒகஸ்ட் மாதம் 8 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் பரவல் பெருந்தொற்றினால் பாதிக்கப்பட்டிருந்த அமெரிக்க நிறுவனங்கள் தமது ஊழியர்களுக்கான சம்பளக் கொடுப்பனவுகளை வழங்குவதற்கும் ஊழியர்களை வேலை நிறுத்தம் செய்வதை தடுப்பதற்குமான குறித்த கடன் உதவித்திட்டம், கடந்த ஏப்ரல் மாதம் ஆரம்பிக்கப்பட்டிருந்த நிலையில், அதற்காக விண்ணப்பிக்கும் கால எல்லை மேலும் ஐந்து வாரங்களுக்கு நீடிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை குறித்த திட்டத்துக்காக காங்கிரஸ் கட்சியினால் வழங்கப்பட்ட 659 பில்லியன் டொலர் தொகையில்ஏறக்குறைய 130 பில்லியன் டொலர் தொகை மீள வழங்கப்படும் நிலையில் உள்ளது.

இந்நிலையில், குறித்த தொகையினை அமெரிக்காவின் சிறு வர்த்தகர்களுக்கு பகிர்ந்து வழங்குவதில் அதிகாரிகள் தொடர்ந்தும் நெருக்கடிகளை எதிர்கொள்ள நேரிடும் என விமர்சக

# ஐரோப்பிய ஒன்றியத்தின் கட்டுப்பாடுகளை ஒருபோதும் ஏற்றுக்கொள்ள முடியாது

## வெளிப்படையாக எதிர்க்கும் கிறீஸ்



(கிறீஸ்)

கொரோனா வைரஸ் தொடர்பாக ஐரோப்பிய ஒன்றியத்தால் விதிக்கப்பட்டுள்ள இறுக்கமான கட்டுப்பாடுகளை ஏற்றுக்கொள்ள முடியாது என தென்கிழக்கு ஐரோப்பிய நாடான கிறீஸ் தெரிவித்துள்ளது.

சர்வதேச ஊடகமொன்றுக்கு கருத்துத் தெரிவித்துள்ள அந்நாட்டின் பிரதமர் கிரியாக்கோஸ் மிற்சோரேக்கிஸ் (Kyriakos Mitsotakis) இத்னை தெரிவித்துள்ளார்.

இதன்போது மேலும் கருத்து தெரிவித்துள்ள அவர், கிறீஸ் நாடானது பலவகையில் மேம்பட்டுவிட்டது. நாம் எமது நாட்டின் சொந்த மீளுருவாக்கத்தில் ஈடுபட வேண்டும் எனத் தெரிவித்துள்ளார்.

மேலும் ஐரோப்பிய ஒன்றியத்தினால் மேற்கொள்ளப்படும் ஆறு மாதங்களுக்கு ஒரு முறையான பொருளாதார நடை முறைகள் போதுமானவை. மேலதிக இறுக்கமான கட்டுப்பாடுகள் தேவையற்றவை எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

ஏறக்குறைய தசாப்த கால கடன் நெருக்கடியில் இருந்து கடந்த 2018 ஆம் ஆண்டு மீண்ட கிறீஸ் 2020 ஆம்ஆண்டு பாரிய பொருளாதார வளர்ச்சிக்கான திட்டங்களை முன்னெடுக்க திட்டமிட்டிருந்தது.


எனினும் நாடளாவிய ரீதியில் முன்னெடுக்கப்பட்ட முடக்கம் காரணமாக அவை அனைத்தும் பாதிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

# வலம்புரி கல்விப் பிரிவு வழங்கும் தரம்-5 மாணவர்களுக்கான புலமைப்பரிசில் மாதிரி வினாத்தாள்

**நேரம்: 45 நிமிடம்** **வினாப்பத்திரம் - 01**

● சோடிச் சொற்களுக்கு மிகவும் பொருத்தமான உருவைத் தெரிவுசெய்க.

1. பயணம் - நீர்



(1) (2) (3)

2. ஒளி - ஒலி



(1) (2) (3)

● மிகவும் குறைந்த தொடர்புள்ள உருச்சோடி இருக்கும் அடைப்பைத் தெரிவுசெய்க.

3.




(1) (2) (3)

4.




(1) (2) (3)

5. அம்புக்குறிகள் மூலம் காட்டப்படும் பாதைகள் வழியே A இலிருந்து B வரைக்கும் செல்வதற்கான தூரம் கூடிய பாதையைக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.





(1) (2) (3)

6. வெற்றிடத்துக்குப் பொருத்தமான விடையைத் தெரிவுசெய்க.



(1) (2) (3)

7. முதலில் தரப்பட்டுள்ள உருவை ஒத்த உருவைத் தெரிவுசெய்க.



(1) (2) (3)

8. "கனகாம்பரம்" என்னும் சொல்லில் உள்ள எழுத்துக்கள் மூலம் ஆக்க முடியாத சொல்.

(1) காரம் (2) கரம் (3) ராகம்


9. ஒரே கருத்துடைய சொற்கள் அமைந்திராத விடையைத் தெரிவுசெய்க.

(1) கங்கை - நதி (2) ஊர்தி - வாகனம் (3) இடம் - ஊர்

10. 135 , 246 , 357 , .......... , 579 கோலத்திற்கேற்ப வெற்றிடத்தில் இருக்கவேண்டிய விடையைத் தெரிவுசெய்க.

(1) 468 (2) 456 (3) 4810

11. அருகில் உள்ள உருவிற்கேற்ப




1 = 14 உம், 7 = 5 உம் , 3 = 1 உம் எனின், 4 = ........... இன் பெறுமானம் யாது?

(1) 11 (2) 8 (3) 15

● அடைப்பில் உள்ள சொற்களுக்கும் ஆங்கில எழுத்துக்களுக்கும் ஏற்ப 12, 13 ஆம் வினாக்களுக்கு விடை தருக.

| | | | | | |
|---|---|---|---|---|---|
| நாம் | = | A | இவ்வருடம் | = | E |
| புத்தாண்டாக | = | B | இனிய | = | F |
| உதவி | = | C | அமையட்டும் | = | G |
| ஏழைகளுக்கு | = | D | செய்வோம் | = | H |


12. அர்த்தமுள்ள வாக்கியமாக அமையும் பொருத்தமான எழுத்துக்களின் கூட்டம் எது?

(1) ADCH (2) ACEH (3) DEFG

13. வாழ்த்தினைக் குறிப்பிடும் பொருத்தமான எழுத்துக்களின் கூட்டம் யாது?

(1) AFDE (2) EFBG (3) CBEG

14. முதலில் தரப்பட்டுள்ள உருவை முகம் பார்க்கும் கண்ணாடியில் பார்க்கும் போது தெரியும் தோற்றத்தைத் தெரிவுசெய்க.



(1) (2) (3)

15. பின்வருவனவற்றுள் சமச்சீர் அற்ற உருவைத் தெரிவுசெய்க.




(1) (2) (3)

16. வளைகோடுகளை மாத்திரம் பயன்படுத்தி வரையப்படாத உரு எது?




(1) (2) (3)

17. உருவில் காட்டப்பட்டுள்ள தாளை முதலில் முறிந்த கோடுகள் வழியே மடித்துப் பின்னர், புள்ளிக்கோடுகள் வழியே வெட்டும்போது கிடைக்கும் நாற்பக்கல்களினதும், முக்கோணிகளினதும் எண்ணிக்கை யாது?




(1) 2 , 4
(2) 0 , 4
(3) 2 , 2

18.  இற்கு  எனின்  இற்கு ............ ஆகும்.



(1) (2) (3)

19. மார்ச் மாதம் 1ஆம் திகதி வியாழக்கிழமை ஆகும். அம்மாதம் 27ஆம் திகதி என்ன நாள் ஆகும்?

(1) வியாழன் (2) புதன் (3) செவ்வாய்

20. விளிம்புகளின் எண்ணிக்கை 12 ஆகவுள்ள திண்மத்தின் உச்சிகள் 8 எனின், அத்திண்மத்துக்குக் காணப்படும் முகங்களின் எண்ணிக்கை யாது?

(1) 6 (2) 4 (3) 5

21. இரு பக்கங்களிலும் சமமான பெறுமானத்தைக் காட்டக்கூடிய கோவையைத் தெரிவுசெய்க.

(1) ✶△⦸○□ = 25334


(2) ⦸□□△✶ = 34452

(3) ○⦸⦸✶△ = 35427

22. மிருகக்காட்சிச்சாலை பார்க்கச் செல்வதற்காக மாணவர்களுக்கு ரூ.20 உம், பெரியவர்களுக்கு ரூ. 60 உம் நுழைவுக்கட்டணமாக அறவிடப்பட்டது. ஒரு பாடசாலையில் இருந்து சென்ற மாணவர்கள், ஆசிரியர்களிடமிருந்து ரூ. 1100 நுழைவுக் கட்டணமாக அறவிடப்பட்டதெனின், குறித்த பாடசாலையில் இருந்து சென்ற மாணவர்களினதும், ஆசிரியர்களினதும் எண்ணிக்கையை முறையே காட்டும் விடையைத் தெரிவுசெய்க.

(1) 30 உம் 10 உம் (2) 35 உம் 5 உம் (3) 40 உம் 5 உம்

23.இவ்வுருவில் உள்ள சதுரங்களின் மொத்த எண்ணிக்கை யாது?



(1) 15
(2) 13
(3) 16

24. நிசாந்தன் I தொடக்கம் X வரையான உரோமன் எண்களை பிளாஸ்ரிக் இலக்கங்களில் பொறிப்பதற்காகச் சென்றபோது அவ்விலக்கங்களில் உள்ள ஒவ்வொரு கோட்டுக்கும் ரூ.5 வீதம் செலுத்தினான். அவ்வெண்கள் அனைத்தையும் பொறிப்பதற்காக அவன் செலவுசெய்த பணம் எவ்வளவு?

(1) ரூ. 50 (2) ரூ. 100 (3) ரூ. 140

25. A இனுடைய இரண்டு ஆண் மக்களும் B யும் C யும் ஆகும். B இனுடைய இரண்டு பெண் மக்களும் D யும் E யும் ஆகும். E இற்கு C என்ன உறவு முறையுடையவர்?

(1) மாமா (2) சித்தப்பா (3) மாமி

26. தோட்டமொன்றில் ஒவ்வொரு மணித்தியாலத்துக்கும் மல்லிகைப் பூக்கள் மூன்று மடங்காக அதிகரித்துக் காணப்படும். குறித்த தினம் மு.ப.8.00 மணிக்கு 27 பூக்கள் காணப்பட்டன எனின், அன்றைய தினம் மு.ப.6.00 மணிக்கு எத்தனை பூக்கள் பூத்திருக்கும்?

(1) 18 (2) 9 (3) 3

27. விடுமுறைக்காக அண்ணா இன்று வீட்டுக்கு வந்துள்ளார். இன்று புதன் கிழமை ஆகும். நாளை 18ஆம் திகதியாகும். ஞாயிற்றுக்கிழமை மீண்டும் செல்வார். அண்ணா செல்லும் திகதி யாது?

(1) 21 (2) 20 (3) 22


28. புதுவருட தினத்தினை முன்னிட்டு 6 நண்பர்கள் ஒருவருக்கொருவர் வாழ்த்து அட்டைகளைப் பரிமாறிக் கொண்டனர். எனவே, அவர்கள் அறுவரும் பரிமாறிய வாழ்த்து அட்டைகளின் எண்ணிக்கை யாது?

(1) 36 (2) 30 (3)25

29. குறித்த தினமொன்றில் விமலன் நிமலனை விட முன்னர் பாடசாலைக்கு வந்தான். கமலன் அமலனை விட முந்தி வந்த போதும் நிமலனை விட பிந்தியே வந்தான். இவர்களுள் குறித்த தினம் பாடசாலைக்கு தாமதமாக வந்தவர் யார்?


(1) நிமலன் (2) கமலன் (3) அமலன்

30. சம பக்கங்களையுடைய இரு முக்கோணிகளைக் கொண்டு ஆக்க முடியாத உரு எது?



(1) (2) (3)

31. ஒரு சம்பவம் தொடர்பான 4 உருக்கள் கீழே தரப்பட்டுள்ளன.



A B C D

தரப்பட்டுள்ள உருக்களைச் சம்பவத்துக்கேற்ப ஒழுங்குபடுத்தும் போது பின்வருவனவற்றுள் எது சரியான விடையாகும்?

(1) CABD (2) CBAD (3) CADB

32. ஒரு பேருந்தில் மூவர் வீதம் அமரத்தக்க 10 பயணி ஆசனங்களும், இருவர் வீதம் அமரத்தக்க 10 பயணி ஆசனங்களும், நான்கு பயணிகள் அமரத்தக்க ஒரு பயணி ஆசனமும் உள்ளன. அப்பேருந்தில் அமர்ந்து செல்லத்தக்க பயணிகளின் ஆகக்கூடிய எண்ணிக்கை யாது?

(1) 21 (2) 60 (3) 54

33. இரு நகரங்களுக்கிடையில் தினமும் 6 மணித்தியாலத்துக்கு ஒரு கடுகதிப் பேருந்தும், 12 மணித்தியாலத்துக்கொரு முறை சாதாரண பேருந்தும் கடமையில் ஈடுபடுகின்றன. குறித்த இரு நகரங்களுக்கிடையே ஒரு வாரத்துக்கு நிகழும் பேருந்துச் சேவைகளின் எண்ணிக்கை யாது?


(1) 114 (2) 42 (3) 48

34. பொதியொன்றைத் தபாலில் அனுப்புவதற்கு முதல் 500g நிறைக்கும் ரூ.100 உம்,மேலதிகமான ஒவ்வொரு 500g இற்கும் ரூ.75 உம் அறவிடப்படும். 4kg நிறையுடைய பொதியைத் தபாலில் அனுப்பச் செலவாகும் தொகை யாது?

(1) ரூ. 650 (2) ரூ.625 (3) ரூ.750


● எண்கோலங்களை அவதானித்து வெற்றிடத்துக்குப் பொருத்தமான எண்ணைத் தெரிவுசெய்க.

35.





(1) 12 (2) 18 (3) 36

36.




(1) 20 (2) 16 (3) 24

37. மூன்று வட்டங்கள், இரண்டு செவ்வகங்கள், மூன்று முக்கோணிகளைக் கொண்ட உரு யாது?




(1) (2) (3)

38. ஒரு விரிக்கப்பட்ட சதுரமுகியின் உரு அருகில் காட்டப்பட்டுள்ளது. இவ்வுருவை மடித்து ஒரு சதுரமுகியை ஆக்கும் போது கிடைக்கும் உரு தொடர்பாக பின்வரும் கூற்றுக்களுள் சரியானது எது?

(1) அருகில் உள்ள பக்கங்களில் உள்ள எண்களின் கூட்டுத்தொகை சமமாகும்.

(2) எதிர்ப்பக்கத்திலுள்ள எண்களின் கூட்டுத்தொகை சமமாகும்.

(3) எதிர்ப்பக்க எண்களின் கூட்டுத்தொகை 3 இன் மடங்காக இருக்கும்.




39. ஒரு பெட்டியில் கறுப்பு நிறப்பந்துகளை விட 3 மடங்கு நீல நிறப்பந்துகளும், நீல நிறப்பந்துகளை விட 2 மடங்கு மஞ்சள் நிறப்பந்துகளும் உள்ளன. பெட்டியினுள் உள்ள பந்துகள் எத்தனை?

(1) 10 (2) 15 (3) 22

40. குறித்த ஒரு தினம் மாலை நேரம் வகுப்பினை முடித்துச் சென்ற அமலா தனது வலதுபுறம் வானவில்லை அவதானித்தாள். அவள் முன்னோக்கிச் சென்ற திசை யாது?

(1) வடக்கு (2) கிழக்கு (3) தெற்கு

# வலம்புரி கல்விப் பிரிவு வழங்கும் க.பொ.த. சாதாரண தரப்பரீட்சை விஞ்ஞானம் மாதிரி வினாத்தாள்

**நேரம்: ஒரு மணித்தியாலம்** **வினாப்பத்திரம் - 01**

எல்லா வினாக்களுக்கும் விடையளிக்கவும்.
தரப்பட்டுள்ள விடைகளுள் மிகச் சரியான விடையைத் தெரிவு செய்க.

1) பின்வரும் முள்ளந்தண்டுளி வகுப்புகளுள் மனிதன் உள்ளடக்கப்பட்டிருக்கும் வகுப்பாக அமைவது எது?

1. ஈரூடகவாழி  2. நகருயிர்
3. பாலூட்டி  4. ஆவேசு

2) பின்வருவனவற்றுள் ஒரு எண்ணிக் கணியமாக அமையும் கணியத்தைத் தெரிவு செய்க.

1. இடப்பெயர்ச்சி  2. விசை
3. ஆர்முடுகல்  4. நேரம்

3) மனிதப் பெண் இனப்பெருக்கத் தொகுதியில் முளையம் உட்பதிக்கப்படும் அங்கம் எது?

1. கருப்பை  2. சூலகம்
4. யோனி  4. பலோப்பியன் குழாய்

4) காகித நிறப்பதிவியல் முறை மூலம் பச்சையக் கரைசலின் கூறுகளை வேறாக்கும் செயன்முறையில் பச்சையக் கரைசல் குறிப்பிடப்படுவது,


1. கரைப்பான்  2. ஆவிப்பறப்பற்ற கலவை
3. நிலையான அவத்தை  4. மேற்கூறிய யாவும் சரி

5) தாவரங்களிலுள்ள குளோரோபில் நிறப்பொருளின் தொழிலாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

1. ஒளியை அகத்துறிஞ்சல்  2. புரதத் தொகுப்பு
3. வாயுப் பரிமாற்றம்  4. கல்சுவரை ஆக்குதல்

6) பின்வருவனவற்றுள் செப்புசல்பேற்று நீருடன் கொடுக்கும் நிறமாக அமைவது எது?

1. வெள்ளை  2. இளஞ்சிவப்பு
3. நீலம்  4. கடும் ஊதா

7) 


மூக் குத்திப் பூண்டுத் தாவரத் தண்டின் குறுக்கு வெட்டுமுகத் தோற்றம் ஒளிநுணுக்குக் காட்டி ஒன்றினூடாக அவதானிக்கும் போது காணப்படும் வடிவம் உருவில் காட்டப்பட்டுள்ளது. இதில் A, B எனக் காட்டப்பட்டுள்ளஇழையங்கள் முறையே,


1. உரிய இழையம், காழ் இழையம்
2. நிலையிழையம், பிரியிழையம்
3. A,B இரண்டும் ஒட்டுக் கல இழையம்
4. A,B இரண்டும் பிரியிழையம்

8) பின்வருவனவற்றுள் ஒரு மின்சாதனத்தின் வலுவைக் கணிப்பதற்குத் தேவையான கணியங்களைச் சரியாகக் குறிப்பிடும் தொகுதியைத் தெரிவு செய்க.

1. அழுத்த வேறுபாடும் நேரமும்
2. மின்னோட்டமும் நேரமும்
3. அழுத்த வேறுபாடும் மின்னோட்டமும்
4. தடையும் நேரமும்

9) பின்வருவனவற்றுள் அங்கிகளின் உடலில் காணப்படும் புரதங்கள் பற்றிய சரியான கூற்று எது?

1. இவை உடல் வெப்பநிலையைப் பேணுவதில் பங்கெடுக்கும்
2. கொழுப்பமிலங்கள் புரதங்களை ஆக்குகின்றன
3. வெல்லங்கள் புரதங்களின் ஒரு வகையாகும்
4. புரதம் ஒரு இயற்கைப் பல்பகுதியமாகும்

10) 


சுவரொன்றில் இழை ஒன்றினால் கட்டித் தொங்க விடப்பட்டு சம நிலையிலுள்ள பொருளொன்று படத்தில் காட்டப்பட்டுள்ளது. M,T என்பவை இரு வேறு விசைகளாகும். விசைகள் M,T என்பவை முறையே,

1. நிறை, இழுவிசை
2. திணிவு, இழுவிசை
3. இரண்டும் இழுவிசை
4. புவியீர்ப்பு விசை, மேலுதைப்பு

11) அணு எண் 18 ஐக் கொண்ட Ar என்னும் மூலகத்தின் இலத்திரன் நிலையமைப்பைக் கொண்ட அயன் பின்வருவனவற்றுள் எது?

**1. Li+  2. Cl-**
**3. Be++  4. O- -**

12) ஒரு மூலக்கூறு சோடியம் நைத்திரேற்று **($NaNO_3$)** சேர்வையிலுள்ள நைதரசன் அணுக்களின் எண்ணிக்கை.

1. 1  2. 2  3. 5  4. $6.02 \times 10^{23}$

13) தாவரப் பூ ஒன்றிற் காணப்படும் சில இயல்புகள் தரப்பட்டுள்ளன.

A. தாவர உச்சியிற் பூ காணப்படுதல்
B. பெருமளவு மகரந்த மணிகள் காணப்படுதல்
C. சிறிய இலேசான மகரந்த மணிகளாக இருத்தல்

இவ்வியல்புகளைக் கொண்ட பூவில் மகரந்தச் சேர்க்கையை நிகழ்த்தும் காரணியாக அமைவது பின்வருவனவற்றுள் எது?

1. விலங்கு  2. காற்று
3. நீர்  4. மேற்கூறிய யாவும் சரியானவை

14) பின்வருவனவற்றுள் பொதுவாக ஒரு பங்கீட்டு வலுப்பிணைப்பு சேர்வையின் இயல்பாக அமையும் விடையைத் தெரிவு செய்க.

1. வேறுபட்ட ஏற்றம் பெற்ற அயன்களால் உருவாக்கப்படும்
2. அறை வெப்ப நிலையில் பளிங்குருவான திண்மநிலையிற் காணப்படும்
3. பொதுவாக நீர்க்கரைசல் மின்னைக் கடத்தாது
4. உருகிய நிலையில் மின்னைக் கடத்தும்

15) பின்வருவனவற்றுள் ஓமோன்களைச் சுரக்கும் ஒரு அகஞ்சுரப்பியாக அமைவது எது?

1. கபச்சுரப்பி  2. முன்சிறுகுடல்
3. இரைப்பை  4. உமிழ்நீர்ச் சுரப்பி


16) ஐதான சல்பூரிக்கமில நீர்க்கரைசலினுள் செப்பு, நாகத்தகடுகளை வைத்துப் புறச்சுற்றினால் இணைக்கப்பட்டுத் தயாரிக்கப்பட்ட மின்கலத்தில் ஒட்சியேற்றம் நடைபெறும் மின்வாயாகத் தொழிற்படுவது.

1. செப்புத் தகடு  2. நீர்
3. நாகத்தகடு  4. சல்பூரிக்கமிலக் கரைசல்

17) நேர்கோட்டுப் பாதை வழியே குறித்த ஒரு திசையில் இயங் கும் வண்டி ஒன்றின் இயக்கம் தொடர்பாகக் கூறத்தக்க விடையைத் தெரிவு செய்க.

1. அதன் கதியும் வேகமும் சமனாகக் காணப்படும்.
2. அதன் ஆர்முடுகல், அமர்முடுகல் எப்போதும் சமனானது.
3. அதன் ஆரம்ப உந்தம் இறுதி உந்தத்திற்குச் சமனானது.
4. அவ்வண்டியின் எஞ்சினால் ஏற் படுத்தப்படும் விசை மாறாது காணப்படும்.

18) சமாந்தர ஒளிக்கற்றையிலிருந்து விரிகற்றை ஒன்றைப் பெறுவதற்குப் பயன்படுத்தக்கூடிய ஒளியியல் உபகரணத்தைப் பின்வருவனவற்றுள் இருந்து தெரிவு செய்க.




19) பின்வருவனவற்றுள் மீடிறன் மிகவும் கூடிய மின்காந்த அலை எது?

1. கட்புல ஒளி  2. வானொலி அலைகள்
3. காமா கதிர்கள்  4. X - கதிர்கள்

20) கறியுப்பு உற்பத்தியில் முதலாவது பாத்தியில் **$CaCO_3$** வீழ்படிவாகுவதற்கான காரணமாக அமையத்தக்கது,

1. கடல்நீரிலுள்ள ஏனைய உப்புக்களை விடவும் **$CaCO_3$** இனது கரைதிறன் கூட
2. கடல்நீரிலுள்ள ஏனைய உப்புக்களை விடவும் **$CaCO_3$** இனது கரைதிறன் குறைவு
3. கடல்நீரிலுள்ள $SO_4$- - அயன் ஆனது **$CaCO_3$** ஐ வீழ்படிவாக்குதல்
4. கடல்நீரிலுள்ள **NaCl** ஆனது **$CaCO_3$** ஐ வீழ்படிவாக்குதல்

21) பின்வருவனவற்றுள் வளிமண்டலத்திலுள்ள வாயுநிலை நைதரசனை மண்ணிற் பதிக்கும் செயற்பாட்டில் பேரிராச்சியம் பக்றீரியாவைச் சேர்ந்த அங்கிகள் பங்கு பற்றாத முறை எது?
1. அவரைத் தாவர வேர்ச்சிறுகணுக்களில் நைதரசன் பதிக்கப்படுதல்
2. மண்ணில் அசற்றோபக்ரர் மூலம் நைதரசன் பதிக்கப்படுதல்
3. சயனோ பக்றீரியாக்கள் மூலம் நைதரசன் பதிக்கப்படுதல்
4. மின்னல் - மழை ஏற்படும் போது நைதரசன் பதிக்கப்படுதல்.

22) $Na_2CO_3$ நீர்க்கரைசல் ஒன்றின் செறிவு $0.3 moldm^{-3}$ ஆகும். இக்கரைசலின் $2dm^3$ கனவளவில் உள்ள தூய $Na_2CO_3$ இன் திணிவு யாது?
(Na - 23, C - 12, O - 16)
1. 0.6 g 2. 106g 3. 212g 4. 63.6g

23) பின்வருவனவற்றுள் இலிங்கமில் முறை இனப்பெருக்கத்தின் சிறப்பியல்பைத் தெரிவு செய்க.
1. ஆண், பெண் என இரு அங்கிகள் பங்குபற்றுதல்
2. புணரிகள் தோன்றுவதில்லை
3. புதிய இயல்புள்ள அங்கிகள் தோன்றுதல்
4. கூர்ப்பு ரீதியில் முன்னேற்றமடைந்த விலங்குகளில் நிகழுதல்

24) $CaCO_3$ திண்மத்தின் வெப்பப்பிரிகைக்கு உயர் வெப்பம் வழங்கப்பட வேணடும். பின்வருவனவற்றுள் இதற்கு மிகப்பொருத்தமான காரணமாக அமைவது எது?
1. குறித்த தாக்கம் ஒரு புறவெப்பத்தாக்கமாக இருத்தல்
2. குறித்த தாக்கம் ஒரு அகவெப்பத் தாக்கமாக இருத்தல்
3. $CaCO_3$ இனது வெப்பப் பிரிகைக்கு ஊக்கி பயன்படுத்தப்படுதல்
4. $CaCO_3$ இனது மாதிரியில் அது வெப்பப் பிரிகையடைவதைக் குறைக்கும் நிரோதிகள் காணப்படுதல்.

25) மனித சமிபாட்டுத் தொகுதியில் சமிபாடு முடிவடையும் பகுதி எது?
1. சிறுகுடல் 2. பெருங்குடல்
3. குதம் 4. முன்சிறுகுடல்

26) அதிகளவான இழைமணிகள் காணப்படும் இழையத்தைத் தெரிவு செய்க.
1. மேலணியிழையம் 2. குருதியிழையம்
3. தசையிழையம் 4. என்பிழையம்

27) விண்ணில் பறக்கும் வானவூர்தி ஒன்றிலுள்ள திரவமில் பாரமானியின் வாசிப்பு 102000Pa ஆகும். இவ்வமுக்கத்தைச் சமன் செய்யத்தக்க இரசப்பாரமானியின் இரசநிரலின் உயரமாக இருக்கத்தக்கது; (இரசத்தின் அடர்த்தி $13600 kgm^{-3}$, புவியீர்ப்பு ஆர்முடுகல் $10 ms^{-2}$)
1. 0.76 m 2. 1.03 m
3. 1013 m 4. 0.75 m

28) பின்வரும் இரசாயனத் தாக்கத்தில் X எனக் குறிப்பிடப்படும் தாக்கி எதுவெனத் தெரிவு செய்க.


$$2\,Zn_{(s)} + X \longrightarrow 2\,ZnO_{(s)}$$

1. O 2. $O_2$
3. $H_2O$ 4. $O_3$

29) $25^0C$ வெப்பநிலையிலுள்ள நிரம்பிய NaCl(aq) கரைசலின் செறிவை மேலும் அதிகரிப்பதற்குச் செய்யத்தக்க செயற்பாட்டைக் கீழுள்ளவற்றுள் இருந்து தெரிவு செய்க.
1. கரைசலைக் குளிர்த்துதல்
2. கரைசலுக்கு மேலும் நீர் சேர்த்தல்
3. கரைசலினுள் மேலும் NaCl ஐச் சேர்த்தல்
4. கரைசலை வெப்பமேற்றியவாறு மேலும் NaCl ஐச் சேர்த்தல்

30) வளியில் ஒலியின் கதி $330 ms^{-1}$ என்பதாற் கருதப்படுவது.
1. வளியில் 1s இல் ஒலியலை 330m தூரம் பயணிக்கும்
2. வளியில் 330s இல் ஒலியலை 1m தூரம் பயணிக்கும்
3. வளியில் ஒலியலையின மீழறன் 330Hz
4. வளியில் ஒலியலையின் அலைநீளம் 330m

31)




ஐதரோகாபன் ஒன்றின் கட்டமைப் பு சூத்திரம் அருகில் தரப பட்டுள்ளது. அம்மூலக்கூறின் மூலக்கூற்றுச் சூத்திரத்தைச் சரியாகக் குறிப்பிடும் விடையைத் தெரிவு செய் க.
1. $C_nH_{2n}$
2. எதிலீன்
3. $C_2H_4$
4. மேற்கூறிய யாவும் சரியானவை

32) ஒளித்தொகுப்பில் மாப்பொருளை இலைகள் தொகுக்கின்றன. எனக் காட்டுவதற்குத் தேவையற்ற ஆய்வுகூட உபகரணம் பின்வருவனவற்றுள் எது?
1. முக்காலி
2. பன்சன் சுடரடுப்பு
3. முகவை
4. புனல்


33) கீழுள்ள நிகழ்வுகளுள் மேற்காவுகை ஓட்டத்துடன் (உடன்காவுகை) / மேற்காவுகை ஓட்டத்தின் விளைவுடன் தொடர்பற்ற நிகழ்வைத் தெரிவு செய்க.
1. அமிழ்ப்பு வெப்பமாக்கியை நீர்கொண்ட முகவையினுள் அமிழ்த்தி வைத்து மின்னை வழங்கும்போது எடுக்கப்பட்ட நீர் முழுவதும் சூடாகுதல்
2. கடற் காற்று, தரைக்காற் று வீசுதல்
3. எரியும் சுவாலைக்கு மேலுள்ள மரத்தின் ,இலைகள் அசைதலும் கருகுதலும்
4. சுடுநீரினுள் வைக்கப்பட்ட உலோகக் கரண்டியின் கைபிடி நீருக்கு வெளியே இருப்பினும் சுடுதல்

34) இலைக்கன் ஒன்றியவாழ்வு ஈட்டத்தில் உள்ள தற்போசணி அங்கிகள் உள்ளடக்கப்படும் இராச்சியம்,
1. பங்கை 2. புரோட்டீஸ்ரா
3. பிளான்ரே 4. பூக்காத் தாவரம்

35) பின்வருவனவற்றுள் ஒரு நேரோட்ட மின்னோட்டத்திற்கான வரைபாக அமையாத வரைபைத் தெரிவு செய்க.





36) படத்தில் கதோட்டுக்கதிர் அலைவு காட்டி ஒன்றின் (CRO) திரையில் பெறப்பட்ட அலை வடிவங்கள் இரண்டு தரப்பட்டுள்ளன.கீழுள்ளவற்றுள் எச் சந்தர்ப்பங்களில் இவ்வலை வடிவங்கள் முறையே பெறப்படலாம் எனத் தெரிவு செய்க.





| A | B |
|---|---|
| 1. புல்லாங்குழலில் இசைச்சுரம் ஒன்றை வாசித்தல் | கோலொன்றை மேசையில் அடித்தல் |
| 2. கோலொன்றை மேசையில் அடித்தல் | புல்லாங்குழலில் இசைச்சுரம் ஒன்றை வாசித்தல் |
| 3. வீணையில் இசைச்சுரம் ஒன்றை வாசித்தல் | புல்லாங்குழலில் இசைச்சுரம் ஒன்றை வாசித்தல் |
| 4. கோலொன்றை மேசையில் அடித்தல் | வாகனமொன்றின் எஞ்சினின் இரைச்சல் |

37) பின்வருவனவற்றுள் அழுத்தசக்தி இயக்கசக்தியாக மாற்றப்படாத சந்தர்ப்பத்தைத் தெரிவு செய்க.
1. ஊஞ்சல் ஆடுதல்.
2. நீர்மின்னை உற்பத்தி செய்தல்.
3. விறகைப் பிளக்க இரும்பு ஆப்பு வைக்கப்பட்டு சம்மட்டியால் அடித்தல்.
4. வெப்பம் வழங்கப்படும் போது நீர் மூலக்கூறுகள் ஆவியாகுதல்.


38)




படத்தில் ஏரிகுழாய் ஒன்றின் அடியில் சிறிதளவு களி (clay) ஒட்டப்பட்டு அதன் திறந்த முனையில் வளியூதப்பட்ட பலூன் கட்டப்பட்டுள்ளமை காட்டப்பட்டுள்ளது. நீர் கொண்ட முகவையினுள் அவ் வெரிகுழாய் இடப்படும் போது அதன் நிலையைச் சரியாகக் காட்டும் உருவைத் தெரிவு செய்க.




39) திரான்சிஸ்ரர் ஒன்றைக் கொண்டு அமைக்கப்பட்ட A, B, C என்னும் மூன்று மின்சுற் றுக்கள் கீழே தரப்பட்டுள்ளன. (இங் கு மின்துணைக்கூறுகளுக்கு நியமக் குறியீடுகள் பயன்படுத்தப்பட்டுள்ளன) அவற்றுள் திரான்சிஸ்ரரின் விரியலாக்கித் தொழிற் பாடு பயன்படுத்தப்பட்டதாக சந்தர்ப்பம் / சந்தர்ப்பங்கள் எவை எனத் தெரிவு செய்க.




1. A 2. B 3. C 4. A, B

40) நிலையான அபிவிருத்தியைப் பாதிக்கும் நடவடிக்கையைக் கீழுள்ளவற்றுள் இருந்து தெரிவு செய்க.
1. யாதேனும் ஒரு உற் பத்திக்கான நீர் அடிச்சுவட்டை அதிகரித்தல்
2. இலத்திரனியற் கழிவின் அளவைக் குறைத்தல்
3. சுதேசிய வைத்திய விஞ்ஞானத்திற் கவனம் எடுத்தல்
4. பாரம்பரிய உணவு முறை தொடர்பாகக் கவனம் செலுத்துதல்.

# வெளிநாடு

## ...னில் வெள்ளம் ...பர் உயிரிழப்பு ...ர் மாயம்

...டுள்ள வெள்ளப் பெருக்கு மற்றும் ...ாமாக ஏறக்குறைய 15 பேர் ...லும் 13 பேர் மாயமாகியுள்ளனர்.

இதேவேளை ஏறக்குறைய 14 பேர் வெள்ளப்பெருக்கு இடம்பெற்ற மருத்துவ மையத்தில் இருந்து மீட்கப்பட்டுள்ளதாகவும், ஏனையவர்கள் இடிபாடுகளில் இருந்து மீட்கப்பட்டுள்ளனர்.

குறித்த வெள்ளப்பெருக்கு ஏற்பட்ட பகுதிகளில் இருந்து ஏறக்குறைய இரண்டு இலட்சம் பேரை வெளியேறுமாறு அதிகாரிகள் அறிவுறுத்தியுள்ளனர்.



அத்துடன் ஏறக்குறைய 10 ஆயிரம் படையினர் மீட்புப் பணிகளில் ஈடுபட்டுள்ளனர்.

இந்நிலையில் ஜப்பான் பிரதமர் ஷின்சோ அபே நாட்டு மக்களை மிகுந்த அவதானத்துடன் இருக்குமாறு பணித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## ...ளுக்கு பயனளிக்கும் ...ட்ரம்ப் கையெழுத்து

...ழங்குவ ...ல நிறுத் ...ன குறி ...த ஏப்ரல் ... நிலை ...நம் கால ...களுக்கு

...துக்காக ...கப்பட்ட ...யில்ஏறக் ...தொகை ...ள்ளது. ...தொகை ...ர்த்தகர் ...ில் அதி ...டிகளை ...விமர்சக



...ர்கள் அச்சம் வெளியிட்டுள்ளனர்.

கொரோனா வைரஸ் பெருந்தொற்றால் உலகளாவிய ரீதியில் அதிகளவான சுகாதார நெருக்கடிகளை எதிர்கொண்ட நாடுகளின் வரிசையில் அமெரிக்கா தொடர்ந்தும் முதலிடத்தில் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

## அமெரிக்காவில் விமான விபத்து; பயணித்த நால்வரும் உயிரிழப்பு

(வோஷிங்டன்)

அமெரிக்காவின் உட்டா மாகாணம் ஆல்பைன் நகரில் விமானியின் கட்டுப்பாட்டை இழந்த விமானம் பாக்ஸ் எல்டர் மலையின் மீது விழுந்து நொறுங்கியது.

இந்த கோர விபத்தில் விமானத்தில் பயணம் செய்த 4 பேரும் சம்பவ இடத்திலேயே உயிரிழந்துள்ளனர்.

தகவல் அறிந்து வந்த மீட்பு குழுவினர் பல மணி நேர போராட்டத்துக்கு பிறகு மலையில் இருந்து 4 பேரின் உடல்களையும் மீட்டுள்ளனர்.



விபத்துக்கான காரணம் என்ன என்பது உடனடியாக தெரியவில்லை. இது குறித்து விசாரணை நடத்த உத்தரவிடப்பட்டுள்ளது.

அமெரிக்காவின் உட்டா மாகாணம் ஆல்பைன் நகரில் உள்ள பாக்ஸ் எல்டர் என்ற மிகப்பெரிய மலை 11 ஆயிரத்து 100 அடி உயரமுடையது குறிப்பிடத்தக்கது. (ஜ-4)

...ள ...து ...ஸ்

... கடன் ...018 ஆம் ... ஆண்டு ...க்கான ...திட்டமிட்

...ீதியில் ...காரண ...திக்கப் ... (ஜ-4)



## கொரோனா வெற்றியுடன் தேர்தலில் களமிறங்கும் ஜெசிந்தா

(வெலிங்டன்)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக நியூசிலாந்தின் பொருளாதாரம் பாரியளவில் வீழ்ச்சியடைந்துள்ள நிலையில், அந்நாட்டு வர்த்தக நடவடிக்கைகளுக்கான மேலதிக கொடுப்பனவுகள் மற்றும் அதிக தொழில் வாய்ப்புகளுக்கான உறுதிமொழிகளுடன், நியூசிலாந்து பிரதமர் ஜெசிந்தா ஆர்டன் தனது பிரசாரங்களை ஆரம்பித்துள்ளார்.

நியூசிலாந்தின் பொதுத் தேர்தல் எதிர்வரும் செப்டெம்பர் மாதம் 19 ஆம் திகதி இடம்பெறவுள்ள நிலையில் அவர் தனது பிரசார நடவடிக்கைகளை நேற்று ஞாயிற்றுக்கிழமை ஆரம்பித்துள்ளார்.

உலகெங்கும் பரவி பாரிய மனித அழிவுகளை ஏற்படுத்தி வரும் கொரோனா வைரஸ் பெருந்தொற்று நியூசிலாந்தில் மிகத் துரிதமாக தடுத்து நிறுத்தப்பட்டமையினைத் தொடர்ந்து இந்த நூற்றாண்டின் பிரபலமான பிரதமராக ஜெசிந்தா ஆர்டன் கருதப்படுகிறார்.

இந்நிலையில், குறித்த விடயமானது எதிர்வரும் தேர்தலில் அவருக்கு சாதகமான தாக்கங்களை ஏற்படுத்தும் என கணிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பாக தனது தேர்தல் பரப்புரையின் போது கருத்து தெரிவித்த ஜெசிந்தா ஆர்டன், "எந்த விதமான கொரோனாத் தொற்றாளர்களும் பதிவில் இல்லை. குணப்படுத்துவதற்காக எவரும் பதிவில் இல்லை" என தெரிவித்துள்ளார்.

மேலும், நியூசிலாந்தின் சிறிய வர்த்தகர்களுக்கு வழங்கப்பட்ட கடன் தொகையானது இம்மாத இறுதிக்குள் மீள செலுத்தப்பட்டால் மேலதிக வட்டி செலுத்தத் தேவையில்லை எனும் நிலையில், குறித்த கால எல்லை இவ்வருட இறுதி வரை நீட்டிக்கப்படும் என அவர் மேலும் உத்தரவாதம் அளித்துள்ளார்.

அத்துடன், ஏற்கனவே அறிவிக்கப்பட்ட திட்டங்களின் அடிப்படையில், சூழல் மற்றும் கட்டமைப்பு சார்ந்த பல தொழில் வாய்ப்புகள் உருவாக்கப்படும் என அவர் மேலும் தெரிவித்துள்ளார். (ஜ-4)



# புலம்பெயர்ந்த ஈழத் தமிழர்கள் ஓர் உலகளாவிய ஆய்வு

14

கலாநிதி முருகர் குணசிங்கம்

2009 இல் 115 ஈழத்தமிழர் அகதிகள் முகாம்கள் தமிழ்நாட்டில் பல்வேறு இடங்களில் அமைக்கப்பட்டன.

அவைகளில் 19,705 குடும்பங்களைச் சேர்ந்த 73,451 அகதிகள் இருப்பதாக அறிய முடிகின்றது. இவை தவிர சுமார் 52,000 தமிழர்கள் அகதி முகாம்களுக்கு வெளியில் தமிழ்நாட்டில் குறிப்பாகச் சென்னையிலும் ஏனைய நகரங்களிலும் தமது சுய விருப்பத்தின் பேரில் அகதிகளாக வாழ்ந்து வருகின்றனர்.

2014 ஜனவரியில் இந்நூலாசிரியர் சென்னையில் உள்ள ஈழ அகதிகள் மறுவாழ்வு நிறுவனத்தினர் அலுவலகத்தில் இருந்து பெற்ற புள்ளி விபரங்களின்படி 68,000 ஈழத்தமிழ் அகதிகள் 115 முகாம்களில் இருந்ததாகவும் தற்பொழுது அகதி முகாம்களின் எண்ணிக்கை 108 ஆகக் குறைந்து உள்ளது எனவும் தெரிவிக்கப்பட்டது.

மறுபுறத்தில் 1987 ஜூலையில் இந்திய - இலங்கை உடன்படிக்கை கைச்சாத்திடப்பட்ட பின் சுமார் 25,000 ஈழத்தமிழ் அகதிகள் தமது சுயவிருப்பத்தின் பேரில் ஈழத்துக்குத் திரும்பிச் சென்று உள்ளனர்.

முன்னாள் பிரதமர் ராஜீவ்காந்தி படுகொலை செய்யப்பட்டதைத் தொடர்ந்து சுமார் 54,188 அகதிகள் இலங்கை திரும்பி உள்ளார்கள்.

தமிழ் நாட்டில் அகதி முகாம்களில் இருந்தவர்களுள் நூற்றுக்கணக்கானவர்களும் அகதி முகாம்களுக்கு வெளியில் இருந்த ஆயிரக்கணக்கானவர்களும் குடும்பத்தினருடன் இணைவதன் பொருட்டு மேற்கு நாடுகளுக்குப் புலம்பெயர்ந்தும் அகதிகளாகவும் சென்று கொண்டு இருக்கின்றனர்.

இளம் தலைமுறையினர் ஏற்கனவே அங்கு சென்ற தமிழர்களைத் திருமணம் செய்தும் அங்கு உள்ள பல்கலைக்கழகங்களில் கல்வி கற்பதன் பொருட்டும் தமிழ் நாட்டிற்குச் சென்று கொண்டு இருக்கின்றார்கள்.

2006 இல் தொடங்கி 2009 இற்குப் பின்னரும் இலங்கை - இந்தியக் கடற்படைகளின் இறுக்கமான கரையோரப் பாதுகாப்பு நடவடிக்கைகள் முடுக்கி விடப்பட்டதன் விளைவாக ஈழத்தமிழர்கள் அகதிகளாகத் தமிழ் நாட்டுக்கு வருவது வெகுவாகக் குறைந்து உள்ளது.

இருப்பினும் இலங்கை அரசப்படைகளின் தொடர்ச்சியான அடக்குமுறை சிறைபிடிப்பு, சித்திரவதை, காணாமல் போதல், பலாத்காரம் போன்ற நடவடிக்கைகளால் ஈழத்தமிழர்கள் குறிப்பாக இளம் தலைமுறையினர் இன்று வரையிலும் சிறிய அளவிலேனும் தமிழ் நாட்டுக்கு அகதிகளாக வந்த வண்ணமே இருக்கின்றார்கள்.

தமிழ் நாட்டிலும் இதர பகுதிகளிலும் எத்தனை ஈழத்தமிழர்கள் அகதி முகாமுக்கு வெளியே வசித்து வருகின்றார்கள் என்று கணக்கெடுப்பது மிகவும் கடினம். காரணம் அவர்கள் எல்லோரும் குடிவரவு இலாகாவிலும் பொலிஸ் நிலையங்களிலும் தங்களைப் பதிவு செய்து கொண்டு இருக்கின்றார்களா? என்பது கேள்விக் குறி ஆகும்.

மேற்படி அரசு அலுவலகங்களில் பதிவு செய்யாமல் இருப்பவர்களின் தொகையைக் கணக்கில் சேர்த்துக் கொள்ள முடியாத நிலை உள்ளது. பொதுவாக புலம்பெயர்ந்து தமிழ் நாட்டில் வாழும் ஈழத்தமிழர்கள் தொகை மதிப்பீடு இவ்வாய்வில் கொடுக்கப்படும் புள்ளி விபரங்களை விடக் கூடுதலாகவே இருக்கும்.

ஈழத்தமிழ் அகதிகளைப் பராமரிக்கும் ஈழ அகதிகள் மறுவாழ்வு நிறுவனம் செல்வநாயகம் சந்திரகாசன் தலைமையில் சென்னையில் கடந்த 28 ஆண்டுகளாக இயங்கி வருகின்றது.

சுமார் 200 பேர்கள் வரை இந்நிறுவனத்தில் தமது பணிகளை மேற்கொண்டு இருக்கின்றார்கள்.



இந்திய அரசு ஆண்டுதோறும் 140 கோடி ரூபாய்களை அகதிகளுக்காக வழங்குகின்றது. மேலும் பல கிறிஸ்தவ நிறுவனங்களும் மனித உரிமை நிறுவனங்களும் தமிழ் அகதிகளின் பொருட்டு தமது ஆதரவுக்கரங்களை நீட்டி வருகின்றார்கள்.

ஈழத்தமிழர்களுக்கு எதிராகச் சிங்கள அரசின் திட்டமிட்ட இன அழிப்பு நடவடிக்கைகள் தொடர்ந்து நடக்கும் வரையிலும் ஈழத் தமிழர்களின் அரசியல் சுதந்திரம் உரிய முறையில் இந்தியாவின் அல்லது உலக நாடுகளின் தலையீட்டுடன் உறுதி செய்யப்படும் வரையிலும் ஈழத்தமிழர்களின் போராட்டம் ஏதோ ஒருவகையில் தொடர்ந்து நடப்பதை எவராலும் தடுத்து நிறுத்த முடியாது.

அதேபோல் ஈழத்தமிழர்கள் அகதிகளாகப் புலம் பெயரும் அவலத்தையும் யாராலும் தடுக்கவும் முடியாது.

### மலேசியத் தீபகற்பம்

பத்தொன்பதாம் நூற்றாண்டின் நடுப் பகுதியில் இருந்து ஈழத்தமிழர்கள் மலேசியத் தீபகற்பத்திற்குக் குடிபெயர்ந்து சென்று உள்ளார்கள். இந்தப் புலம்பெயர்விற்குச் சமூக, பொருளாதாரக் காரணிகளே முக்கியமாகத் தள்ளும் காரணிகளாக அமைந்துள்ளன.

அதேபோல் மலேசியத் தீபகற்பத்தில் உள்ள பொருளாதார நிலைமை, வேலை வாய்ப்புக்கள், வசதியான வாழ்க்கை, அதிக வருமானம் என்பன அவர்களை இழுக்கின்ற காரணிகளாக அமைந்தன.

மலேசியத் தீபகற்பத்தில் ஈழத்தமிழர்கள் குடியேற்றம் பற்றிப் பல நூல்கள் வெளிவந்து இருக்கின்றன. குறிப்பாக எஸ்.துரைராசசிங்கம் எழுதிய **"A Hundred Years of Ceylonese in Malasia and Singapore (1867-1967)"** 1968 பேராசிரியர் சத்தியசீலன் எழுதிய "மலாயகப் புலம்பெயர்வும் யாழ்ப்பாணச் சமூகமும்" 2006 ஆகிய ஆய்வு நூல்களைச் சிறப்பாகக் குறிப்பிடலாம்.

இலங்கை 1795 இல் பிரித்தானிய அரசின் ஆளுகையில் வந்தமை இலங்கை வரலாற்றில் புதிய யுகத்தைத் தொடங்கிய காலமாக அமைந்தது.

சமூகம், சமயம், மொழி, கல்வி, கலாசாரம், பாரம்பரியம், பொருளாதாரம், அரசியல் சார்ந்த துறைகள் அனைத்தும் பாரிய வளர்ச்சியையும் மாற்றத்தையும் தழுவிக்கொண்ட காலமாக மாற்றம் அடையும் ஒரு தொடக்கத்தைக் காட்டி நின்றது.

முதலாவதாக பிரித்தானிய அரசு நிதி, நீதி, நிர்வாகக் கட்டமைப்புக்களை உருவாக்கியது. பிரித்தானிய வெஸ்ட்மினிஸ்ரர் முறை சார்ந்த அரசியல் அமைப்பு முறையை அறிமுகப்படுத்தியது.

போக்குவரத்து தபால் தந்தித் தொடர்புகள் வளர்ச்சியடைந்தன. மக்களுக்கு உரிய பாதுகாப்பு வழங்கப்பட்டது. அனைத்துச் சமூகத்தினரும் சமமாகக் கருதப்பட்டனர்.

அனைத்துச் சமய வழிபாடுகளும் தடையின்றித் தொடர்ந்தன. ஆங்கில மொழிக்கு முன்னுரிமை அளிக்கப்பட்டாலும் அனைத்து மொழிகளுக்கும் வளர்ச்சிக்கான வாய்ப்புக்கள் கிடைத்தன.

இலங்கையில் அதுவரையிலும் இருந்து வந்த விவசாயப் பொருளாதாரத்தை, வணிகப்பொருளாதாரமாக மாற்றியது. பணப்பயிர்ச்செய்கைகள், பெருந்தோட்டப் பயிர்ச் செய்கைகள் மூலம் முடுக்கி விடப்பட்டது. வெளிநாட்டவரின் மூலதனம் இப்பெருந்தோட்டங்களில் குவிக்கப்பட்டது. ஏற்றுமதியும் வளர்ந்தது.

இவ்வாறான புதிய முன்னெடுப்புகளாலும் மாற்றங்களாலும் மக்கள் தொகை பெருகியது. மக்கள் அமைதியான, பாதுகாப்பான வாழ்க்கையைப் பெற்றனர்.

மதம், மொழி, கலை, கலாசாரம், பண்பாடு என்பன மறுமலர்ச்சியடையத் தொடங்கின. ஆங்கிலக் கல்வி மிகத் தீவிரமாக நடைமுறைப்படுத்தப்பட்டது. ஆங்கில உயர் பள்ளிகள் தோற்றம் பெற்றன.

ஆங்கிலமொழி படித்த இளம் தலைமுறையினர் தங்கள், கல்வி தொழில் தொடர்புகளை இலங்கையில் மட்டுமன்றி இந்தியா, பர்மா, மலேசியா போன்ற நாடுகளுடனும் பிரித்தானியா, அமெரிக்கா போன்ற நாடுகளுடனும் ஏற்படுத்திடக் கதவுகள் திறந்து விடப்பட்டன.

ஆங்கிலக் கல்வியின் அறிமுகத்தாலும் அதன் வளர்ச்சியாலும் ஒரு படித்த சமுதாயம் தோற்றம் பெற்றது. இதன் விளைவாக அரசியல் உணர்வுகளும் துளிர்விடத் தொடங்கின. இந்நிலைமைகள் இலங்கை முழுமையும் பொதுவாகக் காணப்பட்டன.

மேற்படி மாற்றங்கள், ஈழத்தமிழர்களின் வாழ்வில் எவ்வாறான தாக்கங்களையும் விளைவுகளையும் ஏற்படுத்தியது என்பதைச் சுருக்கமாகப் பார்ப்பதன் மூலம் அவர்கள் மலேசியத் தீபகற்பத்திற்குப் புலம்பெயர்ந்ததன் பின்னணியை விளங்கிக் கொள்ளலாம்.

பிரித்தானிய ஆட்சியாளர்கள் குடியேற்ற நாடுகளில் தமது நிர்வாகக் கட்டமைப்புக்களைச் சரியான முறையில் நடத்துவதற்கும் பொருளாதார நலன்களைப் பெறவும் செல்வத்தைக் குவிப்பதற்கும் உரிய நிர்வாக அலுவலர்கள் அதிகமாகத் தேவைப்பட்டனர்.

அதற்காக ஆங்கிலம் படித்தவர்கள் தேவைப்பட்டனர். பிரித்தானியாவில் நடுத்தரக் கல்வி கற்றவர்களைக் குடியேற்ற நாடுகளுக்குக் கொண்டுவந்து அவர்கள் சேவைகளைப் பெறுவதை அதிக செலவாகக் கருதினார்கள்.

அதனால் குடியேற்ற நாடுகளில் உள்ள இளம் தலைமுறையினருக்கு ஆங்கிலக் கல்வி மூலம் விஞ்ஞானக் கற்கை நெறிகளைத் தாராளமாக வழங்க முனைந்தார்கள்.

இதற்காக பல்வேறு கிறிஸ்தவ மிஷனரிகளைத் தமது நாட்டில் இருந்தும் அமெரிக்காவில் இருந்தும் வரவழைத்தார்கள். அவர்கள் யாழ்ப்பாணக் குடாநாட்டைத் தங்கள் களமாகத் தேர்ந்தெடுத்துக் கொண்டார்கள். (தொடரும்)

# ரணசிங்க பிரேமதாஸவின் மகனாகிய நான் மூவின மக்களுக்கும் சமமான சேவை வழங்குவேன்

## கிண்ணியாவில் சஜித் உருக்கம்

(கிண்ணியா)

**மூவின மக்களுக்கும் சமமான முறையில் சேவைகளை வழங்குவேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்தார்.**

கிண்ணியா நகர சபை மைதானத்தில் நேற்று முன்தினம் இடம்பெற்ற திருகோணமலை ஐக்கிய மக்கள் சக்தி வேட்பாளர்களை ஆதரித்து இடம்பெற்ற பொதுக் கூட்டத்தில் உரையாற்றும் போதே இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு அவர் தொடர்ந்தும் உரையாற்றுகையில்,

திருகோணமலை மக்களை நான் நன்கு அறிவேன். கடந்த ஜனாதிபதித் தேர்தலின் போது மூதூர் தொகுதி மக்கள் தேசிய ரீதியிலும் பார்க்க அமோக வாக்குகளை எனக்களித்தீர்கள். இம் முறையும் அதேபோன்று எமது ஐக்கிய மக்கள் சக்தியை பலப்படுத்துங்கள்.

சகலவிதமான பிரச்சினைகள் இங்கு உண்டு. இன மத வாதமற்ற சேவையை மூவின மக்களுக்கும் சமமான முறையில் செய்து காட்டுவேன்.

மீனவர்கள் பிரச்சினை. விவசாய நிலங்கள் தொடர்பிலும் சாதகமான முறையில் சேவைகளை செய்வதற்காக எண்ணியுள்ளேன். இந்த நாட்டில் சிறுபான்மை என்று ஒன்றில்லை. எல்லோரும் சமமாக வாழ வழிவகுக்க இந்த நாளில் எனது சக்தி ஊடாக முன்னெடுக்க காத்திருக்கிறேன்.



வேலையில்லா பட்டதாரிகளின் நியமனங்கள் இந்த அரசாங்கத்தில் இடை நிறுத்தப்பட்டுள்ளது. ஓகஸ்டுக்கு பின்னர் வெற்றியுடன் பட்டதாரிகளுக்கான நியமனங்களை வழங்குவோம். ரணசிங்க பிரேமதாஸ செய்த ஆட்சியைப் போன்று அவரின் மகனான சஜித் பிரேமதாஸவாகிய நான் மூவின மக்களுக்கும் சமமான முறையில் சேவைகளை வழங்குவேன். எனது அப்பாவின் காலத்தில் கலாசார அமைச்சர் உட்பட தகம் பாசல போன்றன அமையப் பெற்றது.

முஸ்லிம்களின் கலாசார ரீதியான பாதிப்பற்ற நடவடிக்கைகளை இந்த நாட்டில் கொண்டு செல்வதற்கான முயற்சிகளை திறம்பட செய்து காட்டுவேன் என அவர் தெரிவித்தார். (ஜ-4)

# சர்வதேச விசாரணை நீர்த்துப் போனதற்கு கூட்டமைப்பே முழுக் காரணம்

## பொறுப்புக்கூற வேண்டும் என்கிறார் சிவசக்தி ஆனந்தன்

கிடைத்த சந்தர்ப்பங்களை தவறவிட்டு. யானை உண்ட விளாம்பழம் போல வெறுமையான கோதாக கூட்டமைப்பு தேர்தல் களத்தில் நிற்பதாக முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் சிவசக்தி ஆனந்தன் குற்றம்சாட்டினார்.

வவுனியாவில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற மக்கள் மன்றம் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார். அவர் தொடர்ந்து கருத்துத் தெரிவிக்கையில்,

தேர்தல் காலங்களில் ஒன்றைக்கூறிவிட்டு அதற்கு எதிராக செயற்பட்டதன் காரணத்தாலேயே



தமிழ்த்தேசிய கூட்டமைப்பில் இருக்காமல் வெளியேறினோம்.

கடந்த அரசுக்கு கால அவகாசத்தை கூட்டமைப்பு வழங்கியதன் மூலம் இன்று கலப்பு விசாரணையும் இல்லை சர்வதேச விசாரணையும் இல்லை. உள்ளக விசாரணை என எதுவுமே இல்லாமல் நீர்த் துப்போகச் செய்யப்பட்டுள்ளது. இன்று அது தமிழ் மக்களை எங்கு நிறுத்தி இருக்கிறது என்பது உங்களுக்கு தெரிந்த விடயம். கிடைத்த சந்தர்ப்பங்களை மக்களுக்காக பயன்படுத்தாமல் சுயலாப அரசியலுக்காக கூட்டமைப்பின் பெயரால் ஒரு சிலர் எடுத்துக்கொண்டதற்கான முடிவுதான் இது. இன்று கூட்டமைப்பு யானை உண்ட விளாம் பழமாக வெறும் கோதாக தேர்தல் களத்தில் நிற்கிறது.

கூட்டமைப்பிற்குள் இருக்கும் குறைபாடுகளை திருத்தி நேர்வழியில் மக்களுக்கு வழங்கிய வாக்குறுதிகளை நிறைவேற்றுவதற்காக பல முயற்சிகளை நாம் எடுத்தோம் அது முடியவில்லை. எனினும் அதற்காக நாம் ஒதுங்கியிருக்க முடியாது என அவர் தெரி வித்தார். (ஜ-4-299)

# சுயேட்சைக் குழுவின் வேட்பாளர் அறிமுக நிகழ்வு



(நெளுக்குளம்)

வன்னித் தேர்தல் தொகுதி சுயேட்சைக்குழு 3 இன் வேட்பாளர்கள் அறிமுகமும் அலுவலகத்திறப்பு நிகழ்வும் நேற்று முன்தினம் சனிக்கிழமை பிற்பகல் 3 மணியளவில் ஈரப் பெரியகுளம் விருந்தினர் விடுதியில் வன்னி மக்கள் காப்பகத்தின் தலைவரும் சுயேட்சைக்குழு 3 முதன்மை வேட்பாளருமான நீல் சாந்த தலைமையில் இடம்பெற்றது.

தொடர்ந்து முதன்மை வேட்பாளர் உரையாற்றுகையில்,

வன்னி மாவட்டத்தில் உள்ள பாராளுமன்ற உறுப்பினர்கள் தமது கடமைகளை கடந்த காலங்களில் மக்களுக்கு சரிவர மேற்கொண்டிருந்தால் நான் தென் பகுதியிலிருந்து இங்கு வந்து தேர்தலில் போட்டியிட்டிருக்கத் தேவை ஏற்பட்டிருக்காது.

நான் சமூக நலன் சார்ந்த சுயதொழில் வலுவூட்டல் நடவடிக்கைகளை மேற்கொள்ளவே வன்னி மக்கள் காப்பகத்தை நிறுவி செயற்பாடுகளை மேற்கொள்ள வன்னிப் பெருநிலப்பரப்பிற்கு வந்துள்ளேன். எனது கடமைகளுக்கும் மக்களுக்கு வழங்கும் இலவச நடவடிக்கைகளுக்கும் இங்குள்ளவர்களினால் இடையூறுகள், தடைகள் ஏற்படுத்தப்பட்ட பின்னர் நான் அரசியலில் இறங்க வேண்டிய நிலையையும் ஏற்படுத்தியுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

இந்நிகழ்வில் வன்னி மக்கள் காப்பகத்தின் நிர்வாக உறுப்பினர்கள் , பொதுமக்கள் , ஆதரவாளர்கள் எனப்பலரும் கலந்து கொண்டனர் . (ஜ-299)

# எமக்கான அரசியல் தீர்வு கிடைக்குமானால் நாம் எமது தேசத்தைக் கட்டியெழுப்புவோம்

## சிறிதரன் தெரிவிப்பு

(கொழும்பு)

தமிழர் தரப்பு அபிவிருத்திக்கு என்றும் எதிரானவர்கள் அல்ல என தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும் யாழ்ப்பாண தேர்தல் மாவட்ட வேட்பாளருமான சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார். மிருசுவில் பகுதியில் இடம்பெற்ற மக்களுடனான சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் அங்கு கருத்துத் தெரிவிக்கையில். தமிழர்கள் தம்மைத்தாமே இந்த மண்ணிலே ஆளவேண்டும் என்பதற்காக நாம் 70 ஆண்டுகாலமாக போராடி வருகிறோம். கோட்டாபய ராஜபக்ஷவின் அரசில் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைச்சர்கள் பொருளாதார ரீதியிலான பிரச்சினைகளுக்காகத் தான் தமிழர்கள் போராடினார்கள். பொருளாதார ரீதியான பிரச்சினைகள் தீர்க்கப்படுமானால் அவர்கள் போராடமாட்டார்கள் என்றும் தமிழ்த்தலைமைகள் அபிவிருத்திக்கு எதிரானவர்கள் என்றும் கருத்துக் கூறிவருகிறார்கள்.

தமிழீழ விடுதலைப்புலிகள் காலத்தில் அரசுடன் பேச்சுவார்த்தைகளில் ஈடுபடும் போது எமது மக்களினுடைய பொருளாதார அபிவிருத்தி தொடர்பாகவும் எமது மக்களின் இயல்பு நிலை முன்னேற்றம் தொடர்பாகவும் பேசியிருந்தார்கள். அதை தலைவர் நேரடியாக ஊடகவியலாளர் சந்திப்பில் கூட தெரிவித்திருந்தார்.

சுனாமி வேளையில் செரான் என்கின்ற பணியகத்தை நிறுவி அதனூடாக சர்வதேசத்தின் ஒத்துழைப்புடன் எமது மக்களின் பொருளாதார வாழ்வை முன்னேற்றுவதற்காக முயன்ற வேளை அப்போது இருந்த சந்திரிகா அரசினால் முட்டுக்கட்டை போடப்பட்டது.

ஆகவே சிங்கள பேரினவாத அரசுதான் தமிழ் மக்கள் தாமாகப் பொருளாதாரத்தை மேம்படுத்த தடையாக உள்ளதே தவிர தமிழ்த் தலைமைகள் ஒருபோதும் மக்களினுடைய வாழ்வாதாரத்தை மேம்படுத்த தடையாக இருந்தது கிடையாது.

எமக்கு நிலையான அரசியல் தீர்வு கிடைக்கப்பெறுமானால் எமது மக்கள் தாமாகவும் புலம்பெயர் உறவுகளின் ஒத்துழைப்புடனும் எமது தேசத்தை கட்டியெழுப்புவோம். இன்று எமது இளைஞர்களுக்கான வேலை வாய்ப்புகள் என்பது மிகவும் பிரச்சினையாக இருக்கிறது. நிலையான அரசியல் தீர்வு கிடைக்கப் பெற்றால் இவையும் எமக்கு ஒரு பிரச்சினையே இல்லை. ஏனெனில் தமிழீழ விடுதலைப் புலிகள் காலத்தில் எமது இளைஞர்களுக்கு வேலை இல்லாத பிரச்சினையே இல்லாமல் இருந்தது. சேரன் சுவையூற்று. பாண்டியன் சுவையூற்று. வருவாய்ப்பகுதி. ஆயப்பகுதி. வைப்பகங்கள் என்பவற்றினூடாக எமது மக்களுக்கு வேலைவாய்ப்பை வழங்கியிருந்தார்கள் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-4-312)




# பொருளாதார நெருக்கடியை ஐ.தே.கவினால் மாத்திரமே தீர்க்க முடியும்-ரணில்

(கொழும்பு)

தற்போதைய அரசாங்கத்தின் கீழ் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்துள்ளதாக ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார். கொஸ்கம பகுதியில் இடம்பெற்ற மக்கள் சந்திப்பின் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

தற்போதைய பொருளாதார நெருக்கடியை ஐக்கிய தேசிய கட்சியினால் மாத்திரமே தீர்க்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (ஜ-8)



## தேர்தல் பிரசாரத்திற்கு மக்களை ஒன்றுசேர்க்க முடியுமானால் ஏன் கதிர்காம பாத யாத்திரையை அனுமதிக்க முடியாது

### சுமணரத்ன தேரர் கேள்வி

(மட்டக்களப்பு)

**தேர்தல் பிரசாரங்களை நடத்த ஆயிரக்கணக்கான மக்களை ஒன்றுசேர்க்க முடியுமாக இருந்தால் ஏன் இந்த இந்து மக்களுடைய அடிப்படை, கலாசார உரிமையான பாரிம்பரிய மத நம்பிக்கைகளை வணங்கச் செல்லும் கதிர்காம பாத யாத்திரைகளை தடை செய்ய வேண்டும் என்று மட்டக்களப்பு ஸ்ரீ மங்களராம விகாரை விகாராதிபதி சுமணரத்ன தேரர் கேள்வியெழுப்பினார்.**




மட்டக்களப்பு ஸ்ரீ மங்களராம விகாரையில் நேற்று முன்தினம் சனிக்கிழமை இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே இதனைத் தெரிவித்தார்.

மட்டக்களப்பு மாவட்டத்தைப் பிரதிநிதித்துவப்படுத்தி 2020 பாராளுமன்றப் பொதுத் தேர்தலில் சுயேட்சைக் குழு 22 மேளச் சின்னத்தில் 1ம் இலக்கத்தின் கீழ் போட்டியிடுகின்றேன்.

நான் இம்முறை தேர்தலில் வெற்றி பெறுவதற்கு போட்டியிட வேண்டியிருப்பது நீண்டகாலமாக அரசியலில் ஈடுபட்ட ஏற்றுக் கொண்ட பல அரசியல் கட்சிகளுடனும் சுயேட்சைக் குழுக்களுடனும்.

அரசியல் தொடர்பாக என்னிடம் குறைந்த அனுபவம் இருந்த போதிலும் துன்பத்திற்குள்ளாகி இருக்கும் அப்பாவி மக்களுடைய வேதனை எனும் அனுபவம் அளப்பரியதாகும்.

மட்டக்களப்பு மாவட்டத்தினுள் குடிக்க தண்ணீரின்றி 58 ஆயிரம் மக்களும் தலைக்கு மேல் கூரையின்றி வாழுகின்ற பல இலட்சம் குடும்பங்களும் இன்றுவரை இந்த மாவட்டத்தினுள் வாழ்வதன் மூலம் அவர்களுக்கான எவ்விதமான சமூக வசதிகளும் வழங்கப்படவில்லை என்பது தெளிவாகப் புலனாகிறது.

இம்முறை அவர்கள் தங்களது நோக்கத்தை அடைவதற்கு முயற்சி எடுப்பது இனவாதம் மற்றும் மதவாதம் என்பவற்றை சமூக மயப்படுத்துவதன் மூலமாகும்.

அவர் மேலும் தேர்தல் பிரசாரங்களை நடத்த ஆயிரக்கணக்கான மக்களை ஒன்றுசேர்க்க முடியுமாக இருந்தால் இன்று சினிமா தியேட்டர்கள் திறக்கப்பட்டு ஆண்களும் பெண்களும் கூட்டமாகச் சென்று இரவிலே பார்வையிட முடியுமாக இருந்தால் இந்த மக்கள் தங்களுடைய பாதங்களினால் ஒரு மீற்றர் தூர இடைவெளியில் நடந்து செல்வதுடன் சாப்பிட உணவின்றி, தண்ணீரின்றி பெரும் காட்டினூடாக இந்து மத அனுஷ்டானங்களை வணங்கச் செல்லும் அவர்களுடைய பயணங்களை நிறுத்த வேண்டாம் என நான் கேட்டுக்கொள்கின்றேன். இந்தப் பயணத்தை நிறுத்தினால் இனிவரும் இரு தினங்களில் என்ன நடக்கும் என கூறமுடியாது. எங்களுக்கும் அடிப்படை உரிமை, கலாசார உரிமை உண்டு என அவர் தெரிவித்தார். (ஜ-4)

## கிழக்கில் அதிபர் வெற்றிடங்களுக்கான விண்ணப்பங்கள் கோரப்பட்டுள்ளன

(மட்டக்களப்பு)

கிழக்கு மாகாணத்தில் 15 பாடசாலைகளில் நிலவும் அதிபர் வெற்றிடங்களை நிரப்ப தேர்தல்கள் ஆணைக்குழுவின் ஒப்புதலுடன் கிழக்கு மாகாண கல்வியமைச்சு விண்ணப்பங்களைக் கோரியுள்ளது.

நான்கு 1ஏபி பாடசாலைகளுக்கும் பதினொன்று 1 சீ தரப் பாடசாலைகளுக்கும் இவ்விண்ணப்பம் மாவட்ட ரீதியாகக் கோரப்பட்டுள்ளது. எதிர்வரும் 13 ஆம் திகதிக்கு முன்னதாக அந்தந்த வலயக்கல்விப்பணிப்பாளருடாக விண்ணப்பிக்க வேண்டும் என கல்வியமைச்சின் செயலாளர் ஜ.கே.ஜி.முத்துபண்டா அறிவித்துள்ளார்.

வெற்றிடம் நிலவும் குறித்த பாடசாலை அமையப்பெற்ற வலயத்தில் பணியாற்றும் முதலாந்தர அதிபர்கள் விண்ணப்பித்திருந்தால் முன்னுரிமை வழுங்கப்படும். அந்த வலயத்தில் முதலாந்தர அதிபர் தரத்திலுள்ளவர்கள் இல்லாத பட்சத்தில் ஏனைய வலயங்களிலுள்ள முதலாந்தர அதிபர்கள் கருத்திற்கொள்ளப்படுவார்கள் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த வலயத்தில் முதலாந்தர அதிபர்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில், அவ்வலயத்திலுள்ள இரண்டாந்தர அதிபர்களுக்கு முன்னுரிமை வழுங்கப்படும்.

அந்த வலயத்தில் அவ்வகை அதிபர்கள் இல்லாவிடில் ஏனைய வலயத்திலுள்ள இரண்டாந்தர அதிபர்கள் கவனத்திற்கொள்ளப்படுவர் எனவும் கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதேவேளை முதலாந்தர அதிபர்கள், இரண்டாந்தர அதிபர்கள் விண்ணப்பிக்காத பட்சத்தில் அந்த வலயத்திலுள்ள மூன்றாந்தர அதிபர்கள் கவனத்திற்கொள்ளப்படுவார்கள்.

அதிபர்களின் வயது எல்லை 59 இருக்க வேண்டும். நேர்முகப் பரீட்சை ஊடாக புள்ளியிடலுக்கேற்ப பொருத்தமான அதிபர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்களெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ஜ-4)

## இன்று ஒரு தகவல்

### தென்கச்சி கோ. சுவாமிநாதன்

## பரதன் தொடங்கிய பழக்கம்!

ஒரு வீதி ஓரமாக ஒருத்தர் பந்தல் போட்டுக்கொண்டு இருந்தார். எதுக்கு சேர் பந்தல் போடுறீர்கள்? என்று கேட்டார்கள். "சாகும் வரை உண்ணாவிரதம்" இருக்கப்போகின்றேன் என்றார் அலட்சியமாக. கேட்டவர்களும் அதைப்பற்றி ரொம்ப அலட்டிக்காமல் அவர்கள் பாட்டுக்குப் போய்விட்டார்கள். இதைப்பற்றி ஒரு பெரியவரிடம் நான் பேசிக்கொண்டிருந்தேன். என்ன சேர் இது...இந்தப் பழக்கம் இவ்வளவு சர்வசாதாரணமாக போய்விட்டதே என்றேன்.

இந்த பழக்கத்தை ஆரம்பித்து வைத்தவர் யார் தெரியுமா? உங்களுக்கு என்றார். யார்? என்று கேட்டேன்.

பரதன் தான் இதை ஆரம்பித்து வைத்தவன் என்றார். "யாரு இராமயணத்திலே வருகின்ற பரதனா? என்று கேட்டேன். ''ஆமாம்! என்று சொல்லி ஆரம்பித்தார். அவர் வால்மீகி இராமாயணம் படித்தவர். காட்டுக்குப் போய்க் கொண்டிருந்த இராமனைப்போய் பரதன் பார்க்கின்றான்.

"அண்ணா நீங்கள் திரும்பி அயோத்திக்கு வரவேண்டும். அரசுப் பொறுப்பை ஏற்றுக்கொள்ள வேண்டும்" என்று எவ்வளவோ சொல்லிப் பார்த்தான். ஆனால் இராமர் 'பிதுர் வாக்ய பரிபாலனம்' செய்துவிட்டுத்தான் திரும்புவேன் என்று பிடிவாதமாக இருக்கின்றார்.

நீங்கள் திரும்பி வரவில்லை என்றால் நான் சாகும் வரை உண்ணாவிரதம் இருக்கப்போகின்றேன் என்றான் பரதன். இப்படி சொன்னதோடு இல்லை இராமனின் பர்ணசாலைக்கு எதிர்பக்கத்திலேயே ஒரு தர்ப்பைப் பாயை விரித்து அதிலே உட்கார்ந்தான். இதைப்பார்த்த இராமன் பரதா...நான் உனக்கு என்ன குற்றம் செய்தேன்? ஏன் எனக்கு முன்னால் உண்ணாவிரதம் இருப்பேன் என்று சொல்கின்றாய்? அரசர்கள் இப்படிச் செய்கின்றது தவறு. அதனாலே உடனே எழுந்திடு. அயோதிக்குத் திரும்பிப் போ! என்றான்.

ஆனால் பரதன் உட்கார்ந்த இடத்திலே இருந்தே சுற்றி நிற்பவர்களைப் பார்த்து நீங்களாவது என் அண்ணனுக்கு எடுத்துச் சொல்லக் கூடாதா? என்கிறான். அதுக்கு அவர். நீ சொல்வதும் சரியாகத்தான் தோன்றுகின்றது. இராமன் சொல்கின்றதும் சரியாகத்தான் தோன்றுகின்றது. நாங்கள் என்ன செய்வோம்! என்றார்கள். சரியான மக்கள்...இந்த காலத்திலே உள்ளவர்கள் மாதிரியே!

உடனே இராமன் ''பரதா இவர்கள் சொல்வதை கேட்டாய் அல்லவா! அதனாலே உடனே எழுந்திரு!" என்கின்றான். பரதன் எழுந்து இருந்து கொண்டு சொல்கின்றான்...அரசு வேண்டும் என்று நான் அப்பாவையும் கேட்கவில்லை அம்மாவையும் கேட்கவில்லை ...'பிதுர்வாக்ய பரிபாலனம்' செய்து தான் ஆக வேண்டும் என்றார். உங்களுக்குப் பதிலாக நான் வனவாசம் போகிறேன். நீங்கள் அரசாள வேண்டும் என்றான்.

இதுக்கு இராமன் சொல்லும் பதில் என்ன தெரியுமா?

''ஒரு காரியத்தை செய்வதற்கு நமக்கே சாமத்தியம் இருக்கும் போது அதுக்குப்போய் பிரதிநிதி வைத்துக்கொண்டோம் என்றால் உலகம் தூற்றும் என்கின்றார். இது இன்றைக்கு எல்லோரும் சிந்தித்துப் பார்க்க வேண்டிய ஒரு முக்கியமான கருத்து. இன்றைக்கு நாங்கள் என்ன செய்து கொண்டு இருக்கின்றோம்?

நம்மால் முடியக்கூடிய காரியங்களுக்கு எல்லாம் நம்முடைய பிரதிநிதிகளை அனுப்பிக்கொண்டு இருக்கின்றோம். அப்படி அனுப்புவதை ஒரு கௌரவமாக வேறு நினைக்கின்றோம். அந்தக்காலத்திலே இப்படிச் செய்தால் உலகம் தூற்றும் என்கின்றது இராமனுடைய கூற்றிலே இருந்து தெரிகிறது! இன்னொரு விடயத்தை நாம் இந்தச் சம்பவத்திலே இருந்து புரிந்து கொள்ள வேண்டி இருக்கு. ஒரு தருமமான காரியத்தை செய்கின்றபோது அதற்கு எத்தனையோ இடைஞ்சல்கள் வரலாம்.

பலபேர் ஆசை வார்த்தைகளெல்லாம் சொல்லுவார்கள். அதையெல்லாம் பொருட்படுத்தாமல் நாமும் இராமனைப் போல திடமாக இருக்க வேண்டும் என்பதுதான் இதிலேயிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய முக்கியமான விடயம்.

அண்ணன் தான் ஆட்சிப் பொறுப்பை ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று பரதன் நினைத்தது மாதிரி...இந்தக் காலத்திலேயும் சில தம்பிகள் உண்டு.

அன்றைக்கு ஒரு பையனைப் பார்த்தேன்.

அவன் சொன்னான்...சேர் எங்கள் அப்பா இறந்த பிறகு எங்கள் குடும்பப் பொறுப்பு முழுவதும் அண் ணனிடம் இருக்க வேண்டும் என்று மனப்பூர்வமாக நான் சொல்லி விட்டேன். எனக்கு எந்தப் பங்கும் வேண்டாம் என்று சொல்லி விட்டேன் என்றான்.

உங்கள் அப்பா இறக்கும் போது உங்களுக்கென்று விட்டு விட்டுப் போனது எவ்வளவு இருக்கும் என்றேன். "சுமாராக 50 ஆயிரம் இருக்கும்" என்றான். "என்ன பணமா?" என்றேன். இல்லை! கடன் என்றான்.



# சிறுவர் அரங்கம்

## கரடியும் தேனீக்களும்

அது ஒரு அழகிய அடர்ந்த காடு. அந்த காட்டில் ஒரு பயங்கரமான கரடி ஒன்று வாழ்ந்து வந்தது. ஒருநாள் அந்தக் கரடி மிகவும் பசியோடு காட்டில் உணவிற்காக அலைந்து திரிந்தது. வெகுநேரம் ஆகியும் அதற்கு உணவு கிடைக்கவில்லை.

வழியில் ஒரு மரத்தின் மீது பெரிய தேன்கூடு ஒன்றைக் கண்டது. தேன்கூட்டைக் கண்ட கரடி, தேன் கூட்டைக் கலைத்து அதில் உள்ள தேனைகுடிக்க நினைத்து அதன் அருகில் சென்றது.

கரடி தேன்கூட்டிற்கு அருகில் செல்லும் சமயத்தில் வெளியில் சென்று இருந்த தேனீ ஒன்று கரடி தேன் கூட்டிற்கு அருகில் வருவதை பார்த்து அதன் அருகில் சென்றது. கரடி அந்த தேனீயைப் பார்த்து, நான் இப்போது இந்தத் தேன்கூட்டில் உள்ள தேனைச் சாப்பிட போறேன் என்று சொன்னது, தேனீயும் இது எங்கள் வீடு. இதை ஒன்றும் செய்யாதீர்கள் என்று கெஞ்சியது.



கரடியோ தேனீயைப் பார்த்து, நீயோ அளவில் சிறியவன். நான் உன்னை விட பலமடங்கு பெரியவன். உன்னால் என்னை ஒன்றும் செய்ய இயலாது-என்று கூறியது.

நிலைமையை உணர்ந்த தேனீ கரடியிடம், எனக்கு ஒரு நிமிடம் அவகாசம் கொடு, நான் என்னுடைய பொருட்களை தேன்கூட்டில் இருந்து எடுத்து சென்று விடுகிறேன் என்று கரடியிடம் கூறியது. கரடியும் இதற்கு ஒத்துக் கொண்டது.

தேன் கூட்டிற்கு சென்ற அந்த ஒற்றைத் தேனீ, தேன் கூட்டில் இருந்த எல்லாத் தேனீக்களிடம் நடந்த சம்பவத்தைக் கூறியது. எல்லாத் தேனீக்களும் உடனே கூட்டிலிருந்து வெளியே வந்தன.


கூட்டிலிருந்து வெளியே வந்த எல்லாத் தேனீக்களும் உடனே கரடியைக் கொட்டத் தொடங்கின. கரடிக்கு தேனீக்கள் கொட்டியதால் வலியால் துடித்தது.

மேலும் வலி தாங்க முடியாத கரடி ஓடத் தொடங்கியது. தேனீக்களும் கரடியை விடாமல் மிகவும் வேகமாக தொடர்ந்து சென்றன.


போராட்டத்தின் முடிவில் வேறு வழியில்லாமல் தேனீக்களிடமிருந்து தப்பிக்க கரடி காட்டில் இருந்த ஒரு ஆற்றின் நடுவில் குதித்தது. தேனீக்களும் கரடியை மன்னித்து தேன்கூட்டிற்கு சென்றன.

**நீதி: உருவத்தை வைத்து யாரையும் அலட்சியமாக எண்ணக் கூடாது!**

## பட அகராதி




## வரைந்து பழகுவோம்



## புள்ளிக்கோட்டை இணைத்து உருவைக் கண்டுபிடியுங்கள்



## தொடர்புபடுத்துக

| | |
|---|---|
| அம்மா | காடு |
| சூரியன் | தீ |
| கோயில் | மன்னன் |
| அங்காடி | உலகம் |
| அகிலம் | உறுப்பு |
| அபாயம் | சந்தை |
| அரசன் | தாய் |
| அவயம் | ஆதவன் |
| அனல் | ஆபத்து |
| அடவி | ஆலயம் |

# தடுப்பு மருந்து உருவாக்கும் பணியில் இந்தியா

(டில்லி)

**கொரோனா வைரஸுக்கு எதிரான தடுப்பு மருந்தை உள்நாட்டிலேயே உருவாக்கும் பணியில் ஐதராபாத்தை தலைமையிடமாக கொண்டு செயற்படும் பாரத் பயோடெக் என்னும் நிறுவனத்துடன் சேர்ந்து இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகமும் ஈடுபட்டுள்ளது**



தற்போது உருவாக்கப்பட்டுள்ள தடுப்பு மருந்தை மருத்துவ சோதனைக்கு உட்படுத்தி அதில் வெற்றிகண்டால் அதை இந்திய சுதந்திர தினத்தன்று பயன்பாட்டுக்கு கொண்டுவர திட்டமிட்டுள்ளதாக இந்திய மருத்துவ ஆராய்ச்சி கழகம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், பாரத் பயோடெக் நிறுவனத்தின் நிர்வாக இயக்குநரான சுசித்ரா எல்லா தெரிவித்ததாவது.

"மனிதர்களைக் கொண்டு மேற்கொள்ளப்படும் மருத்துவ பரிசோதனையின் முதல் கட்டத்தில் சுமார் ஆயிரம் பேர் ஈடுபடுத்தப்படுவார்கள்.

இதில் அனைத்து சர்வதேச வழிகாட்டுதலும் பின்பற்றப்படும். மேலும், தன்னார்வலர்களின் தேர்வு உன்னிப்பாகக் கண்காணிக்கப்படும்.

முதற் கட்டமாக கொரோனா வைரஸ் நோய்த்தொற்றால் பாதிக்கப்படாதவர்களைக் கொண்டு பரிசோதனை மேற்கொள்ளப்படும்.

இதன் முடிவுகள் குறித்து தெரிய வர குறைந்தது 30 நாட்கள் ஆகும்" என அவர் தெரிவித்தார். (ஜ-4)

## அபூர்வ வாழைப்பழம்



(ரந்தொருகம)

ரந்தொருகம பிரதேசத்தைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு அபூர்வ வாழைப்பழம் ஒன்று கிடைத்துள்ளதாகத் தெரிய வந்துள்ளது.

குறித்த நபர் கடந்த வாரம் வர்த்தக நிலையம் ஒன்றில் கொள்வனவு செய்த வாழைப்பழ சீப்பில் வித்தியாசமான வாழைப்பழம் ஒன்று கிடைத்துள்ளது.

ஒரு வாழைப்பழத்திற்குள் 8 பழங்கள் காணப்பட்டுள்ளது.

இதனைக் குறித்த நபர் சமூக வலைத்தளங்களில் பதிவு செய்துள்ளார். (ஜ-4)

## போதைப்பொருள் தடுப்பு பொலிஸார் மீதான மக்களின் நம்பிக்கை அகன்று விட்டது

### சட்டமா அதிபர் சுட்டிக்காட்டு



(கொழும்பு)

போதைப்பொருள் தடுப்பு பொலிஸார் மீது மக்களுக்கு இருந்த நம்பிக்கை அகன்று போயுள்ளதாக சட்டமா அதிபர் டப்புல டி லிவேரா தெரிவித்துள்ளார்.

போதைப்பொருள் கடத்தல்காரர்களுடன் போதைப்பொருள் தடுப்பு பொலிஸார் வர்த்தகத்தில் ஈடுபட்டனர் என்ற செய்தி வெளியாகியுள்ள நிலையில் மக்களின் நம்பிக்கை தகர்ந்து போயுள்ளதாக அவர் சுட்டிக் காட்டினார்.

நேற்று முன்தினம் போதைப் பொருள் தடுப்புத்துறையின் அதிகாரிகள் மத்தியில் உரையாற்றியபோதே சட்டமா அதிபர் இதனைத் தெரிவித்தார். அவர் மேலும் தெரிவிக்கையில்.

இலங்கையின் வரலாற்றில் முதல் தடவையாக இவ்வாறான சம்பவம் இடம்பெற்றுள்ளதாகவும் இவ்வாறான ஊழல்கள் ஒழிக்கப்படும் வரை அரச நிறுவனங்களை முன்னோக்கி கொண்டு செல்ல முடியாது என்றும் அவர் சுட்டிக்காட்டினார். (ஜ-4)

## ஆயுதம் கொண்ட கோபுரம் திறப்பு

(கொழும்பு)

கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் பியால் டி சில்வா அண்மையில் கடற்படை சிறப்பு படகு படைத் தலைமையகத்தில் கட்டப்பட்ட முதல் முழுமையான ஆயுதம் கொண்ட ரோப்லிங் கோபுரத்தை திறந்து வைத்தார்.

கடற்படையின் ஒரு சிறப்பு படையான சிறப்பு படகு படை உறுப்பினர்களின் பயிற்சிகளுக்கு அவசியமாக இருந்த இந்த ரோப்பெல்லிங் கோபுரம் சிறப்பு படகு படையினர்களின் நீண்ட கால தேவையை பூர்த்திசெய்து, கடற்படை சிவில் பொறியியல் பிரிவினரால் கட்டப்பட்டது.



இந் நிகழ்வுக்காக கிழக்கு கடற்படை கட்டளையின் தளபதி, ரியர் அட்மிரல் ருவன் பெரேரா, கிழக்கு கடற்படை கட்டளையின் மூத்த மற்றும் இளைய அதிகாரிகள் மற்றும் ஏராளமான மாலுமிகள் ஆகியோர் கலந்து கொண்டனர். (ஜ-4)

## இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் கைது



(கொழும்பு)

இலங்கை கிரிக்கெட் அணியின் நட்சத்திர துடுப்பாட்ட வீரர் குசல் மெண்டிஸ் நேற்றுக் கைது செய்யப்பட்டார்.

குசல் மெண்டிஸின் வாகனம் விபத்துக்குள்ளாகி ஒருவர் உயிரிழந்தார். இதனையடுத்தே அவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டார்.

பாணந்துறை ஹெரென்துடுவ பகுதியில் நேற்றுக் காலை இடம்பெற்ற குறித்த விபத்தில் 74 வயதான நபர் ஒருவர் உயிரிழந்தார். (ஜ-4)

## மாலைதீவிலிருந்து 120 பேர் நாட்டிற்கு

(கொழும்பு)

கொரோனா வைரஸ் பரவல் காரணமாக பல நாடுகளிலும் சிக்கித் தவிக்கும் இலங்கையர்களை மீண்டும்நாட்டுக்கு அழைத்துவரும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் மாலைதீவில் சிக்கித்தவித்த 120 பேர் விசேட விமானம் மூலம் நேற்று நாட்டுக்கு அழைத்து வரப்பட்டுள்ளனர்.

ஶ்ரீலங்கன் எயார்லைன்ஸிற்கு சொந்தமான, விசேட விமானம் மூலம் குறித்த 120 பேரும் மாலைதீவிலிருந்து அழைத்து வரப்பட்டுள்ளனர்.

இவ்வாறு அழைத்துவரப்பட்டவர்களுக்கு விமான நிலையத்தில் வைத்து பி.சி.ஆர். பரிசோதனைகள் முன்னெடுக்கப்பட்டன. (ஜ-4)

### 11 தமிழ் இளைஞர்கள் கடத்தல் விவகாரம்

## நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சர்களுக்கு அழைப்பாணை

(கொழும்பு)

நல்லாட்சி அரசாங்கத்தின் அமைச்சரவை அமைச்சர், இராஜாங்க அமைச்சர்கள் உள்ளிட்ட 6 பேரை எதிர்வரும் 15 ஆம் திகதி ஜனாதிபதி ஆணைக் குழுவில் முன்னிலையாகுமாறு அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு அழைப்பாணை விடுத்துள்ளது.

2008 ஆம் ஆண்டு 11 தமிழ் இளைஞர்களை கடத்தி காணாமலாக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் தனக்கு எதிராகப் போலியான சாட்சிகளை முன்வைத்து மேல்நீதிமன்றில் தொடரப்பட்டிருந்த வழக்குத் தொடர்பில் வடமேல் கடற்படை கட்டளைத்தளபதி ரியர் அட்மிரல் டி.கே.பீ.திஸாநாயக்கவினால் பதிவு செய்யப்பட்டுள்ள முறைப்பாட்டுக்கு அமைய இந்த அழைப்பாணை விடுக்கப்பட்டுள்ளது.

இதன்படி ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுச்செயலாளர் ரஞ்சித் மத்துமபண்டார, முன்னாள் எம்.பிக்களான ராஜித சேனாரட்ன, ரஞ்சன் ராமநாயக்க உள்ளிட்ட 7 பேருக்கு அரசியல் பழிவாங்கல் தொடர்பில் விசாரணை செய்யும் ஜனாதிபதி ஆணைக்குழு அழைப்பாணை விடுத்துள்ளது. (ஜ-4)

பாவத்துக்கு பல கருவிகள் உண்டு.
அவற்றுக்கெல்லாம் பொருத்தமான கைப்பிடி பொய். – ஷோர்மன்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## பிரதமர் மோடி சொல்ல வேண்டியதை சம்பந்தர் சொல்வது நியாயமானதா

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் அவர்கள் மூத்த அரசியல் தலைவர் என்பதில் மாற்றுக் கருத்திற்கிடமில்லை.

எனினும் முதுமை காரணமாக அவரால் இயங்க முடியவில்லை என்பது அனைவருக்கும் தெரிந்த விடயமே.

இந்நிலையில் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் என்ற பெயரில் விடப்படுகின்ற அறிக்கைகள் அவரால் தயாரிக்கப்பட்டதா? அல்லது மற்றவர்களால் தயாரிக்கப்பட்டதா? என்ற ஐயம் எழவே செய்கிறது.

இன்னொருவரால் அறிக்கை தயாரிக்கப்படுகின்ற நடைமுறை உள்ளதாயினும் அதனைச் சரி பார்த்துத் திருத்தம் செய்கின்ற அளவுக்கேனும் இரா.சம்பந்தர் அவர்கள் கருசனை கொள்கிறாரா என்பதும் சந்தேகமே.

எதுவாயினும் திருகோணமலையில் நடந்த பிரசாரக் கூட்டமொன்றில், கலந்து கொண்டு கருத்துரைத்த இரா.சம்பந்தர் அவர்கள்; இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கே ஆதரவு எனக் கூறியதாகச் செய்தி வெளியாகியுள்ளது.

கூட்டமைப்புக்கே இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆதரவாக உள்ளார் எனக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தர் கூறியிருப்பாராயின் அஃது தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற மிகப்பெரும் கபட்தனமாகும்.

உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி ஆதரிப்பதாக இருந்தால், அதனை பிரதமர் மோடி அல்லது அவர் சார்ந்து குரல் தரவல்ல அதிகாரிகளே அதனைச் சொல்ல வேண்டும்.

இதை விடுத்து பிரதமர் மோடி எங்களைத் தான் ஆதரிக்கிறார் என சம்பந்தர் கூறியிருப்பாராயின் அல்லது அவர் கூறுவதாக அவர் சார்ந்து யாரேனும் தெரிவிப்பார்களாயின் அஃது தமிழ் மக்களை ஏமாற்றுகின்ற கபடத்தனமாகவே இருக்க முடியும்.

உண்மையில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினரை பிரதமர் மோடி ஆதரிப்பதாக இருந்தால், 2019 ஜூன் 9ஆம் திகதி இலங்கைக்கு வருகை தந்திருந்த பிரதமர் மோடி கூட்டமைப்பினருடன் ஆற அமர இருந்து பேச்சு நடத்தியிருப்பார்.

ஆனால் பிரதமர் மோடி கூட்டமைப்பினரை கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து வெறும் ஐந்து நிமிடங்கள் மட்டுமே சந்தித்தார்.

இந்தியாவுக்கு வாருங்கள் என்று பிரதமர் மோடி கூறியதாக கூட்டமைப்பு எங்களுக்குக் கூறியது.

இந்தியாவுக்கு வாருங்கள் என்று பிரதமர் மோடி கூறியிருந்தால், நீங்கள் அங்கு போய் அவரை சந்திக்காதது ஏன் என்று கேட்க முடியும்.

ஆக, இந்தியாவுக்கு வாருங்கள் என்பது சந்திப்பின் சறுகலைச் சமாளிக்கக் கூட்டமைப்பினர் கூறியதாகவே கருத வேண்டும்.

இந்நிலையில் பிரதமர் மோடி எங்களுக்கே ஆதரவு என்பது பச்சைப் பொய் என்றாகிறது.

# தேர்தல் பிரசாரக் குழு அதிகாரிக்கு கொரோனா

## அச்சத்தில் ட்ரம்ப்

(வோஷிங்டன்)

அமெரிக்க ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பின் தேர்தல் பிரசார குழு அதிகாரிக்கு கொரோனா தொற்று இருப்பது உறுதி செய்யப்பட்டுள்ளது.

இந்நிலையில் அவருடன் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்ட ஜனாதிபதி ட்ரம்புக்கும் வைரஸ் தொற்று பரவியிருக்குமோ என்ற அச்சம் எழுந்துள்ளது.

அமெரிக்காவில் கொரோனா வைரஸின் தாக்கம் அதிகரித்து காணப்படுகின்ற நிலையில், கொரோனா பாதிப்பில் உலகளவில் அமெரிக்கா தொடர்ந்து முதலிடத்தில் இருந்து வருகிறது.

அங்கு 29 இலட்சத்திற்கும் மேற்பட்டோர் கொரோனாத் தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளதுடன் ஒரு இலட்சத்து 32 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் உயிரிழந்துள்ளனர்.

இந்நிலையில், அமெரிக்காவில் கொரோனா பாதிப்புக்கு மத்தியிலும் திட்டமிட்டபடியே ஜனாதிபதி தேர்தலை நடத்த முடிவு செய்யப்பட்டுள்ளது.

அதன்படி எதிர்வரும் நவம்பர் மாதம் அங்கு ஜனாதிபதி தேர்தல் இடம்பெறவுள்ளது.

தேர்தலில் குடியரசு கட்சி சார்பில் ஜனாதிபதி ட்ரம்ப் மீண்டும் போட்டியிடும் நிலையில் ஜனநாயகக் கட்சி சார்பில் முன்னாள் துணை ஜனாதிபதி ஜோ பைடன் களம் இறங்கி இருக்கிறார். கொரோனாப் பாதிப்பு ஒருபுறம் இருக்க தேர்தலுக்கான பிரசாரம் தீவிரமாக நடந்து வருகிறது.

இந்த நிலையில் ஜனாதிபதி ட்ரம்பின் தேர்தல் பிரசாரக் குழுவில் முக்கிய பங்காற்றி வரும் கிம் பெர்லி கில்போயில் என்ற அதிகாரிக்கு கொரோனோ வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# கொரோனாப் பட்டியலில் 3-ம் இடத்தை நெருங்கும் இந்தியா

## ஒரே நாளில் 24 ஆயிரம் பேர் பாதிப்பு

(டில்லி)

உலகளவில்கொரோனா வைரஸ் பாதிப்பில் 3 ஆவது இடத்திலுள்ள ரஷ்யாவை இந்தியா நெருங்கியுள்ளது.

அதற்கமைய இந்த கொடிய வைரஸ் காரணமாக இந்தியாவில் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை 6 இலட்சத்து 74 ஆயிரத்து 312 ஆக பதிவாகியுள்ளது.

உலகை அச்சுறுத்தும் கொரோனா வைரஸின் தாக்கம் தற்போது இந்தியாவிலேயே அதிக பாதிப்புகளை ஏற்படுத்தி வருகிறது.

ரஷ்யாவில்இந்த தொற்று காரணமாக 6 இலட்சத்து 74 ஆயிரத்து 515 பேர் பாதிக்கப்பட்டுள்ள நிலையில், இந்தியாவை விடவும் அங்கு 203 பேரே அதிகமாக பாதிக்கப்பட்டுள்ளனர்.

இந்தியாவில் நேற்று முன்தினம் 24 ஆயிரத்து 850 பேருக்கு கொரோனா தொற்று உறுதி செய்யப்பட்டதையடுத்து, நாட்டில் கொரோனா பாதிப்பு எண்ணிக்கை 6 இலட்சத்து 74 ஆயிரத்து 312 ஆக பதிவாகியுள்ளது. (ஐ-4)

# மின்சாரம் தடைப்படும்

உயர் அழுத்த மற்றும் தாழ் அழுத்தமின்விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 7 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல்5 மணிவரை

**யாழ்.பிரதேசத்தில்** மணகும்பான், மண்கும்பான் விடுதி, தேசிய நீர் வழங்கல் வடிகால் சபை, அல்லைப்பிட்டி, வெண்புரவிநகர், பூம்புகார், மண்டைதீவு, மண்டைதீவு கடற்படை முகாம், மண்கும்பான் கடற்படை முகாம், பருத்தித்துறை VM வீதி முதலாவது சந்தி, பருத்தித்துறை கல்லூரி வீதி, சாளம்பை, தம்பசிட்டி ஆகிய இடங்களிலும்

**வவுனியா பிரதேசத்தில்** சமணன்குளம், தந்திரிமலை வீதி, சின்ன சிப்பிக்குளம், NW Steel Pvt Ltd, கிறிஸ்தவகுளம், புளியங்குளம், அரசடிகுளம், காந்திநகர், வாரிக்குட்டியூர், சங்கரபுரம், மடுச்சந்தி, கட்டையடம்பன், இசைமலைத்தாழ்வு, தம்பனிக்குளம், பண்ணை வெட்டுவான், நீராவிபுரம், செட்டியார் கட்டையடம்பன் முருங்கன் விதை பண்ணை ஆகிய இடங்களிலும், மின்சாரம் தடைப்படும்.

# எதியோப்பிய கலவரத்தில் 166 பேர் உயிரிழப்பு

(எதியோப்பியா)

எதியோப்பியாவின் பிரபல பாடகர்ஹாக்காலுஹான்டீசா (Haacaaluu Hun deessa) கொல்லப்பட்டமையினை தொடர்ந்து அந் நாட்டின் பல பாகங்களிலும் நடைபெற்றுவரும் ஆர்ப்பாட்டங்கள் காரணமாக ஏறக்குறைய 166 பேர் கொல்லப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்வாறு கொல்லப்பட்ட வர்களில் 145 பொது மக்களும் 11 பாதுகாப்பு பிரிவினரும் உள்ளடங்குவதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இது தவிர மேலும் 167 பேர் வைத்தியசாலைகளில் அனுமதிக்கப்பட்டு கவலைக்கிடமான முறையில் உள்ளதுடன் இச்சம்பவம் தொடர்பில், ஆயிரத்து 84 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் மேலும் தெரிவித்துள்ளனர்.

எதியோப்பாவின் மிகப் பெரிய இனக்குழுவான ஒரோமோ இனத்தை சார்ந்த பிரபலமான பொப் இசைப் பாடகரான ஹாக்காலு ஹான்டீசா, கடந்த திங்கட்கிழமை இரவு இனந்தெரியாதவர்களால் சுட்டுக் கொல்லப்பட்டார்.

இதனைத் தொடர்ந்து குறித்த கொலைச் சம்பவத்துடன் தொடர்புடைய 5 பேர் கைது செய்யப்பட்டனர்.

குறித்த கொலைச் சம்பவத்தைத் தொடர்ந்தே நாட்டில் அமைதியின்மை ஏற்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ-4)

# வேதாத்திரி மகரிஷியின் நற்சிந்தனை

## சிந்தனை




சிந்தனை செய்வது அவசியம் தானா? அது தேவை தானா? அப்படியென்றால் எப்படி அதைச் செய்ய வேண்டும்?" என்றால் அது மிகமிக அவசியம் தேவை. அளவு முறை கண்டு வாழத் தெரிந்து கொண்டோமேயானால், உலகமே அமைதி நிலைக்கு வந்துவிடும். இந்தத் தத்துவம் கடினமானதே அன்று. முனைந்து பயின்றால் இயல்பாகிப் போகும். ஏற்கனவே, உள்ள பழக்கப் பதிவுகளின் காரணமாகத் தொடக்கத்தில் கடினம் போலத் தோன்றும் - மோட்டார் சைக்கிளை Start செய்வது போல, வண்டி ஓடத் தொடங்கி விட்டது என்று சொன்னால், balance தானாக வந்து விடும்.

நாம் சிந்தனை செய்து கொண்டே இருக்கும் பொழுது, அந்தச் சிந்தனையில் தவறு வந்தால் அதைத் திருத்துவதற்குத் தயாராக இருக்க வேண்டும். சிந்தனையே இல்லாமல் வாழ்வது மிதந்து கொண்டிருப்பதற்கு ஈடாகும். வெள்ளம் வந்தால் நம்மை அடித்துக் கொண்டு போகும் அவ்வளவு தான் நாம் எங்கே போகின்றோம் என்று தெரியாது எதைப் பிடிக்கவேண்டும் என்று தெரியாது. இந்த நிலையிலிருந்து மாறி நல்ல வெற்றிகரமான வாழ்க்கை வேண்டும் என்றால் சிந்தனை செய்ய இன்றே, இப்பொழுதே தொடங்க வேண்டும்.



# ஆன்மீகம்

## நினைவு நல்லது வேண்டும்



பாரதியார் பராசக்தியிடம் வேண்டு கிறார். எண்ணிய முடிதல் வேண்டும். நல்லவே எண்ணல் வேண்டும். திண்ணிய நெஞ்சம் வேண்டும். தெளிந்த நல் அறிவு வேண்டும்!

பாரதியார் நம்பிக்கையுடனும் நல்ல அன்புடனும் பராசக்தியை வேண்டிக் கொண்ட பிறகு அம்பிகை இவற்றை அருளாமல் இருப்பாளா! காளிதேவி கடைக்கண் வைத்தாள்! கவியரசருக்கு கேட்டது எல்லாம் கிடைத்தது. அதன் பிறகு அவர் என்ன பாடுகிறார் தெரியுமா?

'எடுத்த காரியம் யாவினும் வெற்றி!
எங்கு நோக்கினும் வெற்றி! மாற்றாங்கே
விடுத்த வாழ்மொழிக்கு எங்கனும் வெற்றி!
வேண்டினேனுக்கு அருளினள் காளி!

இதிலிருந்து என்ன தெரிகிறது? நாம் கேட்பது, சிந்திப்பது அனைத்தும் நல்லன வாக இருத்தல் வேண்டும்.

'நாம் கேட்பது எங்கே கிடைக்கப் போகிறது? நமக்கெல்லாம் அந்த உயர் பதவி எப்படிக் கிடைக்கும். நம்மால் இந்தக் காரியத்தை எப்படிச் செய்ய முடியும்? நம் தலையில் கஷ்டப்பட வேண்டும் என்று எழுதியிருக்கின்றது!' என்று நொந்து கொள்வதும் விரக்தியில் வெந்து போவதும் அடியோடு நம்மி டமிருந்து அகல வேண்டும்.

'என்னால் இதைச் சாதித்துக் காட்ட முடியும்! இந்தக் காரியத்தை இந்தக் கால கட்டத்திற்குள் சுட்டாயம் நான் முடிப் பேன்!' என்று நாம் நினைப்பவையெல் லாம் ஆக்கபூர்வ சிந்தனைகளாக இருந் தாலே நம் இலட்சியப் பயணம் பாதி முடிந்தது என்று பொருள்!

பலர் ஆசைப்படுகின்றார்கள்! ஆனால், அதற்கான செயலில் ஒரு சிறு முயற்சியும் செய்யாமல், எத்தகைய முனைப்பும் காட்டாமல் இருந்தால் இலட்சியம் எப்படி ஈடேறும்? 'என்னால் இதை வெற்றிகரமாகச் செய்ய இயலும் என்ற முனைப்பும் வேகமும் கொண்டு நீ செயலில் இறங்கிவிட்டால் ஆடையை நன்றாக இறுக்கிக் கட்டிக் கொண்டு ஆண்டவனே உனக்குத் துணை நிற்பான் என்று அழுத்தம் திருத்தமாக உரைக்கிறார் திருவள்ளுவர்.

'குடி செய்வல் என்னும் ஒருவர்க்குத் தெய்வம் மடி தற்றுத் தான் முந்துறும்'

'என்னால் முடியாது' என்பது கோழைத் தனம்

'என்னால் முடியுமா என்பது அவநம்பிக்கை

என்னால் முடியும் என்பது நம்பிக்கை

என்னால் தான் முடியும் என்பது ஆணவம்

'நம்முடைய ஆழ்மனம் ஒரு வளமான நிலம் போன்றது. வெற்றிகரமான நல்ல எண்ணங்களை நம்பிக்கையுடன், எதிர் பார்ப்புடன் பதிக்கும் போது எண்ண மாகிய விதை முளைத்துச் செடியாகி மரமாகி நம் நல்ல நினைவுகளுக்கு ஏற்ப கனிகளைத் தந்தே தீரும்' என்பது உள வியல் நிபுணர்கள் தருகின்ற உத்தரவாதம் கவிஞர் ஒருவர் பாடுகிறார்.

'எண்ணம் தான் உன் எதிரே தெரி கிறது!-நெஞ்சின் வண்ணம் தான் உன் வாழ்வே விரிகிறது!'

எதிர்மறைச் சிந்தனைகளிலேயே இருண்டு போகாமல் முடியாது என்பதே கிடையாது' என்னும் உடன்பாட்டு எண் ணங்களுடன் நம் உள்ளம் எப்போதுமே இயங்க வேண்டும். எண்ணம் தான் செயல் ஆகிறது. செயல் பழக்கம் ஆகிறது. பழக்கம் வழக்கம் ஆகிறது. வழக்கம் நம் வாழ்க்கையை உருவாக்குகிறது.

'நாளை அதிகாலை நாலரை மணிக்கு நான் படுக்கையை விட்டு எழுந்து விடுவேன்' என்று உறுதியாக உங்களுக்கு நீங்களே கட்டளை இட்டுக் கொண்டு படுத்துப் பாருங்கள். அடுத்த நாள் அலாரம் அடிப்பதற்கு முன்பே நீங்கள் எழுந்து விடுவீர்கள். அதற்குப் பிறகு தினசரி நாலரை மணிக்கு மேல் உறக்கம் வராது. தினசரி அதிகாலைத் துயில் எழுதல் பழக்கம் ஆகி அதுவே உங்கள் வழக்கமாகும். வாழ்க்கையை நிர்ண யிக்கும்.

நினைவு நல்லதாக இருந்தால் பார்க் கும் அனைத்துமே அதற்கேற்ப பரிபூரண மாகவே காட்சி தரும். நம் பாரதப் பிரத மர் நரேந்திரமோடி தன் சொற்பொழிவு ஒன்றில் குறிப்பிடுகிறார், நண்பர்களே ஒரு பொருளைப் பார்ப்பதற்கு தனித்தனி பார்வைகள் இருக்கின்றன. ஒரு பாத்திரத் தில் பாதி அளவு நீர் இருந்தால் உடன் பாடான எண்ணம் உள்ளவர்கள் பாதி அளவு நீர் உள்ளது என்பார்கள். எதிர் மறை எண்ணமுடையவர்களோ 'பாதி பாத்திரம் காலி' என்பார்கள். நான் இந்த இரண்டிலிருந்தும் வேறுபட்டவன். பாதி காற்றாலும் நிரம்பியுள்ளது என்பேன்.

நம் மனத்தின் எண்ணங்கள் தான் புற உலகின் காட்சிகளை, நிகழ்ச்சிகளை நிர்ணயிக்கின்றன.

(தொடரும்)

# செய்தித்துளிகள்

## வாக்குச் சீட்டுக்கள் அச்சிடல் நிறைவு

(கொழும்பு)

சகல மாவட்டங்களுக்கு மான வாக்குச் சீட்டுகள் அனைத்தும் அச்சிடப்பட்டு தேர் தல்கள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளதாக அரச அச்சகம் அறிவித்துள்ளது.

அந்தப் பணிகள் அனைத்தும் நேற்று முன்தினம் நிறை வடைந்ததாக அரச அச்சகர் கங்கானி கல்பனா லியனகே தெரிவித்துள்ளார்.

பொதுத் தேர்தலுக்காக கிட் டத்தட்ட ஒரு கோடியே 72 இல ட்சத்திற்கும் அதிகமான வாக் குச் சீட்டுக்கள் அச்சிடப்பட்டு ள்ளது.

வாக்குச் சீட்டுக்களை தேர் தல்கள் ஆணைக்குழுவிற்கு கையளித்த பின்னர் அரச அச்சகத்தில் வைத்து மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரிகள் மற்றும் அவரால் நியமிக்கப் பட்ட அதிகாரிக்கு கையளிக்கப் படும்.

தேர்தலுடன் தொடர்புடைய மற்றைய ஆவணங்களும் அச் சிட்டு முடிவடைந்து தேர்தல் கள் ஆணைக்குழுவிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

உத்தியோகபூர்வ வாக்குச் சீட்டுக்கள் அடுத்த வாரம் அஞ் சலுக்காக கையளிக்கப்பட வுள்ள நிலையில், அதன் பின் னர் தபால் திணைக்களத்தி னால் பகிர்ப்படவுள்ளன. (ஐ-4)

## மேல் மாகாணத்தில் பொலிஸார் குவிப்பு

(கொழும்பு)

பொது இடங்களில் முகக் கவசம் அணியாது செல்பவர் களை அடையாளம் காண் பதற்காக மேல் மாகாணத்தில் 2 ஆயிரத்துக்கும் மேற்பட்ட பொலிஸார் களமிறக்கப்பட்டு ள்ளதாக மேல் மாகாணத்துக் குப் பொறுப்பான சிரேஷ்ட பிரதிப் பொலிஸ்மா அதிபர் தேசபந்து தென்னக்கோன் தெரிவித்தார்.

இதுவரைமேல்மாகாணத்தில் முகக் கவசம் அணியாதிருந்த 2 ஆயிரத்து 731 பேர் தனிமைப் படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பிவைக்கப்பட்டனர். (ஐ-4)

## சிகரெட்டுக்களுடன் சீனப்பெண் கைது

(கொழும்பு)

சட்டவிரோதமான முறை யில் 14 ஆயிரம் சிகரெட்டுக்க ளுடன்55வயதுடையசீனப்பெண் ஒருவர் கைது செய்யப்பட்டார்.

பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவல்களுக்கு அமைய மேற்கொள்ளப்பட்ட சுற்றி வளைப்பொன்றிலேயே கடந்த 3 ஆம் திகதி குறித்த பெண் கைது செய்யப்பட் டார். (ஐ-4)

## சிறைச்சாலைகளில் தொலைபேசிகள் பறிமுதல்

(கொழும்பு)

கடந்த நான்கு வாரங்களில் 28 சிறைச்சாலைகளில் 1102 கைத்தொலைபேசிகள் கைப் பற்றப்பட்டுள்ளதாக சிறைச் சாலைகள் ஆணையாளர் தெரிவித்துள்ளார். அத்துடன் ஆயிரத்து 888 சிம் அட்டை களும் 283 சார்ஜ்களும் மற் றும் 1310 பற்றிகளும் கைப் பற்றப்பட்டு உள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (ஐ-4)

## சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | திருநெல்வேலி | மருதனார் மடம் | சாவகச்சேரி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 60 | 50 | 50 | 80 |
| உருளைக்கிழங்கு | 100 | 140 | 130 | 150 |
| பச்சைமிளகாய் | 120 | 120 | 180 | 200 |
| தக்காளி | 140 | 200 | 150 | 200 |
| மரவள்ளிக்கிழங்கு | 140 | 110 | 120 | 80 |
| கோவா | 160 | 130 | 120 | 140 |
| கரட் | 120 | 170 | 180 | 200 |
| பூசணி | 40 | 35 | 40 | 50 |
| புடோல் | 60 | 70 | 60 | 120 |
| வாழைக்காய் | 120 | 110 | 100 | 120 |
| சின்ன வெங்காயம் | 150 | 160 | 200-300 | 200 |
| பெரிய வெங்காயம் | 80 | 75 | 80 | 100 |
| பாகற்காய் | 200 | 220 | 240 | 200 |
| வெண்டிக்காய் | 80 | 100 | 60 | 120 |
| கருணைக் கிழங்கு | 120 | 140 | 120 | 120 |
| பயற்றங்காய் | 180 | 200 | 150 | 120 |
| லீக்ஸ் | 140 | 150 | 50 | 140 |
| பீற்றூட் | 100 | 110 | 100 | 100 |
| கறிமிளகாய் | 150 | 180 | 100 | 240 |
| முருங்கைக்காய் | 160 | 250 | 250 | 200 |
| போஞ்சி | 200 | 130 | 140 | 200 |
| கத்தரிதம்புள்ள | 50 | 50 | — | 60 |
| கீரை - 1பிடி | 40 | 25 | 20-30 | 30 |
| தேசிக்காய் | 300 | 300 | 250 | 300 |
| தேங்காய் (ஒன்று) | 70 | 45 | 40-70 | 50-80 |
| இராசவள்ளி | 300 | 220 | 300 | 280 |
| வெங்காயப்பூ | 300 | 240 | 250 | — |
| முள்ளங்கி | 100 | 100 | 60 | 120 |
| பொன்னாங்காணி | 40 | 25 | 40 | 40 |
| வல்லாரை | 15 | 50 | 30 | 30 |
| ஈரப்பலா | 50 | 60 | 50 | 50 |

## மாவின் விலை...

துள்ளது.

அதற்கமைய ஐந்து கிலோ கிராம் எடையுடைய கோதுமை மா பக்கற்றின் விலையை 5 ரூபாயால் அதிகரித்துள்ளதாக அந்த நிறுவனம் அறிவித்துள்ளது.

5 கிலோ கிராம் மா பக்கற்றினை பொதியிடுவதற்கான செலவு அதிகரித்துள்ளதால், விலை அதிகரிக்கப்பட்டுள்ளதாக பிறிமா நிறுவனம் குறிப்பிட்டுள்ளது. (ம-3)

## பல்கலை மாண...

கரமாக உயிரிழந்துள்ளார்.

பூநகரியில் நேற்றுக் காலை இந்த விபத்துச் சம்பவம் இடம்பெற்றது.

சம்பவத்தில் செம்மணியைச் சேர்ந்த மொறட்டுவப் பல்கலைக் கழக இறுதி வருட மாணவன் மோகன் ஆகாஷன் (வயது-23) என்பவரே உயிரிழந்தார்.

குறித்த மாணவன், நண்பர்களுடன் யாழ்ப்பாணத்திலிருந்து மோட்டார் சைக்கிளில் தென்னிலங்கை நோக்கிப் பயணித்தபோது, டிப்பர் வாகனத்துடன் மோதுண்டு விபத்து ஏற்பட்டுள்ளது. விபத்தில் சம்பவ இடத்திலேயே மாணவன் உயிரிழந்துள்ளார் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

உயிரிழந்த குறித்த மாணவன் பெற்றோருக்கு ஒரேயொரு மகன் என்பது குறிப்பிடத்தக்கது. (ம-3,60,100,114)

## கிளிநொச்சியில்...

பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

குறித்த விபத்து நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை 5 மணியளவில் இடம்பெற்றுள்ளதுடன் வியாபார நோக்கத்திற்காக வடிவமைக்கப்பட்ட முச்சக்கர மோட்டார் சைக்கிள் வாகனம் குறித்த விபத்தில் தீக்கிரையாகியுள்ளது.

டிப்பர் வாகனத்துடன் மோதுண்ட குறித்த மோட்டார் வாகனம் அந்த வீதியில் பயணித்த மற்றுமொரு மோட்டார் சைக்கிளுடனும் மோதுண்டுள்ளது.

இவ்விபத்தில், ஒருவர் உயிரிழந்த நிலையில் சடலம் கிளிநொச்சி வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்லப்பட்டுள்ளதாக பூநகரி பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இவ்விபத்து தொடர்பான மேலதிக விசாரணைகளை பூநகரிப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-3,100,114)

## படுகாயமடைந்த...

படுகாயமடைந்திருந்த ஒருவர் சிகிச்சை பலனின்றி நேற்று உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் - நீர்வேலி வடக்கு பகுதியில் கடந்த 24ஆம் திகதி நடந்த மோதல் சம்பவத்தில் படுகாயமடைந்து யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்றுவந்த நீர்வேலியைச் சேர்ந்த செல்வநாயகம் ஜெயசிறி (வயது-49) என்பவரே உயிரிழந்தவராவார்.

கடந்த சில தினங்களுக்கு முன்னர் இரு நபர்களுக்கு இடையில் ஏற்பட்ட முரண்பாடு, கைகலப்பாக மாறியதில், ஒருவரை ஏனையோர் கடுமையாகத் தாக்கினர்.

இதில் படுகாயமடைந்தவரை யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சைக்காக அருகில் இருந்த ஏனையவர்கள் அனுமதித்துள்ளனர்.

இவ்வாறு வைத்தியசாலையில் தொடர சிகிச்சை பெற்று வந்தவர் நேற்றுக் காலை உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில் சம்பவம் தொடர்பாக விசாரணைகளை ஆரம்பித்த பொலிஸார், உயிரிழந்த நபரை தாக்கியவரைக் கைது செய்துள்ளனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

இது தொடர்பான மரண விசாரணைகளை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர் மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,114)

## ஆவரங்காலில்...

ஞாயிற்றுக்கிழமை காலை இடம்பெற்ற இச் சம்பவத்தில் புத்தூர் நிலாவரைப் பகுதியைச் சேர்ந்த சகாதேவன் தர்மசீலன் (வயது-37) என்ற இரண்டு பிள்ளைகளின் தந்தையே சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

ஆவரங்கால் பகுதியிலுள்ள தோட்டத்துக்கு நீர் பாய்ச்சுவதற்காக சென்ற அவர் நீர் பாய்ச்சுவதற்கான ஆயத்த வேலைகளை செய்து கொண்டிருந்தபோது தவறி கிணற்றில் விழுந்ததாக கூறப்படுகிறது.

இச்சம்பவம் தொடர்பில் அச்சுவேலி பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர். (ம-3,60)

## டிப்பரின் சுமைப்...

நிலையத்தில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

டிப்பர் வாகனம் பழுது பார்த்துக் கொண்டிருந்த குறித்த நபர் மீது டிப்பர் வாகனத்தின் சுமைப்பெட்டி விழுந்ததில் அவர் உடல் நசுங்கி உயிரிழந்துள்ளார்.

குறித்த சம்பவம் நேற்று ஞாயிற்றுக் கிழமை மாலை இடம்பெற்ற நிலையில், இச்சம்பவத்தில் சுமைப்பெட்டியை 'ஜக்' மூலம் தூக்கிவிட்டு அதன் கீழிருந்து பழுது பார்த்துக் கொண்டிருந்தபோது 'ஜக்' நழுவி சுமைப்பெட்டி குறித்த நபர்மீது விழுந்துள்ளது.

இச்சம்பவத்தில் கிளிநொச்சி ஆனந்தபுரத்தைச் சேர்ந்த சின்னராசா லிகிந்தன் (வயது-41) என்பவரே மரணமானவராவார்.

இது தொடர்பான மரண விசாரணையை யாழ்.போதனா வைத்தியசாலையின் திடீர மரண விசாரணை அதிகாரி நமசிவாயம் பிறேம்குமார் மேற்கொண்டார். (ம-3,18,60,78)

## சிறுவர் இல்லத்...

குறித்த சம்பவம் தொடர்பாக தெரியவருகையில்,

இன்றைய தினம் பாடசாலைகள் ஆரம்பிக்கப்படவுள்ள நிலையில் அதற்கான ஆயத்தப் பணிகள் இல்லத்தினால் நேற்று மேற்கொள்ளப்பட்டிருந்தது. இதன் போது குறித்த மாணவியை நீண்ட நேரம் காணாத நிலையில் இல்லத்தில் இருந்தவர்கள் அவரைத் தேடியுள்ளனர்.

இதன்போது விடுதியின் முதலாவது மாடியில் அமைந்துள்ள குளியலறையில் குறித்த மாணவி சடலமாக இருப்பது அவதானிக்கப்பட்டது.

சம்பவம் தொடர்பாக வவுனியா பொலிஸாருக்கு தகவல் தெரிவிக்கப்பட்டது. சம்பவ இடத்திற்கு விரைந்த வவுனியா தலைமை பொலிஸ் பொறுப்பதிகாரி மான வடு தலைமையிலான குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்

சம்பவத்தில் ராஜி செல்வராணி (வயது - 17) என்ற மாணவியே சடலமாக மீட்கப்பட்டுள்ளதுடன், இவர் வவுனியா கோவில் புதுக்குளம் பகுதியில் அமைந்துள்ள பாடசாலையில் கல்வி கற்று வந்துள்ளார்.

மேலும் இவ்வருடம் இடம்பெறவிருந்த க.பொ.த சாதாரண பரீட்சைக்கு தோற்ற விருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம-3,299)

## வடக்கு முழு...

கரும்புலிகள் நாளை நினைவேந்துவோர் எனச் சந்தேகிக்கப்படும் அரசியல்வாதிகள் துருவித் துருவி விசாரிக்கப்பட்டதுடன், கரும்புலிகள் நாளோடு தொடர்பில்லாத பல்வேறு நிகழ்வுகளுக்கும் நேற்று படையினரால் தடை விதிக்கப்பட்டது. (ம-3)

## சிவாஜிலிங்கம்...

பிணையில் விடுதலை செய்யப்பட்டுள்ளார்.

பருத்தித்துறை நீதவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதையடுத்து அவருக்குப் பிணை வழங்கப்பட்டது.

யாழ். வல்வெட்டித்துறையிலுள்ள வீட்டிலிருந்தபோது நேற்றுக் காலை சிவாஜிலிங்கம் பொலிஸாரால் கைது செய்யப்பட்டிருந்தார்.

வழக்கொன்றின் பிடியாணைக்கு அமையவே அவர் கைது செய்யப்பட்டதாகப் பொலிஸ் ஊடகப் பேச்சாளரும், சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகருமான ஜாலிய சேனாரத்ன தெரிவித்திருந்தமையும் குறிப்பிடத்தக்கது. (ம-3,33,60,101)

## கல்வி நடவடிக்...

பட்ட தீர்மானத்திற்கு அமைய, இரண்டாம் கட்டமாக அனைத்து பாடசாலைகளின் கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

அதனடிப்படையில் தரம் 05, 11 மற்றும் தரம் 13 மாணவர்களுக்கான கல்வி நடவடிக்கைகள் இன்று ஆரம்பமாகவுள்ளன.

இன்றைய தினம் அனைத்து ஆசிரியர்களும் பாடசாலைகளுக்கு சமுகமளிக்க வேண்டும் எனவும் கற்பித்தலுக்கு முன்னுரிமை வழங்க வேண்டும் எனவும் கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது.

தரம் 5 மற்றும் தரம் 11 மாணவர்களுக்கு காலை 7.30 மணி முதல் 1.30 மணி வரை கல்வி நடவடிக்கைகள் நடைபெறவுள்ளதுடன், தரம் 13 மாணவர்களுக்கக காலை 7.30 மணி முதல் பிற்பகல் 3.30 மணி வரை கல்வி நடவடிக்கைகள் இடம் பெறும் என கல்வி அமைச்சு தெரிவித்துள்ளது. (ம-3)

## யாழில்...

முடித்து வீடு திரும்பிக் கொண்டிருந்த நிலையிலேயே வாள்வெட்டு கும்பல் அவர் மீத தாக்குதல் நடத்தியுள்ளதாக கூறப்படுகின்றது. (ம-3,32)

## பொருத்தமற்ற...

மக்கள் பேரவை நேற்றைய தினம் விடுத்த விசேட அறிக்கையில் கேட்டுள்ளது.

தமிழ் மக்கள் பேரவை விடுத்த விசேட அறிக்கையின் முழுவிபரம் வருமாறு,

தமிழ்மக்கள் தமது அரசியல் அபிலாசைகளையும் உரிமைகளையும் பெற்றுக்கொள்ளும் பயணத்தில் வார்த்தைகளால் வர்ணிக்க முடியாத பல இன்னல்களையும் இழப்புகளையும் சந்தித்த மக்கள் என்ற வகையிலும் எமது பிரச்சினைகள் தீர்க்கப்படாது 24

வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532

20 ரூபாயில் 1 இலட்சம் வெல்லப்பட்டுள்ளது
கடந்த 2020.07.01ம் திகதி அதிர்ஷ்டம் பார்க்கப்பட்ட DLBயின் 'அதகோடிபதி' சீட்டிழுப்பில் 3 இலக்கங்களும் ஆங்கில எழுத்தும் பொருந்தியதில் ஒரு இலட்சம் ரூபாய் வெல்லப்பட்டுள்ளது.
பூபாலசிங்கம் ரதிமதனா
பிரதான முகவர், பருத்தித்துறை. 09/9112

செவன
திகதி 05/07/2020
சீட்டிழுப்பு இலக்கம் 275
D 05 29 62 69
NATIONAL LOTTERIES BOARD

கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 05-07-2020
சீட்டிழுப்பு இலக்கம் 2469
Y 01 17 53 79
தேசிய லொத்தர் சபை

தன நிதானய
திகதி - 05.07.2020
சீட்டிழுப்பு இலக்கம் - 287
W 20 65 72 75
NATIONAL LOTTERIES BOARD

மஹஜன சம்பத
திகதி 2020/07/05
சீட்டிழுப்பு இலக்கம் 4174
K 8 4 9 1 7 2
தேசிய லொத்தர் சபை

அத கோடிபதி ADA KOTIPATHI
சீட்டிழுப்பு இல: 971
வர்ணம் : பச்சை
சீட்டிழுப்பு திகதி: 2020.07.05
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 67,739,725/-
வெற்றி இலக்கங்கள் 14 28 31 38 K

ஜய
சீட்டிழுப்பு வாரம் 594
வர்ணம் மஞ்சள்
திகதி 05.07.2020
D 11 27 31 49
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 76,513,035
தொ.பே: 0112 333 546/47
Web: www.dlb.lk

ராசி
வெற்றி வாரம் 2852
வர்ணம் ஊதா
திகதி 05.07.2020
வெற்றி இலக்கங்கள் 17 26 29 57
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ.2,000,000
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1170
சீட்டிழுப்பு திகதி 05.07.2020 ஞாயிற்றுக்கிழமை
D 03 32 36 75
அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ. 51,181,992
தொ.பே: 0112 333 546/47 Web: www.dlb.lk

# பொருத்தமற்றவர்களை.......

தொடர்ந்து கொண்டிருக்கின்ற இந்த நிலையிலும் நமக்கென்று ஒரு தூய, ஒற்றுமையான அரசியல் கலாச்சாரத்தை ஏற்படுத்த எடுக்கப்படும் முயற்சிகள் பல இன்னல்களைச் சந்தித்து வருகின்றன.

தேர்தல் அரசியலில் குதித்து நிற்பவர்களின் பிரிவுகள், முரண்பாடுகள், சுயநலப் போக்குகள், பேச்சுக்கள் தொடர்பில் மக்கள் சலிப்பும் விரக்தியும் அடைந்திருக்கின்றார்கள். இவை மக்களிடையே பகைமை உணர்வை வளர்த்து எமது பயணத்தை திசை மாற்றிவிடுமோ என்ற கவலையும் ஏற்பட்டிருக்கின்றது.

போதிய அளவு அரசியல் அனுபவமும் முதிர்ச்சியும் உள்ள ஒரு தேசிய இனமாகிய நாம் சில விடயங்கள் சம்பந்தமாக சிந்திக்க வேண்டிய கட்டாய நிலையில் இருக்கின்றோம். அரசியல்வாதிகளை விமர்சிக்க முன் பொது மக்களாகிய நாம் எம்மை சீர் செய்து கொள்ள முடியுமா? என்று சிந்திப்பது பயனுடையதாக அமையும்.

வருமானத்திற்கும் சலுகைகளுக்குமாக நாம் ஒரு அரசியல்வாதிக்கு வாக்களிப்போமாக இருந்தால் அவரை இலஞ்சம் வாங்க வேண்டாம் என்றோ, சலுகைகளுக்கு விலை போகவேண்டாம் என்றோ கேட்டுக்கொள்ளும் தார்மீக உரிமை நமக்கு இல்லாமல் போய்விடும்.

பொருத்தமற்ற அரசியல் பிரதிநிதிகளை நாமே தெரிவு செய்துவிட்டு அல்லும் பகலும் அவர்களை விமர்சித்துக் கொண்டிருப்பதால் ஆகப்போவது எதுவுமில்லை. புனிதமான, கொள்கை அடிப்படையிலான அரசியல் பாதையை வடிவமைக்க வேண்டிய நொந்து போன ஒரு இனம் சாக்கடை அரசியலை வளர்த்துவிட்டு, பின் அதிலிருந்து தூர விலகி நின்று, இது சாக்கடை அரசியல் என்று கூச்சலிடுவது அர்த்தமற்றது.

பொருத்தமானவர்களைத் தெரிவு செய்யும் சந்தர்ப்பத்தை நழுவவிட்டு, வாக்களிக்காமல் இருந்துவிட்டு பின் தெரிவு செய்யப்படும் அரசியல் பிரதிநிதிகளை விமர்சிப்பதும் ஒரு பொறுப்பற்ற செயற்பாடாகவே கருத வேண்டியிருக்கின்றது.

எனவே எமது அரசியலை தூய்மைப்படுத்த பொருத்தமானவர்களைத் தெரிவு செய்ய வேண்டும் என்ற பாரிய பொறுப்பு என் முன்னே எழுந்து நிற்கின்றது.

பலவகையான போராட்டங்களினூடும் படிப்பினைகளினூடும் பயணித்த எம் தமிழ் மக்களுக்கு பொருத்தமான பிரதிநிதிகளை நன்கு சிந்தித்து தெரிவு செய்வது கடினமான தொன்றாக இருக்காது. இம்முறை என்றுமில்லாதவாறு எம்முன்னே பல தெரிவுகள் விதைக்கப்பட்டிருக்கின்றன.

தூய அரசியலை வடிவமைக்க பொருத்தமானவர்களை எதனை வைத்து தெரிவு செய்வது? என்று ஒரு கேள்வி எழுகின்றது.

தனிமனித ஒழுக்கம், நேர்மை, இலஞ்சத்துக்கும் சலுகைகளுக்கும் விலை போகாத தைரியம், தமிழ் மக்களின் அடிப்படை நிலைப்பாடுகளை தெளிவாக வலியுறுத்துவதோடு அதை முன்னின்று செய்யும் தற்துணிவு, நேச சக்திகளை அரவணைத்து ஒற்றுமைப்படுத்தும் ஆளுமை, வெளிப்படைத்தனமை, குற்றச் சாட்டுக்கள் எழும்பொழுது பொறுப்புக் கூறும் பெருந்தன்மை, தவறுகள் இருப்பின் அதனை ஏற்று திருத்திக் கொள்ள முயலும் மனப்பக்குவம், திறமை, எமது இலக்கு நோக்கிய நகர்வுகளை துறைசார் வல்லுநர்களையும் இணைத்து திட்டமிடும் ஆற்றல், சகோதர (சக தமிழ்த் தேசிய) கட்சிகளின் நல்ல முயற்சிகளை பாராட்டி ஊக்கப்படுத்தும் பெருந்தன்மை போன்ற நல்ல இயல்புகளோடு முக்கியமாக தமிழ் மக்களின் நீண்ட கால அரசியல் அபிலாசைகளை அடைவதற்காக கொள்கைப்பற்றுடன் செயற்படக் கூடியவர்களாகவும் உடைய பிரதிநிதிகளை அடையாளப்படுத்தி தெரிவு செய்ய முயலுவோம்.

இவ்வாறானவர்கள் தேர்தலில் நிற்கின்றார்களா? என்ற சிந்தனை எம்மனதில் எழக் கூடும். ஆனால் அவ்வாறானவர்களை அடையாளப்படுத்தும முயற்சியை நாம் கை விட்டுவிடமுடியாது. பொருத்தமானவர்களை தெரிவு செய்வதுடன் மட்டும் நின்றுவிடாது. அவர்களை சரியான திசையில் வழி நடத்தும் பொறுப்பும் பொது மக்களாகிய எங்களுக்கு இருக்கின்றது.

எம்மிடையே பல சிந்தனை வேறுபாடுகளும்கருத்துவேறுபாடுகளும் இருக்கலாம். ஒருவரின் சிந்தனையும் தீர்மானமும் போன்று இன்னொருவரின் சிந்தனையும் முடிவும் இருக்காது, இது இயற்கை. இன்னொருவரின் சிந்தனையையும்,முடிவுகளையும், அதற்கான அவர் சார்ந்த காரணங்களையும் விளங்கிக் கொள்ள முயல்வது பயன்தரும்.

எமது சிந்தனையை வலுக்கட்டாயமாக இன்னொருவரின் மீது திணிக்க முயல்வதோ, கோபம் கொள்வதோ அர்த்தமற்றது. ஆனால் எமது நீண்டகால அபிலாசைகளை அடைவதற்காக எமது அடிப்படைகளினின்று விலகாது,வேறுபாடுகளை மறந்து கை கோர்க்க வேண்டியதும் அவசியமாகின்றது.

எம்மிடையே கருத்து வேறுபாடுகள் இருந்தாலும் எமது பொது நோக்கங்களுக்காக சகோதர (சக தமிழ்த் தேசிய) கட்சிகளுடன் கை கோர்க்க வேண்டிய கட்டாயம் இருக்கின்றது. எனவே "இனிய உளவாக இன்னாத கூறல், கனியிருப்பக் காய்கவர்ந் தற்று" என்ற வள்ளுவன் வாக்கிற்கிணங்க எம்மிடையே பகை வளர்க்கும் வார்த்தைப் பிரயோகங்களையும், கருத்துக்களையும் தவிர்த்து பொருத்தமானவர்களை எமது பிரதிநிதிகள் ஆக்குவதில் எமது கவனத்தை குவிப்போம் என அந்த அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-3)


வங்கியில் அடகு வைத்த நகைகளை
மீட்க முடியவில்லையா? நாம் மீட்டுத் தருகின்றோம்

## றாஜ் நகை மாடம்

யாழ்ப்பாணம், நெல்லியடி, பருத்தித்துறை, சாவகச்சேரி, கொடிகாமம், கிளிநொச்சி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, சங்கானை, உடுப்பிட்டி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், திருகோணமலை ஆகிய பகுதிகளில்

வங்கியில் அடகு வைக்கப்பட்ட அடகு நகைகளை நகைக்கேற்ப பெறுமதியைப் பார்த்து வங்கியிலேயே பணத்தை தந்து வாங்கப்படும்.

தொடர்பு: றாஜ் - 077 679 6623 (3211)

## இந்திய சாஸ்திரியார் வருகை

ஓம் சக்தி அருள் வாக்கு பெற்ற பரம்பரை ஜோதிடர்
சிங்கப்பூர்,மலேசியா மற்றும் பல நாடுகளில் புகழ் பெற்ற
**இரத்தினசாமி** அவர்கள்
ஜாதகம், கைரேகை, எண்கணிதம்
திருமணத்தடை, கல்வித்தடை, வெளிநாடு செல்லத்தடை மற்றும் குழந்தைப் பாக்கியம், காதலில் தோல்வி, குடும்பத்தில் பிரச்சினை, தொழில் முன்னேற்றமின்மை, புதிய தொழில் தொடங்க மற்றும் எந்தப் பிரச்சினைக்கும் தொடர்பு கொள்ளவும்.

முன்பதிவுக்கு: 071 574 8358, 071 392 9703, 076 682 7368
இல.101, Kandy Rd, jaffna (யாழ்.நீதிமன்றத்திற்கு அருகில்).



Inner Circle
## Job! Job! Job! .....
## 076 770 7759

நீங்கள் O/L / A/L பயின்றவரா ?
இவ் இலக்கத்துக்கு அழைத்து உங்கள் பதிவுகளை உடன் பதிவு செய்க. யாழ்ப்பாணம், வவுனியா, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு மாவட்டங்களை சேர்ந்தவர்களுக்கு, முதல் 40 பேருக்கு முன்னுரிமை.

- Administration
- Supervisor
- Coordinator
- Assistant Managers
- Managers

அனுபவம் இல்லையா? தங்குமிட வசதியுடன் பயிற்சி வழங்கப்படும்.
பயிற்சிக் காலத்தில் 24,500/= பின்னர் குறைந்தது 45,000/=

The Inner Circle ( Pvt ) Ltd
100/3, Manipay Road ( முட்டாசுகடைச் சந்தி ), Jaffna. (3209)

மீண்டும்
## வெளிநாடுகளுக்கான துரித தபால்கள் பொதிகள் சேவை

அசாதாரண சூழ்நிலை காரணமாக முடங்கியிருந்த
எமது சேவை மீண்டும் வழமைபோல்
அனைத்து நாடுகளுக்கும்
100% பாதுகாப்புடன் நடைபெறுகின்றது.

### அருள் குளோபல் எக்ஸ்பிறஸ்

இல.01, பிறவுண் வீதி, நாவலர் வீதிச் சந்தி,
யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 6113

### அருள்ஸ் (பிறைவேற்) லிமிட்டெட்

இல.10, புதிய மாநகர சபை கட்டிடத் தொகுதி,
கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்
தொ.பே:- 021 222 3536

## காணி விற்பனைக்கு

பலாலி வீதி, ராஜா பிளாசா அருகாமையில் உள்ள ஒழுங்கையில், Water Board காணி முன்பாக காணி விற்பனைக்குண்டு. பலாலி வீதிக்கு 500M, திருநெல்வேலி சந்திக்கு 1 1/2 கிலோ மீற்றர் தூரம். (3215)

பரப்பு 20 இலட்சம். தரகர்கள் வேண்டாம்.
தொடர்புக்கு - 077 325 9934

## சிறுநீரகம் தேவை

சிறுநீரக நோயால் பாதிக்கப்பட்ட ஒருவருக்கு, O+ இரத்த வகையைச் சேர்ந்தவரின் சிறுநீரகம் தேவைப் படுகிறது. 45 வயதிற்குட்பட்டவர்களாக இருத்தல் வேண்டும். உதவ முன்வருவோருக்கு சன்மானம் வழங்கப்படும்.

Tel : 077 630 7106
077 613 2904 (C-9843)

## விரைவு பொதிகள் சேவை
## V2 TRAVELS

வழமைபோல வெளிநாடுகளுக்கு பொதிகளை எமக்கூடாக அனுப்பிவைக்க முடியும்

எமது நேரடிக்கிளைகள்
• யாழ்ப்பாணம் • கிளிநொச்சி • சாவகச்சேரி
• நெல்லியடி • கொடிகாமம் • திருகோணமலை
• புதுக்குடியிருப்பு • சுன்னாகம் • மானிப்பாய்
• மருதங்கேணி • பருத்தித்துறை • வல்வெட்டித்துறை

0768226240 (C-9624)

பயிற்சியுடன் உடனடி **வேலை வாய்ப்பு**
தகுதி - 30 வயதிற்கு உட்பட்டவர்கள் - O/L, A/L எடுத்தவர்கள் விரும்பத்தக்கது (இருபாலாரும்)

விமானப் பயணச்சீட்டுக்கள்
விரைவுப் பொதிகள் சேவை
விசா சேவைகள் V2 TRAVELS

எமது கிளைகள்: கிளிநொச்சி, சாவகச்சேரி, நெல்லியடி, கொடிகாமம், கோப்பாய், சுன்னாகம், மானிப்பாய், பருத்தித்துறை, வல்வெட்டித்துறை, புத்தூர்

• பயிற்சிக்கால ஊக்கத்தொகை -10'000/-
• பயிற்சியின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
• பயிற்சியின் முடிவில் வேலைவாய்ப்பு வழங்கப்படும்
• ஆரம்ப சம்பளம் -15'000/- (C-9829)

16/1, மாநகரசபைக்கட்டடம் கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
0768226243 v2vacancies@gmail.com


## 41ம் நாள் அந்தியேட்டி கிரியை அழைப்பு

மண்ணில் 04 - 10 - 1969



விண்ணில் 29 - 05 - 2020

கடந்த 29.05.2020 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

அமரர்
## அரசன் செல்வராசா [செல்வன்]

அவர்களின் சிவபதப்பேறு குறித்த அந்தியேட்டிக் கிரியைகள் நேற்று (05.07.2020) ஞாயிற்றுக்கிழமை அன்னாரின் இல்லத்தில் வீட்டுக் கிருத்தியமும் சபீண்டிகரமும் செய்யப்பட்டது. எதிர்வரும் 08.07.2020 புதன்கிழமை அன்று கீரிமலை புனித தீர்த்தக்கரையில் கிரியைகள் இடம்பெற்று அன்று காலை 10.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெறும் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளுமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

" வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்
தெய்வத்துள் வைக்கப்படும். " (3210)

பாடசாலை வீதி, இமையாணன் மேற்கு,
உடுப்பிட்டி, யாழ்ப்பாணம்.

தகவல் -குடும்பத்தினர்
076 949 3883 , 077 100 0031

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 06.07.2020 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.